தொகுதி 2 நோக்கு 4
நவம்பர் - டிசம்பர் 2003

சமாதான நோக்கு

விசேட இதழ்

சமாதானமும், மனித உரிமைகளும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



கண்ணுக்கு எட்டும் தூரத்தில்.....

இப்படத்தை பார்க்கும் போது உங்கள் எண்ணங்களில்

தோன்றுவதை கவிதையாக எழுதி, எமது முகவரிக்கு அனுப்பி

வையுங்கள். அடுத்துவரும் இதழ்களில் பிரசுரிப்போம்.

வந்துடைந்த கவிதையில்.....



ஏழெட்டு தலையை விட–
எட்டி நீற்கின்றனர்..
நீரைத்தேடி. கிணற்றினை சுற்றி...
குணிந்த தலைகள்..
என்று நிமிரும்.....! அன்று....
மழை பொழியுமா?

ரா.ரஞ்சனி
கிரிமடுவத்த, கந்தேகெதர

"சமாதான நோக்கு" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவின் வெளியீடு. மா.கொ.நி பொதுமக்கள் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும். அதனை பலப்படுத்தலும் அவசியமென கருதுகின்றது. முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மா.கொ. நி ஆட்சிமுறை மற்றும் மோதல் தவிர்ப்புக் குறித்தான பிரச்சினைகளில் அவதானம் செலுத்துகிறது. "சமாதான நோக்கு" வெளியீடு இன நெருக்கடியைத் தீர்க்க பங்களிப்புச் செய்யும் பிரச்சினைகள் குறித்தும். பொது மக்கள் மத்தியில் ஒரு கூட்டான செயற்பாட்டை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு...

ஒருங்கிணைப்பாளர்,
முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவு.
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.
32/3, பிளவர் வீதி, கொழும்பு - 07
தொ.பே: 011–2565304/6, பக்ஸ் : 4–714460,
இ–மெயில்: cpa@sri.lanka.net
வெப்தளம் : www.cpalanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுக் கண்ணோட்டம்	2	
	26	தென்னாபிரிக்காவின் உண்மைகாண், மீளிணக்க ஆணைக்குழு(TRC)
என்.செல்வகுமாரனின் நேர்காணல்	5	
	28	மனித உரிமைகளும், நாட்டின் எதிர்காலமும்
அரசியலமைப்பு குறித்த மாற்றுச்சிந்தனை....	9	
	31	விசாரணைகள் செய்ய முடியுமே தவிர, அது தொடர்பான தீர்ப்புகள் நடைமுறைப்படுத்த முடியாது....
கேதீஸ்வரன் லோகநாதனின் நேர்காணல்	14	
	32	அழுவாரற்ற பிணமும், ஆற்றுவாரற்ற கடலையும்...
சகல தரப்பிலும் எமது உரிமைகளின் குரல் எழுப்பப்பட வேண்டும்...	18	
	35	வடக்கு கிழக்கு முஸ்லீம் தனித்துவம் : பொன்னம்பலம் இராமநாதன் முதல் அமிர்தலிங்கம் வரை
இலங்கையின் சமாதானச் செயல்முறை : முரண்பாட்டு நிலைமாற்றக்கருவியாக மனித உரிமைகளின் முக்கியத்துவம்	26	
	40	இலங்கையில் காணாமல் போதல்களின் தோற்றப்பாடு
தமிழ்–முஸ்லீம் புரிந்துணர்வுக்கான புதிய முயற்சியும், வழிமுறைகளும்	23	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதான நோக்கு
குரல் 3, நோக்கு 4
நவம்பர் - டிசம்பர் 2003

மாற்றுக் கண்ணோட்டம்

மனித உரிமைகள் : சமாதானச் செயல்முறையின் பிரிக்கமுடியாத ஓர் அங்கம்

மனித உரிமைகள் சமாதானச் செயல்முறைக்கு நடுநாயகமான முக்கியத்துவம் கொண்டதாகும். சமாதனாச் செயல்முறைக்கான பொதுமக்கள் ஆதரவும், சட்டநிலைத் தகவும் மற்றும் அதனுள் செய்யப்படும் உடன்படிக்கைகளும் இறுதியில் யுத்தத்தின் முடிவின் விளைவாக மனித உரிமைகள் மற்றும் அதன் பாதுகாப்பு வழிமுறை அமைவுகளின் பாத்திரம் குறித்த பொதுமக்களின் கருத்துணர்வுகளில் தங்கி நிற்பவையாகும்.

தூரதிஷ்டவசமாக யுத்தம் இல்லை சமாதானமும் இல்லை என்ற காலப்பகுதியில் கப்பம், சிறுவர்களைப் பலாத்காரமாகப் படைகளில் சேர்த்தல் மற்றும் அரசியல் கொலைகள் என்பவை போன்ற மனித உரிமை மீறல்கள் ஒரு புறமும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் துயரங்கள் மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருத்தல் என்பவை மறுபுறமுமாக தொடர்ந்த வண்ணமுள்ளன. புனர்வாழ்வு மற்றும் பொருளாதார அபிவிருத்தி மூலம் வழமை நிலைக்கு மீளும் செயல்முறை மற்றும் உள்ளமைய அரசியல் பிரச்சினைகளை எதிர்காலத்திற்கு ஒத்திவைத்தல் போன்றவற்றிலான அசைக்கமுடியாத நம்பிக்கை மனித உரிமைகளில் கவனம் செலுத்துவதும் இப்போதைக்கு உகந்ததல்ல என்ற கருத்தையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய ஒரு கவனம் சமாதானச் செல்முறையை ஒரு தனிப்பிரச்சினைக்கு மட்டுப்படுத்தி, அதைக் குழப்பக்கூடியதென்றும் மற்றும் காலம் கனிவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் தவறான அணுகுமுறை என்றும் கருதப்பட்டது. இதன் விளைவாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதோடு, இவை தற்போதைய சமாதானச் செயல்முறையின் முதலாம் கட்டத்தின் குறைபாடுகள் சம்பந்தமான முக்கிய உதாரணம் எனவும் கொள்ளப்படுகின்றது.

பேச்சுவார்த்தை நிகழ்ச்சிநிரலில் மனித உரிமைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் பயனுறுதியுள்ள பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வழிமுறையமைப்புகள் மூலம் உரிமைகளை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்புணர்வு அறவே போதாத நிலையிலிருந்தது. பிரத்தியேகமாக சிவில் சமூக அழுத்தங்களின் காரணமாக சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமாகிய திரு. இயன் மார்ட்டின் இரு தரப்பினராலும் தமது மனித உரிமைகள் மதியுரைஞராக இனம் காணப்பட்டபோதிலும், மேலே குறிப்பிடப்பட்ட கண்ணோட்டம் தொடர்ச்சியாக நிலவியதன் காரணமாக அவரின் பங்களிப்பு

ம.ப.பா

ஆசிரியர் : பா.விஜயசாந்தன்
ஆசிரியர் குழு : பாக்கியசோதி சரவணமுத்து,
கேதீஸ்வரன் லோகநாதன், ரொஹான் எதிரிசிங்க, சுனந்த தேசப்பிரிய

சமாதான நோக்கு
24/3, 28வது ஒழுங்கை, ஒவ் பிளவர் வீதி, கொழும்பு 7.
தொ.பே : 011-2565304/6, பக்ஸ் : 4-714460

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இரு தரப்பினரிடையிலும் இவ்வாறு செய்வதற்கான உடன்படிக்கையொன்று இல்லையெனில் எந்த மனித உரிமைகள் அமைப்பும் முழுச்செயல் முறையையும் ஆபத்துக்குள்ளாக்காத வகையில், மனித உரிமை மீறல் குற்றவாளிகளை "அம்பலப்படுத்தி அவர்களை வெட்கித் தலை குனிய வைப்பதை"த் தவிர வேறெதையும் சாதிக்க முடியாது. முக்கிய நலன்பிரதிநிதிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோருக்கெதிராகத் தண்டனைகள் விதிக்கப்படுவது சம்பந்தமான அர்ப்பணிப்புணர்வற்று இருக்கையில் இது தார்மீக மற்றும் அரசியல் அழுத்தங்களை மாத்திரமே பிரயோகிக்கக் கூடியதாகும். அதே வேளையில் சிவிலியன்கள் மத்தியில் கண்காணிப்பு அமைப்பின் நம்புதகவு குறித்தும், அதன் அர்ப்பணிப்புணர்வு, பயனுறுதி மற்றும் நேர்மை குறித்த விசுவாசம் ஏற்படுதல் வேண்டும். அனைத்துக்கும் மேலாக, அவர்கள் இந்த அமைப்பிடம் பாதுகாப்பு உணர்வுடன் செல்லக்கூடிய நிலை இருத்தல் வேண்டும். மீறல் ஒன்று குறித்து முறையீடு செய்வதன் விளைவாக மனித உரிமை மீறல் குற்றவாளிகளை விட, தாமே தண்டிக்கப்படுவோமென்ற உணர்வு சிவிலியன்கள் மத்தியில் இருக்குமானால், இந்த முழு நடவடிக்கையினாலும் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை. இந்த விடயத்தில் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரைப் பாதுகாக்கும் நம்புதகவுள்ள வழிமுறையமைப்புகள் இன்றியமையாதவையாகும்.

ஆகவே, ஒரு தனியான மனித உரிமைப் புரிந்துணர்வு உடன்படிக்கை அவசியப்படும் அதே வேளையில் அது உள்;ர் மற்றும் சர்வதேச நிபுணர்களின் பங்களிப்பைக் கொண்ட ஒன்றாக இருக்கவேண்டுமென்பதும் அவசியமாகும். தற்போதுள்ள நம்பிக்கையீனம் மற்றும் பாதுகாப்பினை உணர்வு மட்டங்கள் சமாதானச் செயல்முறை மேலும் சர்வதேச மயமாவதற்கே வழிவகுக்கின்றன. மனித உரிமைகள் விடயப்பரப்பில் மாற்றுவழியொன்று இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் இரு காரணிகள் குறித்துக் கவனம் செலுத்துவது அவசியமாகும். முதலாவது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முந்திய காலப்பகுதியிலான மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்ததாகும். இரண்டாவது நிலைமாற்றக்கால நீதி மற்றும் மீளிணக்கம் சம்பந்தமானதாகும்.

மனித உரிமைகளைச் சமாதானச் செயல்முறையுள் ஒன்றினைப்பதிலான ஒப்பீட்டளவிலான தோல்வி குறித்துப் பாரதூரமான அளவில் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருப்பது உள்நாட்டின் இடம்பெயர்ந்த நபர்களின் நிலைமையாகும். இவர்களின் கவலைக்குரிய நிலை சம்பந்தமான ஒரு மேலும் அதிக அளவிலான உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை அவர்களின் உரித்துக்கான அவர்கள் ஏற்றுக் கொள்வதற்குச் சந்தேகமின்றி வழிவகுக்கும். இது கூடுதலான பால்நிலைக் கூருணர்வுக்கும், இட்டுச்செல்லும். இது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரில் பெரும்பாலானோராகவிருக்கும் பெண்களின் பிரச்சினைகள் மற்றும் கரிசனைக் கவலைகளுக்குத தீர்வு காண்பதாக அமையும். இவை அகதி முகாம்களில் நிலைமைகளிலிருந்து காணி மற்றும சொத்து உரிமைகள் ஊடாக, ஜீவனோபாயங்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த பிரச்சினைகள் வரை வியாபிக்கும் விடயங்களாக அமைந்துள்ளன. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களினதும், திரும்பிவருவோரினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், யுத்தத்தின் தீவிர பாதிப்புகளை அனுபவித்த மக்களிடன் வாழ்க்கையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதும் சமாதானச் செயல்முறையிடன் வெற்றியைக் காட்டும் முக்கியமான காட்டியாக அமையும்.

நிலைமாற்றக்கால நீதி மற்றும் மீளிணக்கம் குறித்த பிரச்சினை சமாதானத்துக்கும், ஐக்கியத்துக்கும் நடுநாயகமான முக்கியத்துவம் கொண்டவையாகும். ஆயினும் அது பேச்சுவார்த்தைகளின் மட்டத்தில் இனித்தான் வரவேண்டிய நிலை உள்ளது அது ஒன்றும் ஆச்சரியமூட்டுவதல்ல. அது எதிர்காலத்திலும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நடைபெறும் போலத் தோன்றவில்லை. இதற்கான நியாய விளக்கம் இப்பொழுது இந்தப் பிரச்சினையைக் கையாளுவது மிகவும் நேரகாலத்தோடு என்பதாகவிருக்கலாம். அல்லது அதற்கான காலம் மிகவும் பிந்திவிட்டது என்பதாகவிருக்கலாம். இதன் விளைவாக, இதற்கான பொறுப்பு சிவில் சமூகத்துக்கும், மற்றும் ஏனைய மட்.டங்களிலும், தடங்களிலுமான சமாதானச் செயல்முறையைச் சார்ந்ததாகின்றது. நிலைமாற்றக்கால நீதியின் வழிமுறைகள், மற்றும் கடந்த காலத்தைக் கையாளுதல் என்பவற்றுக்கு நாடு பரந்த ரீதியிலான உரையாடலொன்று ஆரம்பிக்கப்படுதல் அவசியமாகும். இத்தகைய உரையாடல் நேர்மையான வழியில் நிலைமாற்றக்கால நீதிச்செயல்முறை மற்றும் மீளிணக்கம் என்பவற்றை இலகுபடுத்தக் கூடிய மிகச்சிறந்த நிறுவனங்களையும், நடவடிக்கை முறைகளையும் இனங்காணுதல் வேண்டும்.

சமாதானச் செயல்முறையின் அடுத்த கட்டத்தை நாம் நெருங்குதவதாக நம்பும் இவ்வேளையில், சமாதானத்தில் மனித உரிமைகள் வகிக்க வேண்டிய நடுநாயகமான பாத்திரத்தை நடவடிக்கைமுறை மற்றும நிறுவன ஏற்பாடுகளிலும், மேலும் முக்கியத்துவம் மிக்க வழியில் ஒரு கலாசார நிலைமாற்றத்திலும் பிரதிபலிக்கவேண்டியது தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பயனுறுதியைப் பொறுத்தவரையில் கலாசார நிலைமாற்றமானது ஒரு ஜனநாயகம் மற்றும் சமாதானம் நிறைந்த எதிர்காலத்தில் நின்று நிலைக்கக்கூடிய உத்தரவாதமாகும்.

– கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்துறை தலைவரும்,
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான

திரு.என்.செல்வகுமாரன்

உடன் ஒரு நேர்காணல்....

"பயங்கரவாதச் தடைச்சட்டம் செயலிழந்தால் அரசற்ற செயற்பாட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க எங்களுக்கு அதிகாரம் இருக்காது...."

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உருவாக்கம், அதன் செயற்பாடுகள், கட்டமைப்பு தொடர்பாக?

சர்வதேச மட்டத்தில் பரிஸ் கொள்கை(Paris Principle) க்கு அமைவாக, மனித உரிமைகள் ஆணைக்குழு 1996ம் ஆண்டு பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்ட மூலத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. 3 வருட அங்கத்தவர் பதவிக்காலத்தைக்கொண்டு 1997ம் ஆண்டு மார்ச் மாதம் 5 நிறைவேற்று அங்கத்தவர்களைக்கொண்டு ஆரம்பித்தது. ஒவ்வொரு 3 வருடத்திற்கும் புதிதாக நியமிக்கப்படும் 5 அங்கத்தவர்களைக் கொண்டு 7 வருடங்களாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசின் பேரில், இந்த அங்கத்தவர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார்கள். இந்த ஆணைக்குழுவின் அங்கத்துவ நியதியின் படி மூன்று இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் பால்நிலை அடிப்படையிலும் நியமிக்கப்படுதல் வேண்டும். ஆனால் இதில் பால்நிலை அடிப்படையில் பார்க்கும்போது முதலாவது நியமனக்குழுவில் எல்லாம் ஆண்களாகவே இருந்தனர். இரண்டாவது நியமனக்குழுவில் ஒரு பெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு ஆண்களும், மூன்றாவது நியமனக்குழுவில் 3 பெண்களும், 2 ஆண்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆணைக்குழுவின் பிரதான பணியானது, சர்வதேச மட்டத்திலான மனித உரிமைகள் சட்டத்தின் படி இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரிப்பால் அதனை கண்காணிப்பதற்கும், அதற்கான தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும், மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அறிவை ஊட்டுவதற்குமான பணிகளைச் செய்கின்றது, விஷேடமாக, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் கவனிப்புக்கு உட்படுகின்றது. பிரதானமாக அரசாங்கத்திலிருந்து விடுபட்டு செயற்படுகின்ற, மற்றும் அரசாங்கத்தின் செல்வாக்குகள் இல்லாத ஒரு நிறுவனமாக செயற்பட வேண்டும் என்பதே இதனுடைய நோக்கமாகும்.

ஆணைக்குழுவின் பணியை மூன்றாக வகுக்கலாம். முதலாவது விசாரணை தொடர்பான பணிகள். அதாவது உரிமைகள், பாதுகாப்பு தொடர்பானதாகும். இரண்டாவது மனித அடிப்படை உரிமைகள மேம்படுத்துவதற்கான பணியாகும். மூன்றாவது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்ற அதாவது அரசாங்கத்தின் சட்டங்கள், நிர்வாகப் பணிகள் அடிப்படை உரிமையை மேம்படுத்துவதாக அமைகின்றதா? மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்ட நியமங்களுக்கு அமைவானதாக இருக்கின்றதா என்பதை கண்காணித்து ஆலோசனை வழங்கும் பணியாகும்.

முதலாவது பணியில் விசாரணை செய்வதற்கும், இணக்கத்தீர்வை உருவாக்குவதற்கும், நிவாரணங்களை வழங்குவதற்கும் ஆணைக்குழுவிற்கு தத்துவங்கள் இருக்கின்றது. உதாரணமாக அரசியலமைப்பு சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற அடிப்படை உரிமை, அரசாங்க நிர்வாக மற்றும் ஆட்சிததுறையினால் பாதிக்கப்பட்டால் அல்லது பாதிக்கப்படுகின்ற அபாயம் இருக்குமென்றால் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம். அதேபோல் ஆணைக்குழு தனது தன்னிச்சையான நோக்கில் மீறல்கள் நடைபெற்றால் அல்லது மீறல்கள் நடைபெறுவதற்கான அபாயங்கள் தென்பட்டால் அதனைக் கவனத்தில் கொண்டும் நடவடிக்கை எடுக்க தத்துவம் இருக்கின்றது. அதேநேரம் அவ்வாறான சூழ்நிலையில் இணக்கப்பாட்டின் மூலம் நிவாரணம் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும். இது தொடர்பாக ஆணைக்குழு விசாரணை ஒன்றை நடாத்தி அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்கின்றதா அல்லது மீறப்படும் அபாயம் இருக்கின்றதா என்பதைக் கண்டறிந்து ஒரு சிபாரிசைச் செய்யும். இது சிபாரிசு என்ற அடிப்படையில் இருக்குமேயொழிய திணிக்கும் தன்மைக்கான ஒரு கட்டளையாக அதாவது உயர் நீதிமன்றம் வழங்கும் ஒரு கட்டளையாக விளங்காது. இந்த நடவடிக்கையின்போது அரச நிறுவனங்கள் அரசியலமைப்புக்கு கீழுள்ள அரசியலமைப்பு பேரவையினால் சிபாரிசு செய்து அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆணையாளர்களினால் வழங்கப்படுகின்ற சிபாரிசுகளை உதாசீனம் செய்வார்களாயின் அதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும். அதற்கான காரணத்தின் மீது கவனத்தைச்செலுத்தி ஜனாதிபதியூடாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அதாவது பாராளுமன்றம் அதனை கவனத்தில் எடுத்து நிவாரணம் வழங்குவதற்கு முன்வரும்.

வெறுமனே அரச நிர்வாக, ஆட்சித்துறைகளில் மட்டும் நடப்பதில்லை. குறிப்பாக ஆட்சித்துறையில் அங்கமாக இருந்த பல நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டு செல்கின்றவேளையில், சில நிறுவனங்கள் பூரணமாக தனியார் மயப்படுத்தப்படாமல் முகாமைத்துவம் மட்டும் தனியார் மயப்பட்டிருக்கின்ற நிறுவனங்களில் புரியப்படுகின்ற அடிப்படை உரிமை மீறல்கள் இந்த ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்துக்கு கீழ் வருவது கேள்விக்குறியாக இருக்கிறது. உதாரணமாக அண்மையில் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பின் பிரகாரம் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் ஒரு ஆட்சித்துறை நடவடிக்கைக்குரிய நிறுவனமாக கருதப்படாது என்றும், அடிப்படை உரிமை நியாயாதிக்கத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாடுகள் வராது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் முன்னர் அந்த நிறுவனங்கள் அதை ஒத்த நிறுவனங்களினால் அடிப்படை உரிமை மீறல்கள் ஏற்பட்டிருந்தால் அது எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வருமேயொழிய தற்போது அது கேள்விக்குறியாகவுள்ளது. ஆகவே நிர்வாக நிறைவேற்று நடவடிக்கைகள் புரிகின்ற அரசாங்க நிறுவனங்களற்ற அல்லது மருவிய அரச நிறுவனங்களாகக் கருதப்படுகின்ற முன்னைய அரசின் தற்போது தனியார் மயப்படுத்தப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் எங்களின் கட்டுப்பாட்டுக்கீழ் வராது.

இரண்டாவது சட்டவாக்க நடவடிக்கைகள் அல்லது நீதிமுறை நடவடிக்கைகளால் ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டால் அதை ஆராய்வதற்கு எங்களுக்கு தத்துவம் இல்லை. அதேபோன்று தனிநபர்களால், நிறுவனங்களால், அரசற்ற செயற்பாட்டுக் குழுக்களால் அடிப்படை உரிமை மீறப்பட்டால் அவற்றை ஒரு சில விதிவிலக்குகள் தவிர எங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரமுடியாது. அதாவது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய செயலாக இருந்தால் அந்த விடயத்தை விசாரிப்பதற்கான தத்துவம் கொடுக்கப்பட்டிருகிறது.

அடுத்து பிரதான அம்சம் என்னவென்றால் பாதுகாப்பு மற்றும் விசாரணை விடயம் தொடர்பில் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்படுகின்ற அடிப்படை உரிமைகள் மாத்திரம் எங்களின் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதாவது அத்தியாயம் 3 இல் 10-14ம் உறுப்புரை வரையிலும் சொல்லப்பட்டிருக்கின்ற அடிப்படை உரிமை மீறப்பட்டால் அல்லது மீறப்படுகின்ற அபாயம் இருந்தால் அவை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆராய்வதற்கு, சிபாரிசு செய்வதற்கு தத்துவம் இருக்கின்றது. அதேபோல் சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கின்ற விடயங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியிருக்கும் விடயங்களை கருத்தில்கொண்டு செயற்படுத்துவதற்கும் எங்களுக்கு தத்துவம் இருக்கின்றது. விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது நடவடிக்கை இடைநிறுத்தப்படுமாக இருந்தால் அல்லது விசாரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து செய்வதில் பிரயோசனம் இல்லை இழப்புகள் ஏற்பட்டு விடும் என்ற நிலையிருக்குமென்றால் இடைக்காலத்தடை உத்தரவு வழங்குவதற்கு சட்டத்தில் உள்ளுராக அதிகாரம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் திணிக்கும் இறுதித்தீர்ப்பை வழங்குவதில் சட்டத்தில் எங்களுக்கு இடமில்லை.

சித்திரவதைகள், ஆட்கடத்தல், காணாமல் போதல் தொடர்பாக?

அவசரகாலச்சட்ட விதிகள் செயற்படுத்தப்பட்டு வந்த வேளையிலும், பயங்கரவாதத் தடைச்சட்டம் செயற்படுத்தப்பட்டு வந்த காலகட்டத்தில் இந்த காவல் நிலையங்களில், தடுப்பு முகாம்களில், சட்டபூர்வமான நிலையங்களில், சட்டபூர்வமற்ற நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நிலையை ஆராய்ந்து விசாரிக்க அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நலன் பேணப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவும், சிபாரிசுகளை செய்யவும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருக்கின்றது. சட்டத்திற்கு முரணாக ஆட்களை கைதுசெய்வது தொடர்பாக திடீர் சோதனை நடாத்த, கீழ்த்தரமாக நடாத்தப்படுகின்றார்களா என ஆராய்வதற்கு அதிகாரம் இருக்கிறது.

காணாமல் போதல் தொடர்பாக அதிகமான முறைப்பாடுகள் வட மாகாணத்தில்தான் கிடைத்திருக்கிறது. அந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக மூவர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளோம். விசாரணையின்போது காணாமல் போனவர்களின் முழுவிபரங்களை திரட்டுவதோடு, எவ்வாறு காணாமல் போனார்கள், அவற்றுக்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை ஆராய்வது தொடர்பில் விசாரணைக்குழு செயற்படும். அவர்கள் அது தொடர்பாக எங்களுக்கு ஒரு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார்கள். அவ் அறிக்கையை நாங்கள் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு காணாமல் போனவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களுக்கு அறிக்கையின் முடிவு என்ன என்பதை தனிப்பட அவர்களுக்கு அறிவிப்போம்.

அரசாங்கத்திற்கான ஆலோசனை எந்த வகையில் அமையும்?

அரசாங்கத்திற்கு சில சிபாரிசுகளை செய்வோம். காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான புனர்நிர்மாணம் செய்வதற்கு அல்லது தொழிலொன்றை பெற்றுக்கொடுக்க சிபாரிசுகளை செய்கின்றோம். அத்தோடு சர்வதேச நிறுவனங்களுக்கும் இந்த வகையிலான சிபாரிசுகளைச் செய்கின்றோம்.

மற்றும், அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு பாவிக்கப்படுகின்றதா என்பதனை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை சீடா(CIDA) நிறுவனத்தின் நிதியுதவியுடன் யு.என்.டீ.பி(UNDP) உடன் இணைந்து செய்கின்றோம்.

மூன்றாவதாக அமைக்கப்பட்டிருக்கின்ற ஆணைக்குழு, கடந்த காலங்களில் முறைப்பாடு செய்து விசாரணை நடாத்தப்படாமல் தேங்கிக்கிடக்கும் முறைப்பாடுகளின் நிலை?

ஆம் நிறையவே தேங்கிக்கிடக்கின்றன. குறிப்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முன்னர் இயங்கிய மனித உரிமைகள் சிறப்புப் பணியகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளில் தேங்கிக்கிடந்த 11,000 முறைப்பாடுகளை 2வதாக அமைக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அதைக் கவனத்தில் கொண்டு ஒரு நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகின்றது. அதுவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது 2000-2003ம் ஆண்டுகளுக்கிடையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 4000ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தேங்கிக்கிடக்கின்றன. தற்போது சாதாரணமாக ஒரு மாதத்திற்கு 200-500 ற்கு இடையிலான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. தேங்கிக்கிடக்கும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக விசாரிக்கும் ஆணையாளர்கள் என பகுதிநேர ஆட்களை அமைக்க திட்டமிட்டுள்ளோம். அதற்காக ஓய்வுபெற்ற நீதிபதிகள், மற்றும் ஓய்வுபெற்ற அனுபவமிக்க சட்டத்தரணிகள் போன்றவர்களை அழைத்து நேர்முகப்பரீட்சைகள் நடாத்திக்கொண்டிருக்கிறோம். எப்படியும் அடுத்தமாதமளவில் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்கலாம்.

இரண்டாவது ஆணைக்குழுவின் செயற்பாட்டில் ஆலோசனை வழங்கல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தோம். அதனடிப்படையில் யு.என்.எச்.சீ.ஆர்(UNHCR) உடன் இணைந்து கொழும்பில் தலைமையகத்தைக்கொண்டு புத்தளம், யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, போன்ற மாவட்டங்களில் இலவச சட்ட உதவி மன்றங்களை அமைத்து அந்த நிகழ்ச்சித்திட்டத்தை செய்துவருகின்றோம்.

உங்களுக்கான நிதி போதாமை, ஆட்பலம் போதாமை தொடர்பில் இவ்வாறான சிக்கல்களுக்கு முகம்கொடுக்கலாம் இது தொடர்பாக?

தற்போது மூன்று சட்ட அதிகாரிகள், இரண்டு உதவி சட்ட அதிகாரிகள், மற்றும் 10-12 வரையிலான விசாரணை அதிகாரிகள், விசாரணைக் குழு இயக்குநர் ஒருவர் மற்றும் 10 கிளை அலுவலகங்கள் இருக்கின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், திருணோமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி, அநுராதபுரம், பதுளை, மாத்தறை போன்ற மாவட்டங்களில் உள்ளது. இடம்பெயர்ந்தவர்களுக்கான சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்காக புத்தளம், மன்னார் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டங்களில் இரண்டு சட்ட உதவி அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகள் மாத்திரமே பணியாற்றுகின்றார்கள். இவ்வாறான ஆட்பலத்தைக்கொண்டு ஆணைக்குழு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை சரியான முறையில் கையாளுவதற்கு போதுமானதான ஆட்பணியாளர்கள் இல்லை.

இவ்வருடம் எதிர்வரும் மூன்று வருட செயற்திட்டத்திற்கான கட்டமைப்பு வரைபொன்றைச் செய்திருக்கின்றோம். அதனை மாண்புமிகு மறைந்த சமர சிங்கவின் தலைமையிலான மனித உரிமைகளுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்திருக்கிறோம். கட்டமைப்பு வரைபிலுள்ள மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான திருத்தங்கள், மாற்றங்கள் என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சிபாரிசு செய்து தருவார்கள். அதற்கான நிதியையும் நிதியமைச்சரிடம் கலந்துரையாடி பின்னர் திறைசேரியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையையெடுப்பார்கள். இதுவரைகாலமும் 24 மில்லியனே கிடைத்து வந்தது. தற்போது 42 மில்லியன் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எங்களுடை செயற்திட்டத்திற்கு 150 மல்லியன் தேவைப்படுகின்றது. மிகுதியை நாம் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுத்துள்ளோம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக?

உடன்படிக்கையின் பின்னர் இராணுவத்தினருக்கும், படையினருக்கும் எதிரான முறைப்பாடுகள் வெகுவாகக் குறைந்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகளே அதிமாக கிடைக்கின்றன. குறிப்பாக ஆட்கடத்தல், கப்பம் அறவிடுதல், சிறுவர்களை படையில் சேர்த்தல் தொடர்பானதாகவே அந்த முறைப்பாடுகள் அமைகின்றது. இது தொடர்பாக கடந்த வருடம் 2வது ஆணைக்குழு ஆணையாளர்கள் யாழ்ப்பாணம் சென்று விடுலைப் புலிகளைச் சந்தித்து உரையாடினார்கள். அந்தச் சந்திப்பில் தாங்கள் சிறுவர்களை படையில் சேர்த்துக்கொள்வதில்லையென்றும், வயது கூடியவர்களே இணைகிறார்கள் எனவும் பங்குகொண்ட விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அவ்வாறு இணைந்தவர்களை நாங்கள் சந்திக்கலாமா என்று கேட்டபோது அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள்.

மற்றும் இக்காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் இதர இயக்கத்தினரிடமிருந்து அதிகமான முறைப்பாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கிடைக்கின்றது. அவை யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பானதாகையால் நாம் அந்த முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கை கண்காணிப்புக் குழுக்களுடன் கலந்துரையாடியிருக்கிறோம். இது தொடர்பில் இலங்கை கண்காணிப்புக் குழுவே கண்காணிக்க வேண்டும் என்பதால் நாம் அது தொடர்பில் தொடர் நடவடிக்கைகளில் இறங்குவதில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் செயலிழந்தால் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் மீது எங்களுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கு தத்துவம் இருக்காது என்பதையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சட்டத்தின் கீழ் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

பாரதூரமான மனித உரிமை மீறல்களின் உண்மை நிலை அறிவது தொடர்பாக? மற்றும் உண்மை ஆணைக்குழுவின் தேவை தொடர்பாக?

மக்கள் எத்தனையோவற்றை இழந்து மனத்துயரோடு வாழ்கிறார்கள். அவர்களின் மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் துன்பங்களை வெளியே சொல்லி ஆற்றுப்படுத்துவதற்கான வழிகோலாக அமையும் நிகழ்ச்சியாக இருந்தால் கட்டாயம் அது தேவையான ஒன்றாகத்தான் இருக்கும். மனங்களில் வடுக்களை வைத்துக்கொண்டு நாம் மீளிணக்கத்தை காண முடியாது. மீளிணக்கம் ஒன்றை காண வேண்டுமாக இருந்தால் மனங்களில் அடக்கி வைத்திருப்பவற்றை வெளியே சொல்ல வேண்டும். அத்துடன் அவர்களுக்கு அந்த மீறல்களின் உண்மை நிலை சொல்லப்படவேண்டும். இதனூடாக நிவாரணம் கிடைக்குமாக இருந்தால் கட்டாயம் அது தேவை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இருக்கின்ற எதிர்கால தடைகள் பற்றி?

17வது அரசியலமைப்பு திருத்தம் வந்த பிற்பாடு ஆணைக்குழுழுவிற்கு பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது. 17வது திருத்தத்தின் படி மனித உரிமைகள் சுதந்திர ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் சுதந்திர ஆணைக்குழு என்ற இந்த இரண்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நடவடிக்கைகள், 126ம் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தினால் மாத்திரம் கேள்விக்குட்படுத்தலாம். வேறு எந்த நீதிமன்றத்தினாலேயோ அல்லது நியாயாதிக்க நிறுவனங்களாலேயோ கேள்விக்குட்படுத்த முடியாத நிலையே ஏற்பாடாகி உள்ளது. இது ஏற்கனவே இருந்து வந்ததிலிருந்து மாறுபட்டதொன்றாகும்.

உரையாடியவர் : பா.வி.சாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அமைப்பு குறித்த மாற்றுச் சிந்தனை

– கலாநிதி ஜயதேவ உயன்கொட –

"விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முறையில் தீர்வுகுறித்த ஆலோசனைகளை முன்வைத்தால், தென்னிலங்கையில் அரசியல் சக்திகள் பதில் நிலப்பாடு எத்தகையதாக இருக்கும்? அதிர்ச்சி, மறுப்பு, எதிர்ப்பு...."

வரவிருக்கும் சில மாதங்களுள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பாகங்களில் மிகவும் முக்கியமான அரசியல் உரையாடல்கள் இடம்பெறக் கூடும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைத் தேடுவதற்கு இலங்கையின் குடியேற்றவாத காலத்துக்குப் பிந்திய அரசு, அதன் அரசியலமைப்பின் அடிப்படையை எவ்வாறு மாற்றியமைப்பது என்பது குறித்து அல்லது அதை முற்றுமுழுதாக மாற்றியமைக்க வேண்டுமா என்பது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கக் கூடும்.

இதையொட்டி தென்னிலங்கைச் சமூகத்தின் அதற்குச் சமாந்தர நிலையிலான அரசியல் கலந்துரையாடல்களை நடத்துவது அவசியமாகும். உண்மையில் சிங்கள சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கும் அரசியல் வர்க்கங்களிடையே அரசியலமைப்பை மறுசீரமைப்புச் செய்யும் கலந்துரையாடல்கள் இப்பொழுது இடம்பெறாத நிலையே காணப்படுகின்றது. அத்தகைய உரையாடல்கள் 1995 – 2000 காலப்பகுதியில் இடம்பெற்று முடிவடைந்து விட்டன. ஆயினும் அவைப் புதுப்பிக்க வேண்டும். அதைப் புதுப்பிப்பது சாத்தியமாகும்.

விவாதம் புதுப்பிக்கப்படுதல்

இலங்கை அரசு தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில் எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பு அரசியலமைப்பு மறுசீரமைப்பு விவாதத்தில் கலந்து கொள்ளும் அரசியல் சட்டம் அமைந்துள்ளது. இங்கு விடுதலைப் புலிகளின் ஆலோசனைகளுக்கு வழிகாட்டும் கோட்பாட்டுத் தொகுதியாக விளங்குவது இலங்கையின் தமிழ் மக்களும் சிங்கள மக்களைப் போலவே தனியான ஓர் "இனம்" என்பதாகும். இக் கருத்தை முன்வைக்கும் விடுதலைப் புலியினரின் ஆலோசனைகள் அரசியல் அடிப்படையில் திம்புக் கோட்பாடுகளை உள்ளடக்கும் ஒன்றாக அமையக் கூடும். திம்புக் கோட்பாடுகள் பின்வருவனவாகும்.

1. தமிழ் மக்களை ஓர் "இனமாக" அங்கீகரித்தல்

2. ஒரு தனியான "இனம்" என்ற வகையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

3. வடக்கு – கிழக்கைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக அங்கீகரித்தல்

இரண்டு இனங்கள் – ஓர் அரசு

"இலங்கையின் தமிழ் மக்கள் தனியான ஓர் இனம்" என்பது புதிய ஒரு கருத்தோ, விடுதலைப் புலியினால் ஏற்படுத்தப்பட்டதோ அல்ல. அதற்கு ஒரு நீண்டகால வரலாறு உள்ளது. 1949ல் தமிழ் தலைவர்கள் சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்தது அத்தகைய "தனிஇனக்" கொள்கையின் அடிப்படையிலேயே ஆகும்.

சமஷ்டிக் கட்சியின் உருவாக்கத்திற்கு அடிப்படையான ஆவணங்களில் தர்க்கரீதியாக நோக்கும் போது இலங்கைத் தமிழ் மக்களும் சிங்களவரைப் போன்றே நீண்டகால வரலாற்றைக் கொண்டவர்களும் தனியான கலாசாரத்தையும், மொழியையும் கொண்ட குறித்துரைப்பான நிலப்பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த ஓர் "இனம்" ஆவர். சமஷ்டிக்கட்சியின் அரசியல் கருத்திட்டமாக அமைந்தது "இரண்டு இனங்கள் - ஓர் அரசு" என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலான வடக்கு, கிழக்கு இரு மாகாணங்களுக்குமான சுயாட்சியைப் பெற்றுக்கொள்வதாகும்.

தமிழ் மக்கள் தனியான ஓரினமென்னும் கருத்தைச் சிங்கள ஆளும் வர்க்கங்கள் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்து வந்துள்ளது. இதற்குக் காரணம் தமிழ் மக்கள் ஒரு "சிறுபான்மை இனம்" என்னும் விளக்கத்துக்கு அப்பாற் செல்லுவதற்கு அவர்கள் இன்னமும் இயலாத நிலையில் இருப்பதேயாகும்.

சுயநிர்ணய உரிமை

2001 செப்டெம்பரில் தாய்லாந்தில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் முக்கியமான ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்தது. அதாவது அவர்கள் தற்போது போராடுவது தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணயத்துக்காகவே என்று அவர்கள் தெரிவித்தனர்.

2002 டிசம்பரில் ஒஸ்லோவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைச் சுற்றின் இறுதியில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவோடு இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு "உள்ளக சுயநிர்ணய உரிமை" செயற்படுவதற்குப் பொருத்தமான மாற்று சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை அரசாங்கத்துடன் சேர்ந்து அமைக்க முயற்சியெடுப்பதாகத் தெரிவித்தனர். இது இலங்கைத் தமிழ் இனவாத அரசியல் பரிணாமத்தில் ஏற்பட்டுள்ள பாரதூரமான மாற்றமாகும்.

இந்த நிலைமாற்றம் பின்வரும் விடயங்களைத் தெளிவாக்குகின்றது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் தமிழ் தேசிய அரசியல் ஆரம்பிக்கப்பட்டது அரசின் மத்திய சட்டசபையிலும் பின்னர் நிர்வாகத்திலும் "பிரதிநிதித்துவம்" மற்றும் "வகைப்பொறுப்பை" வென்றெடுக்கும் நோக்கத்துடனாகும். 1949ல் சமஷ்டிக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்த அரசியல் குணாம்ச ரீதியில் நிலைமாற்றத்துக்கு உள்ளாகியது. இதன் பிரகாரம் "தனி" இனம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலான "பிரதேச சுயாட்சி" என்பது தமிழ் தேசியவாத அரசியலின் இலக்காகியது. அது குறிப்பிட்ட சுயநிர்ணய உரிமை உள்ளக அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டதென்று தெரிவிக்கும் நிலைப்பாடாகும். இது 1976 வரை இடம்பெற்றது. 1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணியில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தமிழ் தேசியவாதப் போராட்டம் "தனி ராச்சியம்" என்னும் இலக்கை நோக்கித் திரும்பியது. இதன் கருத்து தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை "வெளியக அர்த்தத்தில் புரிந்துகொள்ளும் நிலைமைக்குத் தமிழ்த் தேசியவாத அரசியல் முன்னேறியது" என்பதாகும்.

1970களின் பிற்பகுதியிலிருந்து அது ஆயுதந்தாங்கிய போராட்டமாகவும் அபிவிருத்தியடைந்தது. 1983ல் முழுமையான ஆயுதந்தரித்த போராட்டமாக நிலைமாற்றமடைந்தது. இருபது வருடகால ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் பின்னர் தமிழ் தேசியவாத அரசியல் கருத்திட்டம் இப்பொழுது "சுயநிர்ணய உரிமை" என்னும் "உள்ளக" அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்படும் நிலைக்கு மீண்டும் வந்துள்ளது. சிங்கள அரசியல் சமூகத்தில் பலரைப் போலவே சிங்களத் தேசியவாத புத்திஜீவிகள் பலருக்கும் இந்த விடயம் இன்னமும் புரியவில்லை. இலங்கையின் அரசியல் நிலைமாற்றம் குறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்கள சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கும் அரசியல் வர்க்கங்களினுள் அரசியலமைப்பை மறுசீரமைப்புச் செய்யும் கலந்துரையாடல்கள் இப்பொழுது இடம்பெறாத நிலையே காணப்படுகின்றது..."

பாரதூரமாகச் சிந்திப்போர் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் தமிழ் தேசியவாத அரசியல் கருத்திட்டம். "இரு இனங்கள், இரு அரசு" என்பதற்கு நிலைமாற்றம் பெற்று வருகின்றது என்பதேயாகும்.

கூட்டுச் சமஷ்டி முறைமை

இன்று நிலவும் இணைப்பு நிலைமையினுள் "பிரதேச சுயாட்சி" உறுதி செய்யும் "உள்ளக சுயநிர்ணய உரிமைக்காக" விடுதலைப் புலியினர் முன்வைக்கும் ஆலோசனையின் வடிவம் எதுவாக இருக்க முடியும்? அது மிகவும் சக்தி மிக்கதும், பரந்தகன்றதுமான சமஷ்டி முறைமையே அன்றி வேறெதுவுமாக இருக்கமுடியாது. அது கூட்டுச் சமஷ்டி முறைமையாக (Con federalism) அமைவதற்கும் இடமுள்ளது.

கூட்டுச்சமஷ்டி முறைமையிலுள்ளது பிராந்திய அலகுகளுக்கான போதிய சுயாட்சியுடன் கூடிய வளர்ச்சியடைந்த சமஷ்டி முறையாகும். சாதாரண சமஷ்டி முறையைவிட அதிகாரப் பகிர்வைப் பொறுத்தமட்டில் வெகுதூரம் செய்யக்கூடிய கூட்டுச் சமஷ்டி முறைமை விடுதலைப் புலிகள் அமைப்பினரால் ஆலோசனையாக முன்வைக்கப்படுவதற்கு இரண்டு மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசனை தனிராச்சியமொன்றுக்கு மாற்றீடாக வைக்கப்படும் ஒன்றாக எண்ணப்படக்கூடியதாக இருக்கவேண்டுமென்பதாகும். இரண்டாவது வடக்கு, கிழக்கு அலகு இலங்கையின் ஏனைய அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்ட அலகுகளை விடக் கூடிய அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதாகும். தாம் வேறோர் இனம் என்பதால் தமது பிராந்திய அல்லது வலய அலகின் "உயர்விசேட" தன்மையை ஏற்றுக்கொண்டு அது தமது அலகுக்கு வழங்கப்படும் ஒப்பீட்டு ரீதியில் உயர்வான அதிகாரங்களால் வெளிப்பட வேண்டுமென்பது விடுதலைப் புலிகள் அமைப்பு எதிர்பார்ப்பதற்குப் பெருமளவுக்கு இடமுள்ளது. "சமச்சீரற்ற சமஷ்டி" என்னும் பெயரில் அரசியலமைப்புத்தத்துவத்தோடு சமீபத்தில் ஒன்றிணைந்துள்ளது இக்கருத்தேயாகும் (Asymmetrical federalism)

மூன்றாவது காரணம் இலங்கைக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் மாத்திரம் விசேடமான நிலைமை என்பதிலிருந்து பிறப்பதாகும். விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பது அரசாங்கத்தினால் இராணுவ ரீதியில் தோற்கடிக்கவோ, பலவீனப்படுத்தவோ முடியாத இராணுவ பலத்தைக்கொண்டு சமாந்தர அரசுப்பிரதிநிதிகளென்ற வகையிலாகும். தாம் எட்டும் அரசியல் தீர்வு இந்த யதார்த்தத்தை ஏற்றுப் பிரதிபளிப்பதாக அமையவேண்டுமென்பதும் விடுதலைப் புலிகள் அமைப்பு எதிர்பார்க்கின்றது. தாம் கட்டியெழுப்பியுள்ள நிர்வாக மற்றும் சட்டம், ஒழுங்கு போலும் கட்டமைப்பு நிறுவனங்களைக் கலைத்து விடாது அவற்றை நீண்டகாலத்துக்குப் பேணும் அவசியம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உள்ளது.

ஒற்றையாட்சிக்கு மாற்றாக அரசியலமைப்பு ரீதியிலான சிந்தனையை முன்வைத்தவர்கள், நான் அறிந்தவரையில், சிங்கள சமூகத்தின் சட்டவறிஞர்கள் மூவராவர். பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கலாநிதி ஷிராணி பண்டார நாயக்க மற்றும் ரொஹான் எதிரிசிங்க என்போரே ஆவர். புதிய, மாற்றுச் சட்டத்தினுள் பணியாற்றிய சட்டவறிஞர் கலாநிதி. ஜயம்பதி விக்கிரமரத்ன ஆவார்.

அது சாதாரண சமஷ்டி முறைமையின் கீழ் செய்யப்படுவது கடினமான ஒன்றல்ல. ஆயினும் பிரச்சினைக்குரிய விடயமாக அவர்கள் கருதுவது தமது ஆயுதப்படைகளைக் கலைத்துவிடாமல் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இடமளிக்கக் கூடிய சமஷ்டி முறைமையொன்று பற்றி விடுதலைப் புலிகள் அமைப்பு சிந்திக்க வேண்டியுள்ள நிலைமையாகும். அதற்கு இடமேற்படுவது கூட்டுச் சமஷ்டிக் கட்டமைப்பினுள் மாத்திரமேயாகும்.

மேலே இடம்பெற்ற கலந்துரையாடலைச் சாராம்சப்படுத்துவதாயின், விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசனைகள் பின்வரும் அரசியலமைப்புக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டமையக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கையின் தமிழ் மக்கள் தனியான ஓர் இனம் என்பது புதிய ஒரு கருத்தோ, விடுதலைப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றோ அலல்... அதற்கு ஒரு நீண்டகால வரலாறு உள்ளது..."

1. தமிழ் மக்கள் தனிச்சிறப்பு வாய்ந்த "தேசிய இனம்" ஆவர். (திம்புக் கோட்பாடு)
2. "இரு இனங்கள் - ஓர் அரசு"
3. உள்ளக சுயநிர்ணயம்
4. கூட்டுச் சமஷ்டி
5. சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு அல்லது சமச்சீரற்ற சமஷ்டி

தென்னிலங்கையின் பதில் நடவடிக்கை

விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்கண்ட முறையில் தீர்வுகுறித்த ஆலோசனைகளை முன்வைத்தால், தென்னிலங்கையின் அரசியல் சக்திகளின் பதில் நிலைப்பாடு எத்தகையதாக அமையக்கூடும்? அதிர்ச்சி, மறுப்பு மற்றும் எதிர்ப்பு என்பவை ஆரம்ப எதிர்விளைவுகளாக இருக்கக்கூடும் ஆயினும் சிங்கள சமுதாயத்தின் முதிர்ச்சியைக் காட்டும் பிரதிவிளைவாக இருக்க வேண்டியது அதுவல்ல. வடக்கின் சமூகத்தைப் போன்றே தெற்கு சமூகத்திலும் அரசியலமைப்பு மற்றும் அரசியல் மறுசீரமைப்புக் குறித்த புதிய மற்றும் பரந்த மக்கள் உரையாடலை ஆரம்பிப்பதே விவேகமானதாகும். தமிழ் சமூகத்தில் ஏற்பட்டுவரும் அரசியல் மறுசீரமைப்பு உரையாடலோடு நாமும் ஆக்கபூர்வமான, பயனுறுதியுள்ள வகையில் ஒன்றிணைவது அவசியமாகும். சிங்கள சமூகத்தில் அரசியல் - அரசியலமைப்புச் சிந்தனை நிலவுவது ஒற்றையாட்சியிலிருந்து அதிகாரப்பரவலாக்கமென்றும் எல்லைவரை அமைந்த குறுகிய மட்டெல்லைகளுள் ஆகும். அதிகாரப் பரவலாக்கம் சிங்களச் சமூகத்தின் அரசியல் சிந்தனையில் இடம்பிடித்தது வன்செயல், சிவில் யுத்தம் மற்றும் அந்நிய இராணுவத் தலையீடு போன்றவற்றின் பின்னணியைக் கொண்ட 1980களின் நடுப்பகுதியாகும். பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கடந்த ஆட்சிக்காலத்தில் அதிகாரப்பரவல் சிந்தனை சிறிது ஆழமாகியது. அதிகாரப் பரவலாக்கம் தற்போது சிங்கள ஆளும் வர்க்கத்தின் உத்தியோகபூர்வமான அரசியலமைப்புச் சிந்தனையாக மாற்றம் பெற்றுள்ளது. ஒற்றையாட்சி எண்ணக்கரு சிங்கள சமூகத்தின் சிறு எண்ணிக்கையிலான முதலாளி வர்க்கத்தின் சிந்தனையாகத் தொடர்ந்தும் உள்ளது. மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உருமய போன்றவை சிறு எண்ணிக்கையினரான முதலாளி வர்க்கத்தின் பாதுகாப்பின்மை நிலையை ஒற்றையாட்சிக் கருத்திட்டத்தின் மூலம் முன்வைக்கின்றனர்.

எதிர்காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மாற்றும் அரசியல் யோசனைகளினால் ஏற்படக்கூடிய சவால்களுக்குப் பயனுறுதியுள்ள வகையில் முகங்கொடுப்பதாயின், சிங்கள ஆளும் வர்க்கத்திடமுள்ள அதிகாரப்பரவலாக்கச் சிந்தனைகள் போதாத நிலை ஏற்படலாம். அதற்கு ஒன்றோடொன்று தொடர்புள்ள இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. அதில் ஒன்று இலங்கையின் தேசிய பிரச்சினையாகிய தமிழ் மக்களின் இனப்பிரச்சினை. தற்போது அடைந்துள்ள வரலாற்றுக் காலகட்டம் அதிகாரப்பரவலாக்கல் சட்டகத்தையும் மீறி அப்பால் சென்றுள்ளது. தற்போதைய நிலையில் அதிகாரப் பரவலாக்கல் மூலமன்றி அதிகாரப்பகிர்வு மூலமே அரசியல் உரையாடல் முன்செல்லக்கூடிய நிலை தோன்றியுள்ளது. உண்மையில், அதிகாரத்தைப் பரவலாக்காமல், அரசு அதிகாரத்தைப் பகிர்வு செய்யும் செயல்முறையை நோக்கி முன்னேறுவது அவசியமென்ற வகையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பின் எண்ணக் கரு ரீதியான தர்க்கம் அபிவிருத்தியடைந்துள்ளது.

சிங்கள சமூகத்தின் அரசியல் - அரசியலமைப்புச் சிந்தனையைப் புதுப்பிக்கும் முதலாவது ஆலோசனையை இப்பொழுது நாம் முன்வைக்க முடியும். அதாவது தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாயின், அதிகாரப்பரவலாக்கம் குறித்த உரையாடலிலிருந்து (Deen tralization) "அதிகாரப்பகிர்வு" என்னும் உரையாடலுக்கு நாம் மாறுதல் வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கத்துக்கும் "அதிகாரப் பகிர்வுக்கும்" இடையிலான வேறுபாடு என்ன? இலங்கையின் அரசியல் உரையாடலினுள் இவை இரண்டுக்குமிடையில் பெருமளவிலான வேறுபாடுகள் உள்ளன. இந்த நாட்டின் அரசியல் மொழியினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதிகாரப்பரவலாக்கம்" என்னும் எண்ணக்கரு இடம்பெற்றது 1980களின் நடுப்பகுதியிலாகும். அதாவது 1984 – 85 காலப்பகுதியிலாகும். அதன் அடிப்படைக் கருத்தாக அமைந்தது ஒற்றையாட்சியின் மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரங்களுள் ஒரு சிலவற்றை விருப்பமின்றியேனும் பிரதேச அமைப்புகளுக்கு வழங்குவதாகும். அடிப்படையில் ஒற்றையாட்சி அமைப்பினுள் சிறு மறுசீரமைப்புகளை ஏற்படுத்துவதாகும். இலங்கைத் தமிழ் மக்கள் "சிறுபான்மையினர்" என்ற கோட்பாடு அதிகாரப்பரவலாக்க எண்ணக்கருவின் நடுநாயகமாகவுள்ளது. உண்மையில், அதிகாரப்பரவலாக்கம் ஓர் அரசியலமைப்பு எண்ணக்கருவாகப் பரிணமிக்கது சிறுபான்மையினர் உரிமைகள் (Minority rights) குறித்த தாராளவாத அணுகுமுறையாகும்.

"அதிகாரப்பகிர்வு" என்னும் எண்ணக்கரு அமைந்துள்ளது இது காலவரை இலங்கைத் தமிழ் மக்கள் வெறுமனே "சிறுபான்மையினர்" என்று எண்ணப்பட்டுவந்ததன் அடிப்படையிலன்றி அவர்கள் ஓர் "தேசிய இனம்" என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலாகும். ஒற்றையாட்சியின் மத்திய அரசாங்கத்தைச் சிறிய அளவில் மறுசீரமைப்புச் செய்யாமல், அரசை மீண்டும் கட்டியெழுப்புவது குறித்த கருத்திட்டமே இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. அல்லாமே அது மத்திய அரசாங்கமும், சுயாட்சி அலகும் ஒன்றிணைந்து ஏற்படுத்தும் மறு சீரமைப்பும் - மீள்கட்டியெழுப்புதலும் குறித்த முயற்சியாகும்.

தமிழ் "சிறுபான்மையினருக்கு" அரசாங்க அதிகாரத்தைப் "பரவலாக்கம்" செய்வதிலிருந்து, தமிழ், "இனத்துடன்" அரசு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான எண்ணக்கரு ரீதியான நிலை மாற்றத்துக்குச் செல்வதற்கு சிங்கள சமூகத்தின் அரசியல் - அரசியலமைப்புச் சிந்தனைக்கு இயலுமை உள்ளதா? கஷ்டமாக இருந்தாலும், அது செய்யப்படக்கூடிய ஒன்று என்பது எனது கருத்தாகும். சிங்கள சமூகத்தின் அரசியலமைப்புச் சிந்தனையின் ஜாம்பவான்களாகிய, கொல்வின் ஆர்.டி.சில்வா முதல் ஈ.எல்.டி. சில்வா வரையிலான அனைவருமே மத்தியப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி விவாதிகளாவர். நான் அறிந்தவரையில், ஒற்றையாட்சிக்கு மாற்றாக அரசியலமைப்பு ரீதியான சிந்தனையை முன்வைத்தவர்கள் சிங்கள சமூகத்தின் சட்டவறிஞர்கள் முவராவர். பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ். கலாநிதி ஸிராணி பண்டாரநாயக்க மற்றும் ரொஹான் எதிரிசிங்க என்போரே இவர்களாவது. பதிய மாற்றுச் சட்டத்தினுள் பணியாற்றிய சட்டவறிஞர் கலாநிதி. ஜாம்பதி விக்கிரமரத்ன ஆவார்.

உண்மையில் தற்போதுள்ள ஐ.தே.க அரசாங்கத்துக்கும் மாற்று அரசியலமைப்பு ரீதியிலான சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கம் ஜூலை மாதத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பிடம் முன்வைத்த இடைக்கால நிர்வாக ஆலோசனைகளைப் பார்க்கும்போது தெரிவது ஐ.தே.க அரசாங்கத்தின் அரசியலமைப்பு அணுகுமுறை குறித்த தத்துவார்த்த மற்றும் அரசியல் வறுமையாகும். இந்த ஆவணத்தில் எந்த விதமான புதிய அரசியல் மற்றும் அரசியலமைப்புக் கோட்பாடுகளும் கிடையாது. அது வரையப்பட்டிருப்பது 13வது திருத்தத்துக்கும் குறைவான சிந்தனைச் சட்டத்தினுள் ஆகும். எதிர்காலத்தில் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் முகங்கொடுக்க வேண்டிய ஒரு சவால் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் திரு. ரணில் விக்கிரமசிங்கவின் சட்டவறிஞர் என்ற நிலைக்குச் சிறிது அதிகமாக பணியாற்ற வேண்டியிருப்பதாகும். அதாவது, ஆக்கபூர்வமான சட்டச் சிந்தனையாளரென்ற வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தமிழ்ச் செல்வனுடன் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதாகும்.

மேலும் ஜனநாயக சிவில் சமூக சக்திகளும் எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டிய அரசியல், அரசியலமைப்பு ரீதியான சவால்களும் உள்ளன. அதாவது இலங்கையில் விசேடமாக சிங்கள சமூகத்தின் அரசியல் விவாதத்தினுள் பிரதான பிரவாகமாக சக்திமிக்க சமஷ்டி அரசு குறித்த எதிர்கால தரிசனத்தையும், தர்க்கத்தையும் முன்னெடுத்துச் செல்வதாகும்.

(நன்றி : ராம விமர்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதரப்புக்குமான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு 9 மாதங்களாகி...., அதனை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிக்கும் தற்போதைய சூழ்நிலை மீதான ஒரு கண்ணோட்டம் : திரு.கேதீஸ்வரன் லோகநாதன்(பணிப்பாளர் – மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், தலைவர் – முரண்பாடு மற்றும் சமாதானப் பகுப்பாய்வுப் பிரிவு) அவர்கள் தினகரன் வாரமஞ்சரிக்கு அளித்த பேட்டி....



ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் பின்னர் சமாதான முன்னெடுப்பு ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதுபற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

சமாதான முன்னெடுப்பு தற்போது ஸ்தம்பித நிலையில் இருப்பது உண்மைதான். ஆனால் ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறப்பேற்றதனால் தான் ஸ்தம்பித நிலை ஏற்பட்டது என்பது பொருத்தமற்ற ஒரு கருத்து. ஏனெனில் அரசாங்கம் புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு, ஒப்பந்தத்துக்கமையவும் 6 சுற்றுப்பேச்சுக்களில் எடுத்த முடிவுக்கமையவும் அரசு செயற்படவில்லையென்பதைக் காரணங்காட்டிக் கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதத்திலேயே புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொண்டனர். அதன் பின் 6 மாதங்களின் பின்னர் - அதாவது கடந்த நவம்பர் மாதத்திலேதான் ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார். எனவே ஜனாதிபதிதான் சமாதான முன்னெடுப்புக்கு முட்டுக்கட்டை என்ற வாதம் பொருந்தாது என்பதை வரலாற்றைத் தெரிந்துகொண்டவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்வர்.

மேலும் ஜனாதிபதி மக்களாணையைப் பெற்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட நாட்டின் தலைவராகத் தெரிவானவர். அதேபோன்று அரசும் மக்களாணையைப் பெற்றுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு செய்யும்போது ஜனாதிபதியைக் கலந்தாலோசிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு தன்னிச்சையாகவே செய்துள்ளது. நிலைமையைச் சமாளித்து சமாதான முன்னெடுப்பைத் தொடர்வதற்கே சகவாழ்வு அரசியலை நடாத்த அரசு விரும்புவதாகப் பிரதமர் அறிவித்தார். ஜனாதிபதியும் அதனை வரவேற்றார். துரதிஷ்டவசமாக அது தொடர்பான பேச்சுக்கள் வெற்றியடையவில்லை. மேலும் அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் ஜனாதிபதிக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இதன் பிரதிபலிப்பே அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதற்கான காரணம் எனக் கூறவேண்டியுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுக்களை ஜனாதிபதி விரும்பவில்லையென்று தமிழ் அரசியல் கட்சிகள் சில கூறுகின்றன. அதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

அவ்வாறான குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. ஜனாதிபதி பதவிக்கு வரும்போது இனப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வேன் என வாக்குறுதியளித்தார். அதன்படி 1995ம் ஆண்டு இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வுப் பொதியை முன்வைத்தார். அதில் சிறுபான்மையினருக்கு சாதகமான பல அம்சங்கள் இருந்தன. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.க. சிறுபான்மையினருக்கு சாதகமான விடயங்களை எதிர்த்தது. அதன் பின்னர் பல மாற்றங்களைச் செய்தபின் 2000ம் ஆண்டில் ஒரு தீர்வுப் பொதி அப்போதைய அரசினால் முன்வைக்கப்பட்டது. அதையும் நடைமுறைப்படுத்த ஐ.தே.க. ஒத்துழைப்பு வழங்கவில்லை. எனவேதான் சமாதானப் பேச்சுக்கள் இழுத்தடிக்கப்பட்டன. சமாதான முயற்சியில் ஜனாதிபதி பங்களிப்புச் செய்யவில்லை என்று கூறுவது எந்தவகையிலும் நியாயமற்றது.

எனினும் சமாதானத்துக்கான யுத்தம் என்ற கோஷம், பொதுஜன ஐக்கிய முன்னணி எடுத்த இராணுவ முனைப்புகள் மூலம் யுத்தத்திலும் வெல்ல முடியாது. சமாதானத்தையும் பெற்றுக்கொடுக்க முடியாது போய்விட்டது. குறிப்பாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் நடைபெற்ற வைபவரீதியான நிகழ்வுகள் மக்கள் மனதைப் பாதித்தன. இதற்கும் ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும். எனினும் தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான சில நடைமுறைகளில் ஏற்பட்ட சில பக்கச்சார்பான விடயங்களை ஜனாதிபதி விமர்சித்தார். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தனது அரசியல் நடவடிக்கைகளை இணக்கப்பாட்டுடன் சாதுரியமாக மேற்கொள்ளாது விட்டமையே இன்றைய சிக்கலுக்குக் காரணம்.

தற்போதைய அரசாங்கம் புலிகளோடு புரிந்துணர்வு உடன்படிக்கை செய்ததனால் யுத்தம் நிறுத்தப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் தாற்பரியம் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

புரிந்துணர்வு உடன்படிக்கையால் யுத்தம் நிறுத்தப்பட்டது உண்மைதான். சமாதானத்தை விரும்பும் எவருக்கும் இது தேவையான ஒன்றே. ஆனால் இவ்வுடன்படிக்கையில் சில குறைபாடுகளும் உண்டு. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் அரசியல் படுகொலைகள் பல நிகழ்ந்துள்ளன. சிறுவர்களை போருக்குத் திரட்டும் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான குளறுபடிகள் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. கடல்வலயம் தொடர்பான பிரச்சினை சேர்க்கப்படவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வரும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது பற்றி உடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அதனால் இந்த மாவட்டங்களுக்கு கண்காணிப்புக் குழு போகமுடியாத ஒரு நிலை உண்டு.

மேலும் நோர்வே சமாதான அனுசரணையாளராகத் தொழிற்படும் அதேவேளை கண்காணிப்புக் குழுவிலும் தலைமை தாங்கி நிற்கின்றது. அனுசரணைச் செயற்பாடு வேறு. கண்காணிப்புச் செயற்பாடு வேறு. இவ்விரட்டைப் பாத்திரத்தை, ஒரே நாடு வகிப்பதனால் கண்காணிப்புத் தொடர்பான விடயங்களில் கண்டிப்பான தீர்மானங்களை மேற்கொள்ள நோர்வே தயங்குகின்றது. காரணம் கண்டிப்பான தீர்மானங்களால் தனது அனுசரணை நிலைமைக்கு பாதிப்பு ஏற்படலாமென்ற அச்சமே. எனவே இரு பாத்திரங்களையும் ஒரேநாடு வகிப்பது ஒரு பெரிய குறைபாடு. இது ஒரு அபூர்வமான விடயமும் கூட. கடந்த கால நடவடிக்கையில் கண்காணிப்புக்குழு விமர்சனத்துக்கு உள்ளானதற்கு இதுவே காரணம்.

அரசு முன்னெடுத்த சமாதானப் பேச்சுக்கள் எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளனவென்று கூறுவீர்களா?

இதுவரை 6 சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் முக்கியமான விடயங்கள் பேசப்பட்டுள்ளன. மக்களின் அன்றாட வாழ்வு தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன. யுத்த பூமியை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் பற்றியும் பேசப்பட்டுள்ளது. அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களை ஆராய ஓர் உபகுழு நியமிக்கப்பட்டது. ஆனால் அக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமே கூடவில்லை. அத்துடன் 6 சுற்றுப் பேச்சுக்களிலும் கண்ட இணக்கப்பாடுகளில் சில அமுல் செய்யப்படவில்லை. இனப்பிரச்சினை ஒரு நீண்டகாலப் பிரச்சினை. ஒரே இரவில் தீர்க்கக்கூடிய ஒரு பிரச்சினையல்ல.

நிரந்தரமான ஒரு சமாதானத்தைக்காண இன்னும் நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

தற்போதைய பேச்சுவார்த்தையில் அரசு, புலிகள், நோர்வே ஆகிய மூன்று பாத்திரங்கள் ஈடுபட்டுள்ளன. பேச்சுவார்த்தை பூரணமாக பயனளிக்க மற்றைய இனம் சார்ந்த கட்சிகளும் அமைப்புக்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென்ற கோரிக்கை தற்போது வலுவடைந்துள்ளது. அதைப் பற்றி என்ன கூற விழைகின்றீர்கள்?

முஸ்லிம்கள் தனித்தரப்பாக தங்களது உரிமைகளுக்காகப் பேசவிழைவது நியாயமான கோரிக்கை. சிறுபான்மை இனங்களுள் அவர்களும் தனித்துவமான ஒரு முக்கிய இனம். அவர்களது இருப்பு, உரிமைகள் தொடர்பான விடயங்கள் கட்டாயமாகத் தீர்வம்சங்களில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்நாட்டு முஸ்லிம்கள் மத, கலாசார ரீதியாக வேறுபட்டிருந்த போதும், மொழியால் தமிழர்களோடு இணைக்கப்பட்டவர்கள். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமது மத, கலாசார விடயங்களை மட்டும் பேணிக் கொண்டு தமிழர்களோடு இணைக்கப்பட்டவர்கள். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமது மத, கலாசார விடயங்களை மட்டும் பேணிக் கொண்டு தமிழர்களோடு சகோதர மனப்பாங்குடன் ஒன்றுபட்டு வாழ்ந்தவர்கள். ஆரம்ப காலத்திலே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருந்த இன ரீதியான இணக்கம் அரசியல் ரீதியான பிழையான நடவடிக்கைகளால் பிணக்குகளை ஏற்படுத்தியது.

காலத்துக்குக் காலம் ஆட்சியிலிருந்த அரசுகள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்க பல நடவடிக்கைகளை எடுத்தன. அத்துடன் தமிழர்களின் நலனுக்காக தோன்றிய தமிழ் இயக்கங்கள் தமிழர்களையே மையமாகக் கொண்டு குரலெழுப்பின. போராட்டம் நடத்தின. முஸ்லிம்களும் தமிழ் பேசும் இனம் என்பதை எண்ணாது புறக்கணித்துச் செயற்பட்டன. இதன் விளைவு முஸ்லிம் சமூகம் எந்தத் தமிழ் மகனையும் தமது அரசியல் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளாத ஒரு துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே இன்றைய காலகட்டத்தில் இந்நாட்டு முஸ்லிம்கள் தமது உரிமைகளைப்பெற குரல் கொடுப்பது முற்றிலும் நியாயமானதே. முஸ்லிம் மக்கள் இந்நாட்டில் ஒரு தேசிய இனம் அல்லவென்று வாதிடுவதும் அவர்களுக்கு என்ன உரிமை என்று வினா எழுப்புவதும் எந்த வகையிலும் நியாயமற்றது.

சமாதானப் பேச்சில் தமிழ் மக்களின் சார்பாக புலிகள் மட்டுமே பங்குபற்றுகின்றனர். தமிழர் கூட்டமைப்பும் புலிகளே ஏகப்பிரதிநிதிகள் எனக் கூறுகின்றனர். இந்த நிலைப்பாடு எவ்வளவு தூரம் சரியானது?

இது தொடர்பாக சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்எல்.எப், விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகிய ஆறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்தப் பேச்சவார்த்தையில் இடம்பெற்ற உடன்படிக்கையில் ஆறு தமிழ்க் கட்சிகளும் தமிழர் சார்பான தூதுக்குழு (Tamil deligation) என்றே ஒப்பமிட்டனர்.

விடுதலைப் புலிகள் தொடர்ந்து போரை நடத்தியதற்காக தமிழர் கூட்டமைப்பு தற்போதைய பேச்சுவார்த்தைக்கு புலிகளை ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டாலும் அவற்றுள் சில கட்சிகளுக்குள்ளே கருத்து வேறுபாடு இருக்கவே செய்கின்றது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்போர் ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள். ஜனநாயக கட்டமைப்பில் மக்களை யார் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமென்ற விடயம் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆயுத பலத்தால் நிர்ணயிக்கப்படும் விடயமில்லை. ஈழ விடுதலைப் போராட்டத்துக்காக எல்லா இயக்கங்களும் தியாகம் செய்துதான் உள்ளன. ஏகப்பிரதிநிதிகள் என்ற வார்த்தைப் பிரயோகம் ஜனநாயக கோட்பாடுகளுக்கு (Undemocratic) முரணானது. அத்துடன் (Ob Solete) பழைமைவாதமும் கூட.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற்று தமிழ் ஈழத்தை அமைக்கும் நோக்குடனே ஆரம்பத்தில் போரிட்டனர். தற்போது ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வதாகப் பேச்சுவார்த்தை மேசையில் அறிவித்தனர். உண்மையில் புலிகள் ஈழக்கோரிக்கையை கைவிட்டு விட்டனர் என்று கூறலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் அறிவிக்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வைப் பற்றி பேசத் தயார் என்றே அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உள்ளக சுயநிர்ணய உரிமையைப்பெறும் அடிப்படையில் அமையக்கூடிய ஒரு சமஷ்டி முறையான (to Explore federal structure based on internal self determination) தீர்வைப்பற்றிப் பேச இணங்கினர். ஓஸ்லோ பிரகடனத்தில் இது பற்றிய புலிகளின் நிலைப்பாடு மிகத் தெளிவாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

"விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை முன்வைத்த ஆலோசனைக்கமைய, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்புலமாகவுள்ள பிரதேசங்களில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் கீழ், ஐக்கிய இலங்கையில் சமஷ்டி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட தீர்வு பற்றி ஆராய்வதற்கு எல்லாத் தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இத்தீர்வு எல்லா இனங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதானதாக இருக்க வேண்டுமென்பதை இத் தரப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்."

இனப்பிரச்சினை தொடர்பான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்கின்றது. இதற்கு முன் நடந்த பல பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து பயனற்றுப்போயின. ஆனால் தற்போதைய பேச்சுவார்த்தை பயன்தரும் வகையில் அமைய, அரசை பேச்சு மேசைக்கு கொண்டு வருவதற்கு புலிகளின் இராணுவ பலமே காரணம் என்று கூறலாமா?

ஆம். அது உண்மை தான். அரசைப் போலவே விடுதலைப் புலிகளும் இராணுவ பலத்துடன் இருக்கின்றனர். எனினும் இந்த ஆயுதபலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்தளவு பூர்த்தி செய்யும் என்ற கேள்விக்கு இன்னும் பதில் இல்லை. மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் மேலும் மேலும் பலவீனமடைந்தே செல்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு திம்புக் கோட்பாட்டின்படி அமைவதே சிறந்தது என்பது சில புத்தி ஜீவிகளின் கருத்து. இது எந்தளவில் இப்போது சாத்தியமாகும்?

திம்புப் பேச்சுவார்த்தை நடந்த கால கட்டத்தில் அந்தக் கோட்பாடு பொருத்தமெனக் கருதப்பட்டது உண்மைதான்.

திம்புக் கோட்பாடு ஒரு யதார்த்தத்தின் பிரதிபலிப்பு.

1. இலங்கையில் தமிழர்களை ஒரு தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரித்தல்.
2. இனங்காணப்பட்ட தமிழர் தாயகமொன்றை அங்கீகரித்தலும் அதன் பிரதேச ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தலும்.
3. மேலே உள்ளவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் பராதினப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
4. இலங்கைத் தீவைத் தமது நாடாகக் கருதும் அனைத்துத் தமிழர்களினதும் குடியுரிமையையும் மற்றும் ஏனைய அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் அங்கீகரித்தல்.

ஆனால் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கிடைக்க வேண்டுமெனின் ஒஸ்லோ பிரகடனத்தை மையமாக வைத்து முன்னெடுத்துச் செல்வதே நடைமுறைக்குச் சாத்தியமான ஒன்று.

அண்மையில் இடம்பெற்ற ஸ்ரீல.சு.க. – ஜே.வி.பி. உடன்படிக்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக அமையும் என்பது பரவலான கருத்து இதைப்பற்றி என்ன கூறலாம்?

உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டவை சு.க.வும் ஜே.வி.பி.யும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு அமைய வேண்டுமென்பது சு.க.வின் கருத்தாக இருந்து வந்துள்ளது. ஆனால் ஜே.வி.பி. சில சந்தர்ப்பங்களில் ஒவ்வாத சில கருத்துக்களை வெளியிட்டபோதும் அரசியலில் ஜனநாயக நீரோட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ளத் தமது நிலைப்பாட்டை காலத்துக்குக் காலம் விட்டுக் கொடுத்து வந்துள்ளது. மாகாண சபை அமைப்பை எதிர்த்து வந்த ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்று பிரதிநிதிகளையும் தெரிவுசெய்துள்ளது. தற்போதைய கூட்டு உடன்படிக்கை அம்சங்களில் இனப்பிரச்சினைக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே தனது நிலைப்பாட்டை மாற்ற முன்வரலாம். அதனால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாது என்றே கருத வேண்டியுள்ளது. பொறுத்திருந்து தான் அதைப் பார்க்க வேண்டும்.

நன்றி : தினகரன் வாரமஞ்சரி (25-01-2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல தரப்பிலும் எமது உரிமைகளின் குரல் எழும்ப வேண்டும்....



– ஷபீனா முகமட் இப்ராஹிம் –
பெண்கள் அபிவிருத்தி அதிகாரி, அல்-இன்சானியா சமூக அபிவிருத்தி நிலையம்

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அடிமட்ட மக்களே. இருக்க இடமின்றி, அகதி முகாம்களிலும், உறவினர்களின் வீடுகளிலும், ஊர் விட்டு ஊர் சென்று இன்னும் சொந்த இடத்துக்குத் திரும்பமுடியாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தமது சொந்த இடத்துக்கு திரும்பி வாழவேண்டும் என்பதில் அனைவரும் அக்கறையோடு இருக்கவேண்டும். யுத்த நிகழ்வின்பின்னால் தீடீரென பெண்களின் மீது சுமத்தப்படும் பொறுப்புகள் அவர்களின் மனநிலையைப் பாதிப்பதோடு, சுமைகளை கட்டியிழுப்பதற்கான வசதிவாய்ப்புகளற்று இருக்கிறார்கள். அதிகமாக கணவனை இழந்த பெண்கள், ஊனமுற்ற கணவனைக்கொண்ட பெண்கள் இவ்வாறான நிகழ்வுப்போக்குகளுக்கு முகம்கொடுக்கிறார்கள். குறிப்பாக முஸ்லீம் பெண்கள் தமது சமூக கட்டுக்கோப்புகளுக்கு வெளியே வந்து இவ்வாறான வாழ்கையில் ஈடுபடும்போது அதிகமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டியிருக்கிறது.

யுத்தத்தின் பின்னான பெண்களின் வாழ்வியலில் தனித்து நிற்கும் பெண்களினால் சமூக, அரசியல் வேலைகளில் ஈடுபடுவதற்கான சுய தீர்மானங்கள் எடுக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கும்போதும் அது இன்னும் ஆண் அதிகாரத்தினால் இருட்டிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. அதாவது பிரச்சினைகளைத் தீர்க்கும் மட்டங்களில் பெண்களின் பங்களிப்பு 50வீதமாக இருக்கவேண்டும், சகல மட்டங்களிலும் பெண்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும். வேலைவாய்ப்புக்காக பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வியாபார இலாப கலாச்சாரத்தை இல்லாமலாக்கவேண்டும். குடும்பத்தலைமைகளில், தனித்த பெண்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயதொழில்
வேலைவாய்ப்புத்திட்டங்களை
வழங்கவேண்டும். இவ்வாறான
வேலைத்திட்டங்களை தேசிய
அளவில் அரசினாலும், அரசசார்பற்ற
நிறுவனங்களாலும்
செயற்படுத்தப்படவேண்டும். அரச
சார்பற்ற நிறுவனங்களின்
செயற்பாடுகள் பெண்களை
முன்னுக்கு கொண்டுவருவதற்கான
உந்துசக்தியாக இருக்கின்றபோதும்
சமூகத்துக்குள் பெண்களை
முழுமையாக இணைத்துக்கொள்ள
முடியாமல் போகின்றது.

அல்இன்சானியா நிறுவனத்தில்
பெண்கள் தொடர்பான
வேலைத்திட்டத்திற்கு
இணைப்பாளராக இருக்கிறேன்.
எமது நிறுவனத்தினால் யுத்தத்தின்
பின்னான பெண் உளரீதியான
விருத்தி, பெண்கள்
எழுத்தறிவூட்டல், விதவைகளுக்கு
சுயதொழில்வாய்ப்புகளை
உருவாக்குதல், பெண்களை
சமூகசேவையில் ஈடுபடுத்தல்,
இனங்களுக்கிடையிலான
உறவுகளை வளர்ப்பதில்
பெண்களை ஈடுபடுத்தல்,
பிரச்சினைகளை அல்லது
சிக்கல்களைத் தீர்க்கும் மட்டங்களில்
பெண்களை இணைக்க
முயற்சியெடுத்தல் போன்ற
வேலைத்திட்டங்களை நான் சார்ந்த
நிறுவனத்தின் ஊடாக
செயலாற்றுகின்றேன். கூடுதலாக
முஸ்லீம் சமூதாயத்திற்குள்ளேயெ
இவ்வாறான வேலைத்திட்டங்களை
நடாத்துகின்றோம். மிகவும்
நெருக்கடிகளுக்கு மத்தியில்தான்
வேலைத்திட்டத்தை
செயற்படுத்தவேண்டியிருக்கிறது.
திடீரென எதையும்
உடைத்துக்கொள்ள முடியாத
சூழ்நிலையில் மிகவும் மெதுவாகவே
வேலைத்திட்டத்தை
செயற்படுத்துகின்றோம்.

பொதுவாக இந்த சமாதானச்
சூழ்நிலையில் மக்களை,
பெண்களை அணிதிரட்டுவது
கொஞ்சமேனும் இலகுவானதாக
இருக்கின்றது. அவர்களை
இணைத்து அனைத்து தரப்புகளிலும்
பெண்களின் பங்களிப்பை

"யுத்தத்தின் பின்னான பெண்களின் வாழ்வியலில் தனித்து நிற்கும் பெண்களினால் சமூக, அரசியல் வேலைகளில் ஈடுபடுவதற்கான சுய தீர்மானங்கள் எடுக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கும்போதும் அது இன்னும் ஆண் அதிகாரத்தினால் இருட்டிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது"

பலப்படுத்தவேண்டும். எந்த
வன்முறையான சூழ்நிலையிலும்
அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே.
ஆகவே எந்த பேச்சுவார்த்தை, தீர்வு
முயற்சிகளில் பெண்களின்
பங்களிப்பு அவசியம்.

தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கும்
பேச்சுவார்த்தை தொடரில்
பெண்களுக்கான உபகுழுவில்
அரசதரப்பாக முஸ்லீம் பெண்கள்
இருவர் பங்குபற்றியிருந்தனர். அது
வரவேற்கத்தக்கதொன்றாகும்.
ஆனால் முஸ்லீம் பெண்களின்
அபிலாசைகள், அவர்களின்
முன்னோக்குகள் பற்றி எவ்வாறு
தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் என்பதில்
ஐயப்பாடே.. ஆனால் சந்திப்புகள்
தொடர்ந்திருந்தால் அவை
பேசப்பட்டிருக்கலாம்.
இடைநிறுத்தப்பட்டது கவலைக்குரிய
விடயமே.

அடிக்கடி கிழக்கு மாகாணத்தில்
நடைபெறும்
இனங்களுக்கிடையிலான
வன்முறைகளின் பின்னால் பலமான
அரசியல் இலாபங்கள்
பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த
வன்முறைகளில்
பாவிக்கப்படுபவர்கள் கூலித்தொழில்
செய்யும் மக்களாக
காணப்படுகின்றனர். கீழ்மட்டத்தினர்
தூண்டப்படுகின்றனர்.
பேச்சுவார்த்தைகள் அனைத்தும்
மேல்மட்டங்களில் நடைபெறுகின்றது.
பெண்களைப்போலவே... அதிகமான
முஸ்லீம் பெண்கள்,
தமிழ்ப்பெண்களோடு இணைந்து
செயற்படவே விரும்புகிறார்கள்.
இந்தச் சமாதானச் சூழ்நிலையிலும்
அதற்கான வழிவகைகளை
அமைத்துக்கொள்வதில் சிக்கல்கள்
ஏற்படுகின்றது.

இந்தச் சமாதானச் சூழ்நிலையில்
அச்சம் இல்லாத நிலைமை
காணப்பட்டாலும், திடீரென
இடைநிறுத்தப்பட்டிருக்கும்
பேச்சுவார்த்தைகளினால் யுத்தம்
மீண்டும் உருவாகிவிடுமோ என்ற
பயபீதியில் இருக்கிறார்கள். யுத்த
காலத்தில் நடந்த நிகழ்வகள்,
யுத்தமற்ற காலத்திலும்
தொடருகின்றது. குறிப்பாக வரி
அறிவிடுதல், வாகனங்கள்
கடத்தப்படுதல், காணாமல் போதல்,
மீன்பிடி தொழிற்பொருட்கள்
காணாமல் போதல், பயமுறுத்தல்கள்
என்பவை
நடந்துகொண்டேயிருக்கிறது.
அண்மையில் காவத்தைமுனையில்
நடந்த சம்பவம்... வன்முறையில்
கணவனை இழந்து மூன்று
பிள்ளைகளோடு வாழும் பெண்
திடீரென சுகயீனமுற்று
படுத்தபடுக்கையாகயிருக்கிறார்.
சிறிய வயதுடைய மூத்த மகன்
மீன்பிடித்து குடும்பத்தை
கவனித்துவந்தான். ஒருநாள் வள்ளம்,
வள்ளத்திலுள்ள பொருட்கள்
பறிமுதல் செய்யப்பட்டது.
இதுதொடர்பாக பள்ளிவாசல்
குழுக்கள் ஊடாக மற்றத்தரப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தையை மேற்கொண்டு ஒரு மாதத்தின் பின்னர்தான் பொருட்கள் மீளக்கிடைத்தது. ஆனால் பொருட்கள் அனைத்தும் பாவனைக்கு உகந்ததாக இருக்கவில்லை. இவ்வாறான நிகழ்வுகள் அதிகம் நடைபெறுகின்றது. இதுதான் சமாதானச் சூழ்நிலை. அதிகமான பிரச்சினைகளை மறைக்கப்பட்டுபோகின்றது. வெளிவருவதில்லை.

ஆளுகின்ற எந்தத்தரப்பாக இருந்தாலும் சரி அனைத்து மக்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும். ஏற்கனவே ஒடுக்குமுறையினால் யுத்தங்கள் நடந்தது அதுபோல் மீண்டும் நடக்காமல் பாதுகாக்கவேண்டியவர்களாக அனைத்து தரப்புகளும் நடந்துகொள்ளவேண்டும். மதங்கள், கலாசாரங்கள், அரசியல் உணர்ச்சிகள் மதிக்கப்படவேண்டும். பெருவாரியாக நசுக்கப்படுபவர்கள் இரு இனத்தின் சாதாரண மக்களாகத்தான் இருக்கிறார்கள்.

தற்போது நடைபெறும் இருதரப்புகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளின் தீர்வுகள் சமஷ்டியாக இருந்தாலும், முஸ்லீம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். உயர்மட்டப்பேச்சுக்களில் பெண்களின் பங்களிப்பும் தொடரவேண்டும். அது அனைத்து விடயங்களிலும் பங்களிப்புச் செலுத்தவேண்டும். முஸ்லீம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வார்களானால் பிரச்சினைகளை தெளிவாக விளங்கிக்கொள்ளப்படும். தனித்தரப்புகள் மக்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அது ஜனநாயக ரீதியாக பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(சமாதான நோக்கு இதழுக்கான உரையாடலின்போது தெரிவித்த கருத்துக்கள்)

இலங்கையின் சமாதானச் செயல்முறை: முரண்பாட்டு நிலைமாற்றக்கருவியாக மனித உரிமைகளின் முக்கியத்துவம்

– அசங்க வெலிகல –

இலங்கை ஒரு தீர்மானகரமான நாற்சந்திக்கு வந்துள்ளது. பல இடையூறுகள், அழுத்தங்கள் மற்றும் பதற்றங்கள் இருந்தபோதிலும், தற்போதைய போர் நிறுத்தம் ஒன்றரை வருடகாலம் நீடித்துள்ளது என்பதோடு, இருபது வருடகாலத்துக்கு முன்னர் மோதல்கள் வெடித்ததிலிருந்து இன்றுவரை ஒரு நீண்டகால யுத்தநிறுத்தமாகவுள்ளது. கடந்த வருடம் முழுவதும் பிரதான தரப்பினர்களிடையே நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காரணத்தால், பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வொன்று கிட்டுமென்ற பெருமளவு நம்பிக்கை நிலவியது. ஆயினும் இந்த வருட ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டன. இது பல்வேறு காரணங்களின் நிமித்தம் இடம்பெற்றபோதிலும், தற்போது நேரடிப்பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதில் ஒரு நியாயமான நம்பிக்கை உள்ளது.

2002 மற்றும் 2003 இல் இடம்பெற்ற ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகளில் சமாதானச்செயல்முறையில் முதல்கட்டமாக முரண்பாட்டை "யுத்தமற்ற" சூழலாக மாற்றும் அரசியல் வாய்ப்புடன் கூடிய இன்றைய நிலை உருவாக்கப்பட்டது. ஆயினும், இலங்கை சமூகத்தில், நிலைதகவு மற்றும் சட்டநிலைத் தகவுள்ள ஓர் அரசினுள் பல்லின தனித்துவ அடையாளங்களுக்குச் சமாதானமான இடமளிப்பது குறித்த பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வுகாணத் தொடங்கவுமில்லை என்பதால் இது ஒரு "சமாதானமற்ற சூழலும்' ஆகும். ஆகவே, நேரடிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இடம்பெறுமென்ற நம்பிக்கையோடு, "யுத்தமில்லாத சூழல்' அரசியல் நிலைமைகளுள் ஜனநாயக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் உரையாடல் கண்ணோட்டத்தில் விரும்பத்தகாத விடயங்கள் இடம்பெறக்கூடும் என்ற பீதியும் உள்ளது.

உண்மையில், சமாதானச் செயல்முறையின் குறிக்கோளாக மனித உரிமைகளை முன்நிலைப்படுத்துவதும், அதன் இறுதி விளைவும் ஆரம்பத்திலிருந்தே இலங்கைச் சிவில் சமூகக் குழுக்களாக வெளியிடப்பட்டுவந்த கரிசனைக் கவலையாகும். ஆயினும், தூரதிஷ்டவசமாக, இலங்கை அரசாங்கமோ, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரோ (எல்ரீரீஈ) இக்கரிசனையை வெளிப்படுத்தவில்லை. இலங்கை அரசாங்கமென்பது கட்டமைப்பு அதிகாரத்துவவாதம், மத்திமப்படுத்தல்வாதம், மற்றும் விளைதிறனின்மை போன்ற குணாம்சங்களைக் கொண்ட அரசின் முகவர் நிலையமாகும். அது செயற்படுவது பெரும்பான்மைவாத மற்றும் வாடிக்கையாளர் திசைமார்க்க, ஊறிப்பரவும் அரசியல் மெய்ப்பொருள் மூல ஆய்வுவாதத்தினுள் செயற்படுவதாகும். எல்ரீரீஈ தமிழர் அரசியல் போராட்டத்தில் வன்செயல் ஆயுதப்போராட்டக் கட்டத்தில் ஆதிக்கம் வகிக்கத்தொடங்கி, தனது ஆரசியல் ஆதிக்கம் மற்றும் நிர்வாக அதிகார மையக்கோரிக்கையை தனிநபர் உரிமைகளை மதிக்காத, இனத்துவ-தேசியவாத உரையாடலுள் சூழமைவுப்படுத்துகின்றது.

இவ்வாறாக, இருதரப்பினரும் கூடுதலான மனித உரிமை நியமங்களை ஏற்றுச் செயற்படவேண்டும் என்ற சிவில் சமூக அழுத்தங்கள் குறித்து திறந்த மனப்பான்மையுடன் செயற்படமுடியாத அளவுக்கு, இத்தகைய நியமங்கள் சம்பந்தமாக அவர்களது அணுகுமுறைகள் மயக்கம் நிறைந்தவையாக அமைவது ஆச்சரியமில்லை. இச்சூழமைவில்தான், எதிர்கால இலங்கை நீதியான, ஜனநாயக மற்றும் சமாதானமுறையில் அமையக்கூடியதாக சமூக, அரசியல் மற்றும் அரசியலமைப்பு நிலைமாற்றத் தேவைகளை நிறைவேற்றும் பயனுள்ள மூலமெய்ப்பொருள் ஆய்வு அல்லாத கருவியென்ற வகையில் மனித உரிமைகள் மிகப்பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

தீர்வுக்குப் பிந்திய இலங்கையில் பொதுச்சேவை விநியோகம் குறித்த நிறுவனக் கட்டமைப்புகளை வடிவமைப்பதில், அனேகமாக அரசின் சகல அம்சங்களுமே மீள்-மதிப்பீடு செய்யப்பட்டு, மீள் வடிவமைப்புச் செய்யப்படல் வேண்டும். அரசின் பன்மைத்துவ இனத்துவ-அரசியல் மற்றும் சமூக அத்திவாரங்களுக்கு யதார்த்த பூர்வமான, அரசியலமைப்பு வெளிப்பாட்டை வழங்குவதற்கு இந்த மீள்கட்டமைப்புக்கு சமஷ்டிக்கோட்பாடுகள் அவசியமாயின், எதிர்கால அரசின் நிறுவன அமைப்பு தற்போதிருப்பதைவிடப் பாரதூரமாக வேறுபடும். இந்த முடிவிடத்துக்குச் செல்லும் வழியைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் மிகப்பெரும் முக்கியத்துவத்தைக் கொள்வதற்கான காரணம் சர்வதேச அனுபவம் வழக்கமாக இடைக்கால ஏற்பாடுகள் இறுதி அரசியல் கட்டமைப்புகளின் வடிவம் மற்றும் இலட்சணங்களைக் கொண்டவையாக இருப்பதாகும். உண்மையில் நேரடிப்பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டதற்கான முக்கிய பிரச்சினையும் மற்றும் அவை மீண்டும் ஆரம்பிக்கையிலான நடுநாயகமான பிரச்சினையுமாக விளங்குவது இலங்கையின் வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகமொன்றை ஏற்படுத்துவதாகும். அரசாங்கம் இந்த வருடம் ஜூலை மாதத்தில் தனது பிரேரணைகளை ஒரு கலந்துரையாடல் ஆவண வடிவில் சமர்ப்பித்தது. எல்ரீரீஈ அமைப்பு பாரிஸ் மற்றும் டப்ளினில் தமது அரசியலமைப்பு மற்றும் சட்ட மதியுரைஞர்களுடன் ஆலோசனை நடாத்தி 2003 நவம்பரில் தமது பதில் பிரேரணைகளை சமப்பித்தது.

சாராம்சத்தில் தேவைப்படுவது யுத்தத்தினால் அழிவுற்ற வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைப் பொறுப்பேற்று நடத்துவதற்கான நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதாகும். எல்ரீரீஈ அமைப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகளென்ற வகையிலும், சிங்களப் பெரும்பான்மையினவாத அரசுக்கெதிராக ஆயுதப்போராட்டத்தை நடத்தியோர் என்ற வகையிலும் இக்கட்டமைப்பில் பிரதான பாத்திரத்தைக் கோருகின்றது. தமிழ் அரசியல் சமூகத்தின் சில பிரிவுகளும், எல்ரீரீஈ நிர்வாகத்தின் கீழ் தமது தனித்தன்மைவாய்ந்த அடையாளத்துக்கும், உடல்ரீதியான பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலேற்படுமென்ற பீதியிலுள்ள கிழக்கு மாகாண முஸ்லீம்களும் எல்ரீரீஈ அமைப்பின் இந்த உரிமைகோரலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்,இடைக்கால நிர்வாகமொன்றை ஏற்படுத்துவது அரசியலமைப்பு ரீதியாக எவ்வளவு பொருத்தமானது என்னும் விடயத்தில் சில பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதேவேளையில் அது தமிழ்ப்போராளிகள் மற்றும் எல்ரீரீஈ அமைப்புக்கு எதிரான தனது தேசியவாத, வாக்காளர்களிடமிருந்து எதிர்ப்புகளை எதிர்நோக்குகின்றது. புனர்நிர்மாணம் போன்றவற்றுக்கு மேலதிகமாக இடைக்கால நிர்வாகம் தனது நியாயாதிக்கப் பிரதேசத்தினுள் நீதி நிர்வாகம் மற்றும் பொலிஸ் பணிகள் என்பவற்றையும் பிரமாணப்படுத்துதல் வேண்டும். இந்த அம்சங்களிலேயே இடைக்கால கடட்மைப்புகளும், செயல்முறைகளும் இறுதித்தீர்வின் மீது தீர்மானகரமான செல்வாக்கைச் செலுத்தும் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தினுள் பெரும்பான்மைத் தமிழர், மற்றும் சிறுபான்மைச் சிங்களவர்கள் மற்றும் முஸ்லீம் இனங்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் ஐக்கிய (அல்லது பகைமையுணர்வு) அரசியல் உறவுகள் மற்றும் தெற்கின் சிங்களப் பெரும்பான்மை மத்திய அரசாங்கத்துக்கும் மற்றும் பிராந்திய அரசுக்குமிடையிலான உறவுகளே உள்மைய அரசியல் பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவோர் எவ்வாற இறுதி அரசியல் கட்டமைப்புகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிப்பர் என்பதில் செல்வாக்குச் செலுத்துபவையாகும்.

முன்பே கூறியதுபோன்று, மனித உரிமை நியமங்களுக்கான அர்ப்பணிப்புணர்வுடன் இந்தக் கட்டமைப்புகளை உருவாக்குவது அவற்றுக்குப் பொறுப்பானவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாத விடயமாகவிருக்கலாம். உண்மையில் அரசியலமைப்புத் தடைகளை வெற்றிகொள்ளும் நோக்கில் தற்போது முன்வைக்கப்படும் கெல்ஸன் எண்ணப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சட்டவாதங்கள் அரசாங்கம் தாம் அவசியமென்று எண்ணுவதைச் சாதிப்பதற்கு ஜனநாயகமற்ற நீதிசார் தத்தவங்களையும் பயன்படுத்தக்கூடுமென்பதைக் காட்டுகின்றது. எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படுகின்றது. தாம் அதற்குப் பொறுப்பல்லவென்று எல்ரீரீஈ அமைப்புத் தெரிவித்தபோதிலும், அதை எவரும் நம்புவதில்லை. சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் இயன் மார்ட்டின் சமாதானச் செயல்முறைக்கான மதியுரைஞராகச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களால் நியமிக்கப்பட்டபோது சிவில் சமூகக்குழுக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆயினும் எமது வழக்கப்படி, இரு தரப்பினரதும் உடன்பாட்டின்பேரில் அமையவிருந்த அனைத்துமடங்கும் மனித உரிமைகள் தொகுதிக்கான அவரின் திட்டம் ஒரு வெறும் பிரகடனமாகக் குறைவடைந்தது. அதைப் பற்றி இப்பொழுது எவரும் பேசுவதும் கிடையாது. ஆகவே, சமாதானச் செயல்முறையை ஆட்சிசெய்யும் அரசியல் தார்மீகமாக மனித உரிமை நியமங்களை அறிமுகஞ்செய்து, அவற்றை எதிர்கால அரசின் அரசியலமைப்பில் உள்ளடக்கும் பாரிய சவால் இன்னமும் ஏற்கப்படாத ஒன்றாகவேயுள்ளது. இவ்வாறாக, கடந்த காலத்தைப் பற்றிச் சிந்தித்து, அதைக் கையாள உதவக் கூடிய மிகவும் அனுகூலமானதும், பிரச்சினைகளற்றதுமான ஒரு கருவி முழுக்க முழுக்கப் பயன்படாத நிலையிலுள்ளது. இலங்கையைப் போன்ற கலாசாரப் பல்லினத்தன்மை மற்றும் புராதன நாகரீகங்களைக் கொண்ட அரசியல் சமூகங்களில் இனத்துவதேசியவாத, ஒருவரையொருவர் உதாசீனம் செய்யும் வகையிலான வரலாறு எழுதும் போக்குகள் போன்றவற்றால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளன. வரலாறு முரண்பாட்டை நிலைமாற்றம் செய்வதில் அத்தனை பயனுள்ள ஒன்றல்ல. மறுபுறத்தில், தவறாளிகள் குற்றவியல் பொறுப்பை ஏற்கவேண்டுமென்று வற்புறுத்துவது, பிரத்தியேகமானது முரண்பாட்டில் இருபக்கத்திலும் தலைமைத்துவப் பாத்திரங்களில் உள்ளவர்களை வலியுறுத்துவது சமாதானச் செயல்முறை அனைத்தையும் குடைகவிழ்ப்பதாக அமையக்கூடும். இவ்வாறாக ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வின் பயன்பாடு சார்ந்த பாரிய நன்மை சில விருப்புத்தெரிவுகளுக்கு இடமளிக்காத ஒன்றாகவிருக்கலாம்.

ஆகவே இலங்கையின் சிவில் சமூகம், தெளிவாக வரையறுக்கப்பட்ட மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் ஒரு பாத்திரத்தையும், நிகழ்ச்சி நிரலையும் கொண்டுள்ளது. அது அரசியல் மாத்திரமன்றி, அரசியலமைப்பு சம்பந்தமாக அரசாங்கம் குறித்த கருத்துணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதற்கான வழிநடத்தலை மேற்கொள்ள வேண்டும். சிவில் சமூகம் இவ்வாறு செய்யவேண்டுமென்பது ஒரு நல்ல விடயமாகும். சிவில் சமூகம் சட்டத்தை மாத்திரம் ஒரு கைக்கருவியாகக் கொண்டு இயங்கும் அரசாங்கத்தைப்போலவோ அல்லது முற்றுமுழுதான அதிகாரத்தைக்கொண்டு இயங்கும் எல்ரீரீஈ அமைப்பைப் போலவோ மட்டுப்பாடுகளைக் கொண்டதல்லவென்பதே இதற்கான காரணமாகும். சிவில் சமூகம் செயற்படுவது விழிப்புணர்வூட்டல், ஆதரவுதேடல், விவாதம், சிந்தனை மற்றும் விடயங்களைத் தெளிவுபடுத்தி ஏற்றுக்கொள்ளவைக்கும் முறைகள் மூலமாகவாகும். இலங்கையின் இனத்துவப் பிரிவுக்கோட்டின் இருதரப்பிலுமுள்ளோர் பிரயோகிக்கும் அரசியல் பலத்தின் தன்மையை வைத்துப் பார்க்கும்போது அரசியல் இயக்கத்தை அதிகாரச் சிந்தனையிலிருந்து எதிர்த் திசையில் இட்டுச் செல்வதில் சிவில் சமூகம் காணும் வெற்றியே இலங்கையின் எதிர்காலத்தின் தன்மையைத் தீர்மானிக்கும் அது தன்னுடனும், தன் பிரஜைகளுடனும் சமாதானத்தைக் கடைப்பிடிக்கும் நவீன, பங்கேற்பு, உரையாடல் ஜனநாயகமாக விளங்கும், அல்லது ஒரு சிலர் அதிகாரத்தை அனுபவிக்கும் மனிதாபிமானமற்ற சர்வாதிகாரமாக உருமாற்றம் பெறுமா?

"இலங்கையின் இனத்துவப் பிரிவுக்கோட்டின் இருதரப்பிலுமுள்ளோர் பிரயோகிக்கும் அரசியல் பலத்தின் தன்மையை வைத்துப் பார்க்கும்போது அரசியல் இயக்கத்தை அதிகாரச் சிந்தனையிலிருந்து எதிர்த் திசையில் இட்டுச் செல்வதில் சிவில் சமூகம் காணும் வெற்றியே இலங்கையின் எதிர்காலத்தின் தன்மையைத் தீர்மானிக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் – முஸ்லிம் புரிந்துணர்வுக்கான புதிய முயற்சியும் வழிமுறையமைப்பும்

– தனஞ்சய ஒபேசேகர –

2002 பெப்ரவரி 22ம் திகதி அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் வடக்கு – கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் எதுவுமே தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையில் வடக்கு – கிழக்கு முஸ்லிம்கள் இவ்வாறு உதாசீனப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து அவர்கள் கவலை தெரிவிப்பதோடு, சிலர் தாம் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இரு தரப்பினர் பங்கு பற்றிய சமாதானப் பேச்சுவார்த்தைச் செயல்முறையிலும் தெளிவான முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இடம்பெறவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசின் பிரதிநிதிக்குழுவில் இடம்பெற்ற போதிலும், அவரை முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பும், ஏனைய முஸ்லிம் தலைவர்களும் மறுத்து விட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கழிந்த முதல் ஒரு சில மாதங்களுள் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கெதிராக இடம்பெற்ற வன்செயல்கள் மற்றும் கப்பம் பெறுதல் என்பவை அதிகரித்ததோடு இவற்றுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பே பொறுப்பேற்க வேண்டுமென்ற குற்றச்சாட்டும் எழுந்தது. இத்தகைய மோதல் சூழலில் 2002 ஏப்ரில் 13ந் திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில் தலைவர் பிரபாகரனுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. நீண்ட உரையாடல்களின் பின்னர் வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து இரு தரப்பின் தலைவர்களும் உடன்பாடொன்றில் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்களின் நாயகம் என்பதையும் முஸ்லிம் மக்களின் ஏனைய தேவைகளையும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சம்மதம் தெரிவித்தார். இது 1988ல் விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் ஐக்கிய நேரிய முன்னணியினரிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படை விடயங்களை ஓரளவுக்கு ஒத்திருந்தது. புதிய உடன்படிக்கையில் முஸ்லிம் அகதிகளை மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதித்தல், அவர்களின் காணிகளை மீள ஒப்படைத்தல், அவர்களுக்கெதிரான வன்செயல் மற்றும் கப்பம் பெறுதல் என்பவற்றை நிறுத்துதல் என்பவை சம்பந்தமாக ஒருமைப்பாடு காணப்பட்டது. நடைமுறை மட்டத்தில் இந்த உடன்படிக்கையை அமுல்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் பங்கு பற்றலோடு குழுவொன்றை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் தூரதிஷ்டவசமாக இன்னமும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. பிரபாகரன் ஹக்கீம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் விடயத்திலும் இருதரப்பினரும் அக்கறை காண்பிக்கவில்லை.

கிழக்கு முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்செயல்கள் தொடர்ந்ததோடு 2002 ஜூன் மாதத்தில் மூதூரில் தமிழ் - முஸ்லிம் கலவரமொன்று இடம்பெற்றதோடு, இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் மீண்டும் இனவாத வன்செயல்கள் இடம்பெற்றன. ஏப்ரல் வன்செயலுக்குப் பின்னர் திருகோணமலை விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர் எஸ். நீலனும், மஜ்லீஸ் அல்ஸ்ரா அமைப்பின் தலைவர் மௌலவி அப்துல் கரீம் அவர்களும் புதிய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர். "விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு, விடுதலைப் புலிகள் அமைப்பினரால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் இரு இன மக்களினதும் பாதுகாப்பு பாகுபாடின்றி உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்" என்று இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமுகமாக இப்பிரதிநிதிகள் இவருவரும் எதிர்காலத்திலும் கலந்துரையாடுவரென்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அது இடம்பெறவில்லை.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் அரசியலிலும் நெருக்கடிகள் தோன்றின. கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் வன்செயல்கள் காரணமாக முஸ்லிம் மக்களுக்கு எற்பட்ட பாதுகாப்பின்மை காரணமாக ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவத்துக்கும் சவால் ஏற்பட்டது. கிழக்கில் மிகவும் பலம் வாய்ந்த அடிப்படையைக் கொண்ட அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா இந்த மோதல்களை ரவூப் ஹகீமுக்கு எதிரான நம்பிக்கையின்மையைப் பிரகடனம் செய்தவதற்கு முயற்சியெடுத்தார். கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களிடையே வன்செயல்களைத் தூண்டிவிடுவதாகவும் அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. கிழக்குமாகாண முஸ்லிம் அரசியல்வாதிகளிடையிலான குத்துவெட்டுகளை நீண்ட காலம் அவதானித்த விடுதலைப் புலிகள் அமைப்பு புதிய அணுகுமுறையொன்றை எடுத்தது.

"கிழக்கு மாகாண தமிழ் - முஸ்லிம் மோதல்களுக்கான அடிப்படைக் காரணம் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யாத முஸ்லிம் அரசியல்வாதிகளின் அதிகார வெறியாகும். ஆகவே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமுன்னர் நாம் முஸ்லிம் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்தோம். முஸ்லிம் மக்களுடன் பேசி நாம் அவர்களின் உண்மையான பிரச்சினைகளை இனங்காணுவோம்" என்று விடுதலைப் புலிகளின் கிழக்கின் கட்டளைத் தளபதி கருணா மூன்றாவது மூதூர் வன்செயலின் பின்னர் பத்திரிகையாளாகளிடம் தெரிவித்தார். இதன் பிரகாரம் விடுதலைப் புலிகள் அமைப்பு முஸ்லிம் அரசியல்வாதிகளை ஓரங்கட்டி, முஸ்லிம் மக்களோடு இணைந்து அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட்டது. இது விடுதலைப் புலிகளின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மிகவும் ஆக்கபூர்வமான அபிவிருத்தியாகும். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பிரபா - ஹக்கீம் மற்றும் நீலன் கரீம் உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பு இப்புதிய அணுகுமுறையைத் தெரிவு செய்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் புதிய அணுகுமுறை குறித்துக் கலந்துரையாடுவதற்கு வடக்கு கிழக்கின் முஸ்லிம் சிவில் செயற்பாட்டாளர்கள் செப்டெம்பர் 6 மற்றும் 7ம் திகதிகளில் கொழும்புக்கு வந்தனர். சகவாழ்வு நிலையத்தினர் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்க இந்த இரு நாள் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார். இரு நாட்கள் கலந்துரையாடலின் முடிவில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் சமாதான சபையென்ற பெயரில் சிவில் நிறுவனமொன்று ஏற்படுத்தப்பட்டதோடு, அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் வடக்கு, கிழக்கு முஸ்லிம் சமாதான சபைக்குமிடையில் முதலாவது பேச்சுவார்த்தை கடந்த செப்டெம்பர் 20ம் திகதி கரடியனாற்றில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் கிழக்கின் கட்டளைத் தளபதி கருணா உள்ளிட்ட குழுவும், முஸ்லிம் சமாதான சபையின் பிரதிநிதிகளாக அதன் பொதுச் செயலாளராக எம்.ஐ.எம். மொஹிதீன் உள்ளிட்ட குழுவும் இதில் கலந்துகொண்டன. மூன்று மணித்தியாலங்கள் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இரு தரப்பினரும் பல்வேறு உடன்பாடுகளை எட்டினர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களைத் திருப்பிக் கையளித்தல், நெல் விவசாயம் மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலில் முஸ்லிம்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை அகற்றுதல், முஸ்லிம் அகதிகளை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுதல், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல் போன்ற விடயங்களில் விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புடன் அங்கு உடன்பாடு காணப்பட்டது. கிராமிய மட்டத்தில் ஒன்றிணைந்து பணியாற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு முஸ்லிம் குழு முறைமையினூடாக மக்களின் வழமையான வாழ்வு நிலையை உறுதிப்படுத்துவதற்கு இருதரப்பினரிடையிலும் உடன்பாடு ஏற்பட்டது. முக்கியமான விடயமாகும். முஸ்லிம் வர்த்தகர்களிடம் வரிவசூலிப்பது சம்பந்தமான கேள்வி எழுந்தபோது, கிழக்கின் கட்டளைத் தளபதி கருணா தமது இயக்கத்தின் மீன்பிடி மற்றும் விவசாயக் கருத்திட்டங்கள் இலாபமீட்டும் நிலைக்கு வந்ததும் உடனடியாக முஸ்லிம், தமிழ் வர்த்தகர்களிடம் வரி வசூலிப்பது நிறுத்தப்படுமென்று தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கிராமிய மட்டத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம் சமாதானக் குழுக்களை நிறுவும் நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அக்கரைப்பற்று, மூதூர், சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் ஓரளவுக்கு சமாதானக் குழுக்கள் நிறுவப்பட்டதோடு, மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை போன்ற இடங்களிலும் இக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இயைபுள்ள பிரதேசங்களில் ஏதாவது பிரச்சினைகள் தோன்றும் போது கிராமத்தில் வசிக்கும் மக்கள் ஒன்றிணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காணுவது இந்த வழிமுறையமைப்பின் நோக்கமாகும். படிப்படியாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் வேரூன்றி வருவதை அவதானிக்கலாம். கிழக்கின் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதிலும் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் ஈடுபாடு காட்டி வருகின்றது. ஏறாவூர் மற்றும் காத்தான்குடி பிரதேசங்களில் முஸ்லிம் வர்த்தகர்கள் தமிழ் பிரதேசங்களின் வியாபாரம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு தடைவிதித்திருந்தது. இத்தீர்மானம் காரணமாக ஆயிரக்கணக்கான முஸ்லிம் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டனர். இப்பிரச்சினை வடக்கு – கிழக்கு முஸ்லிம் சமாதான சபைச் செயலாளர் எம்.ஐ.எம். மொஹிதீன் கிழக்கின் கட்டளைத் தளபதி கருணாவின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது இதற்குத் தீர்வு காண்பதற்கு அவர் உடனடியாகவே நடவடிக்கை எடுத்தார். தமிழ் முஸ்லிம் மக்கள் எவ்விதத் தடைகளுமின்றித் தமது அன்றாட நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அவசியமான சூழலை அவர் அமைத்துக் கொடுத்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் கைவிட்டுச் சென்ற காணிகள் சம்பந்தமான பூரண விபரங்கள் முஸ்லிம் சமாதான சபையினால் தயாரிக்கப்படுகின்றன. சகஜீவன நிலையம் இதற்கான நிதிஉதவியை வழங்குகின்றது. காணிகளை இழந்த முஸ்லிம் மக்கள் மத்தியில் விபரப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு அவர்கள் வழங்கிய தகவல்களையும் கணனிமயப்படுத்தி முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமானதென்று கருதப்படும் காணிகளில் அந்த மக்கள் விவசாயத்தில் ஈடுபட அனுமதிப்பது முஸ்லிம் மக்கள் செல்ல முடியாத காணிகள் சம்பந்தமாகப் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் கலந்துரையாடிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதும் அவர்களின் நோக்கமாகும் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 30,000 ஏக்கர் வீதம் 90,000 ஏக்கர் நிலங்கள் விடுதலைப் புலிகள் வசம் இருப்பதாக முஸ்லிம் சமாதான சபை மதிப்பீடு செய்துள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கொழும்பிலிருந்து செய்யப்பட முடியாத விடயமென்றும், அதற்கு கிழக்குமாகாணத்தின் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்றும் தெரிவிக்கும் முஸ்லிம் சமாதானச் சபையின் செயலாளர் எம்.ஐ.எம் மொஹிதீன் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேசி மாத்திரமே தீர்க்க முடியுமென்று கூறுகின்றார். விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இப்பொழுது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து பிரதேசத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவது அவசியமானதல்லவேன்று அவர் மதிப்பிடுகின்றார். கிழக்கின் கட்டளைத் தளபதி கருணா, ரமேஷ் மற்றும் கௌசல்யன் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் தலைவர்கள். முஸ்லிம் கிராமங்களில் சமாதானக் குழு அங்கத்தவாகளுடன் ஒன்றிணைந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக முஸ்லிம் கிராமங்களுக்கு அவதானிப்பு விஜயங்களை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர்.

வடக்கு, கிழக்கின் முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்களுடன் ஒன்றிணைத்துக் கொள்வதற்கும், இனப்படுகொலைகள் மூலம் அவர்களை விரட்டியடிப்பதற்குமான முயற்சிகள் தோல்விகண்டபின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு முஸ்லிம் மக்களின் தனித்துவம் மற்றும் கிழக்கு அவர்களின் தாயகம் என்பவற்றை ஏற்றுக் கொண்டுள்ளது. முஸ்லிம் மக்களுடன் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு கரிசனை கொள்வது வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்களுடன் ஏதாவது உடன்பாட்டுக்கு வந்து, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்குள்ள தேவையை சுட்டிக்காட்டுவதாகவுள்ளது. கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்களுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புடனும், தமிழ் மக்களுடனும் தொடர்ந்தும் வன்செயல்களில் ஈடுபடுவதற்கு அவசியமில்லையென்பதும் தெளிவாகும். இருதரப்பினருக்கும் தேவைப்படுவது கௌரவத்துடன் கூடிய ஒரு தீர்வாகும். அதற்கு அவசியமான அடிமட்ட வழிமுறையமைப்புகள் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. இந்த வழிமுறையமைப்புகளை வலுப்படுத்துவது சமாதானத்தை விரும்பும் சகல மக்களினதும் பொறுப்பாகும்.

(நன்றி : சாம விமர்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்காவின் உண்மைகாண், மீளிணக்க ஆணைக்குழு(TRC)

உண்மை மற்றும் இணக்க ஆணைக்குழு(TRC 1995-2000) தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சிக்காலத்தில் (1945-1990) அரசியல் பொருளாதார நீதி துறைகளில் மிகக்கூடிய அளவில் பாரபட்சம், அடக்குமுறை, மலிந்து காணப்பட்டது. படுகொலைகள் கற்பழிப்பு, சித்திரவதை, சட்ட விரோத கைது, சட்ட விரோதமாக தடுத்துவைத்தல் ஆகியன வகைதொகையின்றி நிகழ்ந்தன. ஆளும் தேசியவாதக் கட்சிக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) கட்சிக்கும் இடையில் 1990 இல் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. ஆட்சிமாற்றம் நிகழ இருந்த காலப்பகுதியில் இருபகுதியினரும் பரஸ்பரமாக கோரிக்கைகளை முன் வைத்தனர். நிறவெறி ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக குற்றம் இழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது ANC யின் பிரதான கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. இத்திட்டத்திற்கு இராணுவ தரப்பில் இருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியது. பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்ற விடயம் பேச்சுவார்த்தையில் ஒரு முள்ளாக விளங்கியது. இடைக்கால அரசியல் அமைப்பில் அரசியல் தொடர்பான மனித உரிமை மீறல்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்கின்ற ஏற்பாடு குறிப்பிடப்பட்டு இருந்தது. 1994 ம் ஆண்டு நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் 17 பேர் கொண்ட TRC எனும் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு 3 சிறிய குழுக்களாக இயங்கியது. அக் குழுக்களாவன

1. மனித உரிமை மீறல்களுக்கான குழு
2. பொது மன்னிப்புக்கான குழு
3. நிவாரணம், புனர்வாழ்வுக்கான குழு

TRC ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டிருந்த சட்டரீதியான அதிகாரம் பின்வருமாறு

1. 1960 பங்குனி 1ம் திகதி முதல் 1994 மே 10ம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமைகளின் தன்மை, காரணங்கள், எண்ணிக்கைகள் யாவற்றையும் விசாரித்து பூரணமான தெளிவான அறிக்கை ஒன்றைத் தெரிவித்தல்.
2. மனித உரிமைக்கு உள்ளானவர்களுக்கு என்ன நிகழ்ந்தது இப்போது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
3. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் மீள் புனர்வாழ்வும் அளிப்பதற்கான சிபாரிசுகளை விதந்துரைத்தல்
4. எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் நடைபெறாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக புதிய நிறுவனங்களை உருவாக்குதல் தொடர்பாக சிபாரிசுகளை விதந்துரைத்தல்.
5. அரசியல் ரீதியாக ஊக்கப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானர்வர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கல்
6. பூரணமான அறிக்கை வெளியிடல்

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் மையமாகத் திகழ்வது பொதுமன்னிப்பு ஆகும். அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றிய பூரணமான உண்மைகளை குற்றமிழைத்தவர்கள் வெளியிடுவார்களானால் அத்தகையவர்கள் சட்ட நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து விளக்கம்பெற்று பொது மன்னிப்புக்கு உருத்துடையவர்கள் என்பதாகும்.

இந்த எற்பாட்டின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல குற்றம் இழைத்தவர்களிடம் இருந்தும் அவர்கள் செய்த அநீதிகள் விபரிக்கப்பட்டன. TRC விசாரணைகள் யாவும் பகிரங்கமாக நடாத்தப்பட்டன. குற்றம் இழைத்தவர்கள் பொதுமன்னிப்புப் பெற்றாலும் தாங்கள் செய்த கொடுமைகளை பகிரங்கமாக விபரிததமையால் சமுதாயதத்தின் வெறுப்புக்கு உள்ளாகி வெட்கி தலைகுனிந்து வாழவேண்டியதாயிற்று. ஆணைக்குழு 1998 இல் பூரண அறிக்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி மண்டேலாவிடம் சமர்பித்தது. பெரும்பாலான மனித உரிமை மீறல்கள் நிறவெறி அரசாங்கத்தாலும், பாதுகாப்புப் படையினராலும் இழைக்கப்பட்டது என்பது ஆணைக்குழுவால் தெரிவிக்கப்பட்டு இரந்தது. அத்துடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களாலும், வேறு விடுதலை இயக்க உறுப்பினர்களாலும் மனித் உரிமை மீறல் குற்றங்கள் இழைக்கப்பட்டது என்பதையும் அறிக்கை சுட்டிக் காட்டியது. இருப்பினும் கூடிய அளவிலான மனித உரிமை மீறல்களுக்கு அதிகாரங்களைக் கொண்டிரந்த நிறவெறி அரசாங்கம் கூடுதலான பொறுப்பை எற்க வேண்டும் எனவும் மேலும் சுட்டிக்காட்டியது.[38] நிறவெறி முழு மானிடத்திற்கும் எதிரான பாரிய குற்றம் என அறிக்கை கண்டித்து இருந்தது.[39] ஆணைக்குழு உத்தியொக பூர்வமாக தனது விசாரணைகளை 2001ம் ஆண்டு முடித்தபோதும் பூரணமான முழு அறிக்கை பங்குனி 2003 இல் வெளியிடப்பட்டது.

TRC ஆணைக்குழுவின் சிறப்பு அம்சங்கள்

1. ஆணைக்குழுவின் விசாரணைகள் 120 தடவைகளுக்கு மேல் இடம்பெற்றன. ஆயிரக் கணக்கானோர் ஆணைக்குழு முன் தோன்றி தமக்கு நிகழ்ந்த கொடுமைகளை விபரித்து இருந்தனர். நீண்டகாலம் அடக்கி வைத்திருந்த உண்மைகளை வெளியிட்டனர்.
2. ஆணைக்குழு நடவடிக்கைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வெகுசனத் தொடர்புசாதனங்களில் முக்கிய இடம்பெற்றன. பொதுமக்களின் கவனமும் விமர்சனமும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மேலும் முன்னேற்றமடைய உதவின.
3. சமய நிறுவனங்கள் சட்ட அமைப்புக்கள் வர்த்தகத்துறையினர் வைத்தியத்துறை, வெகுசனத்தொடர்புசாதனங்கள் பாதுகாப்புத்துறை ஆகிய துறைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன.
4. 2001ம் ஆண்டு 7094 விண்ணப்பங்கள் பொதுமன்னிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றின் 1160 விண்ணப்பங்களுக்கே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.
5. TRC ஆணைக்குழு நிவாரண புனர்வாழ்வுத் திட்டத்தில் பாதிக்கப்பட்டவரை மையமாக வைத்து உளவியல் ரீதியாக உதவியையும் வழங்கியது.
6. 5 தொகுதிகளாக வெளியிடப்பட்ட TRC ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் நிறவெறி ஆட்சியின் பின்னணி, இடம்பெற்ற வன்முறை, விசாரணைகளின் போது பெறப்பட்ட தகவல்கள், யாவும் இடம்பெற்றன.

TRC ஆணைக்குழுவின் பிரச்சினைகள்

1. மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டில் இருந்து பொதுமன்னிப்புக் கோரும் விண்ணப்பங்கள் அரசியல்வாதிகளிடம் இருந்து இராணுவ அதிகாரிகளிடமிருந்தும் எதிர்பார்த்தளவில் கிடைக்கவில்லை. TRC ஆணைக்குழுவின் நோக்கமே கறுப்பு இன மக்களுக்கு எதிராக உயர் அரசியல், இராணுவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதும், மனித உரிமை மீறலின் சூத்திரதாரிகள் யார் என்பதை பகிரங்கப்படுத்துவதும் ஆகும். உயர் அரசியல் இராணுவ அதிகாரிகளை எதிர்பார்த்த அளவில் பங்குபற்றாமை ஒரு குறையாகக் காணப்படுகின்றது.
2. TRC ஆணைக்குழுவில் பிரதான நோக்கமாகிய நட்டஈடு, அரசாங்கத்தினால் 21,000 இற்கு மேற்பட்ட பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படவில்லை.
3. ஆணைக்குழுவினால் மன்னிப்பு வழங்கப்படாத உரிமை மீறல் குற்றவாளிகளக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் தாமதம் அடைகின்றன/ஒழுங்காக நடைபெறவில்லை.

பொழிப்பு

தென்னாபிரிக்காவில் குற்றமிழைத்தோரும், பாதிக்கப்பட்டோரும் சமரசம் காணுவது போன்று ஒரு நிலையே காணப்பட்டது. இந்நிலைமை ஆர்ஜென்ரீனாவில் இருந்து முற்றாக வேறுபட்ட நிலையாகும். ஆர்ஜென்ரீனாவில் முன்னைய ஆட்சியாளரும் குற்றமிழைத்தோரும் புதிய ஆட்சியில் பங்குகொள்ள அனுமதிக்கப்படவில்லை. இருப்பின் தென்னாபிரிக்காவில் நிவாரணப் புனர்வாழ்வுத்திட்டம் தேசிய, சர்வதேச மட்டத்தில் பிரபலம் பெற்ற ஒன்றாகும்.

இணை பிரியாச் சுதந்திரம்

மனித இனத்தின் மிக எளிய உறுப்பினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறை மனிதகுலம் முழுவதையுமே பாதிக்கிறது. ஒடுக்கப்பட்ட அப்பாவிகளின் நலனில் நாம் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும். இல்லையெனில், நம்மை அடிமைப்படுத்த இன்னொரு பலசாலி வரும்போது நாமும் அதற்குப் பலியாகிவிடுவோம். ஒரு மனிதனின் சுதந்திரம் உலகனாவிய சுதந்திரத்தின் ஒரு பகுதியேயாகும், ஒன்றைச் சீர்குலைக்காமல் இன்னொன்றைத் தொட்டுவிட இயலாது.

–விக்டர் ஷீல்ஷெர்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகளும், நாட்டின் எதிர்காலமும்

– சட்டத்தரணி எஸ்.ஏ.புஞ்சிஹேவா –

ஒவ்வொரு வருடமும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகின்றது. ஆயினும் இது எமது நாட்டில் ஏன் கொண்டாடப்பட வேண்டும்? வருடம் முன்நூற்றம்பத்தைந்து நாட்களும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இந்த உரிமைகள் பாதுகாக்கப்படும் ஒரு நாட்டில் வாழ்வது இலகுவானதும், சுதந்திரம் நிறைந்ததுமாகும். இத்தகைய ஒரு நாட்டில் சகோதரத்துவ உணர்வு உயர் மட்டத்திலிருக்கும். இல்லாதிருப்பது இல்லாமையே ஆகும். சுகம் மாத்திரமே உண்டு. தமது சுகம் கருதி இன்னொருவருக்குத் தீங்கு விளைவிக்கப்பட மாட்டாது. உண்மையில் இத்தகைய சுவர்க்க ராச்சியமொன்று ஏற்படுவது வெறும் கனவில்லையா? ஆயினும் எமது இந்தக் கனவு எம்மை விட்டு வெகுதூரம் விலகிச் செல்லுகின்றது.

ஒரு நாட்டில் நல்லாட்சி முறை இல்லாவிடில், அங்கு பொருளாதாரம் மற்றும் கலாசாரம் போன்ற சகல அம்சங்களிலும் சீரழிவுகளே இடம்பெறும் மனிதர்கள் ஆன்மிக ரீதியில் சீரழிவடையும் போது எஞ்சுவது என்ன? இதில் பெருமளவு அழிவு ஏற்படுவது எதிர்காலச் சந்ததியினருக்காகும். அவர்கள் பிறக்கும் போதே கடன் சுமைகளுடன் பிறக்கின்றனர். நாம் செய்யும் செலவீனங்கள் காரணமாகவே இவர்களுக்குக் கடன்கள் ஏற்படுகின்றன. பிறந்த பின்னர் இவர்கள் வாழ்ந்து வளர வேண்டிய சமூகம் கொடுமையானதும் ஊழல்கள் நிறைந்ததுமாகும். இவர்களின் வாழ்க்கைகள் எத்தனையோ பிரச்சினைகள் சிக்கல்கள் நிறைந்தனவாகும். வாழ்க்கை வெளியிலும் வியாகுலம் நிறைந்ததாகும். இத்தகைய கொடிய குற்றங்களுக்கெதிரான பயனுறுதியுள்ள தடை ஏற்பாடுகள் சட்ட நூல்களில் இல்லை. நல்லாட்சி முறையென்பதன் கருத்து நல்ல கலாசாரம் நிலவுவதாகும் நல்ல கலாசாரம் என்பதன் கருத்து சமூகத்தில் எவ்வித அந்நியாயங்களும் இடம்பெறாத வகையில் அவசியமான பழக்கங்களையும் பயிற்சிகளையும் ஏற்படுத்துவதாகும்.

அத்தகைய பழக்கம் மற்றும் பயிற்சிகளுள்ள ஒரு சமூகத்தில் உயர்ந்த மட்டத்திலான கலாசாரமொன்று நிலவும். அத்தகைய ஒரு சூழலில்தான் மனித உரிமைகளும் உயர்ந்த அளவில் பாதுகாப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். அனைவரினுள்ளும் அபிவிருத்தியடையும் குணநலன்களே மனித உரிமைகளாகும். குணநலன்கள் அபிவிருத்தியடையும்போது அந்த நாட்டில் புதிய அரசியல் அமைப்புகளோ, எழுத்திலான சட்டங்களோ அவசியமில்லை. அந்த வேளையில் நற்பண்புகளே சட்டமாக அமையும். அந்தச் சட்டங்களை எழுத்தில் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. குணநலன்களைக் கல்லில் செதுக்கியிருந்த போதிலும், மூளையில் அவை இடம் பெற்றிராவிடில் கலாசார மரபுரிமையை எதிர்பார்க்க முடியாது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் உயர்வான சமூகத்தில் நிலவும் சட்டங்கள், விதிகளை மீறுவோர் எவருமில்லை. வழக்குத்தொடுப்போரில்லை. நீதிமன்றங்கள் இல்லை. மனிதர்களில் உள்ளவர்களிலேயே சட்டமும், நீதிமன்றமும் இடம்பெற்றிருக்கும். "அத்தகைய சிறப்பான தேசமொன்றை நோக்கியதாக எமது பயணம் அமையட்டும்" என்பதே மனித உரிமைகளுக்காக நாம் செய்யக்கூடிய உன்னதமான செயற்பாடாகும்.

தற்போது கனவாக இருந்தபோதிலும், அத்தகைய சமூகத்தில் நிலவக்கூடிய சட்டங்கள், விதிகளுக்கான சில உதாரணங்கள் பின்வருவனவாகும்.

- "இந்த நாட்டில் எவருமே உணவு, உடை, மற்றும் வீடு என்பவை இல்லாமல் வாழக்கூடாது". (இவற்றுக்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ள காரணத்தால்)

- "வேலை அல்லது தொழில் ஒன்று இல்லாதிருப்பது தடை செய்யப்பட்டுள்ளது".

(தொழில்களுக்கு மனித வளத்தட்டுப்பாடு நிலவுகின்ற காரணத்தால்)

- "கோபமடைவதும், பிறருக்குக் கோபமூட்டுவதும் தடைசெய்யப்பட்டுள்ளன".

(இதற்கான சந்தர்ப்பம் இல்லையென்பதால்)

- "வெறுப்பு அல்லது துவேஷத்தை ஏற்படுத்தக்கூடிய சொற்களை உபயோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது"

(2500க்குரிய கலாசாரத்தைப் பின்பற்றுவதால்)

- "மனிதர்கள் மீது சாதி, இனம், மதம், குலம் போன்றவற்றினடிப்படையில் பிரிவினைகள். பாகுபாடுகள் இருப்பது தடை செய்யப்பட்டுள்ளது".

(சமத்துவம் மற்றும் நியாயம் என்பவற்றை உயர்வாக மதிப்பதால்)

ஆயினும் இத்தகைய எண்ணக்கருக்கள் வெறுமனே கற்பனையன்றி, என்றுமே யதார்த்தத்தில் நிகழக்கூடியவையல்லவென்று தெரிவித்து நாம் பிரச்சினையிலிருந்து விலகிச் செல்லலாம் ஆயினும், அத்தகைய நிலைக்கு அவசியமான முதல் அடியை எடுத்து வைப்பது குறித்தாவது நாம் திடசித்தம் கொள்வது இயலாத காரியமா?

எதிர்காலத்துக்கான நடவடிக்கைகள்

தற்போது எமது நாட்டில் நிலவும் நிலைமைகள் குறித்து எவருக்குமே திருப்தியில்லை. அது அவ்வாறே இருக்கட்டும் என்று கூறிப் பாராமுகமாக இருக்க முடியாது. முதல் அடியை எடுத்து வைப்பதென்றால் அரசியலிலுள்ள வியாகுல நிலையை மாற்றவேண்டும். மனித உரிமைகள் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு 28வது உறுப்புரையில் கூறியவாறு மக்களினால் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் அதற்கெனத் தற்போதுள்ள அமைப்பு அரசாங்கமாகும். அந்த அரசாங்கம் கட்சிச் சார்பு மற்றும் ஏனைய தீங்கான வழிகளில் ஊறிய ஒன்றாகவுள்ளது. அப்பட்டமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடாத அரசாங்கமோ, பிரதான அரசியல் கட்சிகளோ கிடையாது. அவர்களுக்கே மீண்டும் அதிகாரத்தை வழங்குவதன் மூலம் மீண்டும் இல்லாமல் போவது மனித உரிமைகளேயாகும். மனித உரிமைகள் பிரகடனத்தின் 21ம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள "ஆட்சி புரியும் அடிப்படை மக்களின் அபிலாஷையாகவே இருத்தல் வேண்டும்" என்றும் விடயத்தை சகல அரசாங்கங்களும் மீறியவையாகவும் அதை எதிர்த்த கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, கீழ்த்தரமான, மிருகத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆட்சி செய்வதற்கு அரசியலமைப்பொன்று அவசியமாகும். ஆயினும் அதில் முரண்பாடுகள் ஏற்படும்போது, அல்லது அதனால் மக்களின் விருப்பம் நிறைவேறாவிடில் செய்ய வேண்டியது அதை விரைவாக மாற்றியமைப்பதாகும். அதிலுள்ள பந்தியொன்றை அல்லது சொல்லொன்றை முன்கொண்டு செல்லும் கைங்கர்யமே இடம் பெறுகின்றது. தாமே ஒரு தடவை தவறானதென்றும் நாட்டுக்கு அழிவை ஏற்படுத்துவதென்றும் விபரித்த அரசியலமைப்பை பாதுகாப்பதற்கு இயன்றதனைத்தையும் செய்து மக்களை அரசியல் இருளுக்குள் தள்ளுகின்றனர். தமக்கு மாத்திரம் அதிகாரம் இருத்தல் வேண்டும். அப்போது தான் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமென்று வெற்றுப் பேச்சுகளில் காலம் கடத்துகின்றனர். இவர்கள் தமது கட்சிக்காக அல்லாது பாரபட்சமான கருத்துகளுக்காக அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளுவதே நாட்டின் முன்னேற்றமென்று தெரிவிக்கின்றனர்.

தற்போதுள்ள நிலைமையின் பிரகாரம் மக்கள் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கியுள்ளனர். இதன் கருத்து தனக்குச் சாதகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் அதைப் பயன்படுத்துவதல்ல. பிரதமருக்குப் பாராளுமன்றத்தை முன்னிலைப்படுத்தும் ஆட்சியதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் கருத்து தனது கட்சிக்கு மூத்திரம் அனுகூலமான நடவடிக்கைகளை எடுப்பது என்பதல்ல. பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. அவற்றைத் தீர்க்கும் வரை "மக்களின் விருப்பம்" என்பது இவருவரினதும் இருவரது கட்சிகளினதும் அதிகார நடவடிக்கைகளின் அடிப்படையாகவிருத்தல் வேண்டும். ஆயினும் முரண்பாடுகள் எழும்போது இரு தரப்பினரும் மக்களுக்குச் சாதகமான முடிவுகளுக்கே வருதல் வேண்டும்.

தற்போதுள்ள பிரதான கட்சிகளுள் ஒன்றின் மீதாவது ஆழமான விசுவாசத்தை வைக்க முடியாது ஆயினும் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்காக இருப்பவை இந்தக் கட்சிகளே. ஆகவே மிகவும் ஆரோக்கியமானது கலப்புக்கட்சிகளுக்கு அதிகாரத்தை வழங்குவதாகும். அங்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களின் கலப்பு நிர்வாகம் இருப்பது மோதல்கள் குறைவதற்கு உதவும். அத்தகைய நிர்வாகமொன்றின் அவசியம் ஏற்படுவது நாட்டின் சமாதானத்தை முதனிலைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் முக்கியம் பெறுவதாலாகும். இல்லையெனில், நாடு மீண்டும் சகல மனித உரிமைகளும் இல்லாத ஒரு நிலைக்கே செல்லும். இனவாத அரசியல் காலத்துக்கொவ்வாத ஒன்றாகியுள்ளது. "தேசாபிமான, இனத்தை நேசிக்கும், நாட்டைக் கூட கட்டியெழுப்பும் சிங்களவர்களின் உருமய" என்ற சொற்களின் மறுபுறத்திலுள்ளது. ஏனைய இனங்களுக்கும், மதங்களுக்கும் பாகுபாடு காண்பிப்பது குறித்த சிந்தனைகளும், விருப்பங்களுமாகும். இத்தகைய அரசியல் கருத்துக்களை விதைப்பவர்கள் போன்ற மனித உரிமைகளின் எதிரிகள் நாட்டில் வெறொருவரும் இல்லை. சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் இனவாத குறுகிய அடிப்படைவாதக் கருத்துக்கள் நாட்டின் சமாதானத்துக்கும், அபிவிருத்திக்கும் நாசம் விளைவிப்பவையாகும். அவர்களால் செய்ய முடிவது மக்களை யுத்தப் பீதியில் ஆழ்த்தி, தமது வர்க்கத்தினரின் நலன்களைப் பேணுவதாகும். தமது இனத்தை நேசிப்பவர்களாயின் அந்த இனத்தைக் கொண்டு வேறொரு இனத்துக்குத் துன்பம் விளைவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. யுத்தமென்பது கோழைகளின் பாதையாகும். பயமற்ற மனிதனின் பாதை சமாதானமாகும்.

தற்போது நிலவும் அரசியல் கயிறிழுப்பு முடிவடைவது பெருமளவுக்குத் தீவிரமான மனித உரிமை மீறல்களின் பின்னரேயாகும். இந்த அரசியல் அதிகார வெறிக்கு இடம் கிட்டியவுடனே அது ஆயுதங்கள் மற்றும் வெறுப்பு மற்றும் குரோத அரசியலுக்கு வழிவகுக்கும் துப்பாக்கியே நிறைவேற்று அதிகாரியாக மாறும். அதன் மொழி சட்டமாகவும், அரசியலமைப்பாகவும் மாறும். தென்னிலங்கை அரசியல் இன்று பல்வேறு முகாம்களாக ஆயத்தமாவது அத்தகைய நிலையை நோக்கிச் செல்வதற்காகும்.

ஏற்கனவே அத்தகைய அடையாளங்கள் காணப்படுகின்றன. அவை முதலில் பிரதிபலிப்பது நாட்டின் சட்டங்கள், மற்றும் சட்ட நிறுவனங்கள் மூலமாகவாகும். சில விடயங்கள் சம்பந்தமாக சட்டங்கள் இல்லை. அனைவருக்கும் வேலைவாய்ப்பு இருக்க வேண்டுமென்று சட்டமொன்று இல்லை. வேறு சில விடயங்கள் சம்பந்தமாகச் சட்டங்கள் உள்ளன. ஆயினும் நடைமுறைப்படுத்தப்படும்போது பாகுபாடுகள் காண்பிக்கப்படுகின்றன. இதற்கான உதாரணம் மனித உரிமைகளாகும். அடிப்படை உரிமைகள் மீறப்படுகையில் அதற்கு நிவாரணம் பெற்றுக்கொள்வது அதிக செலவான காரியமாகும். அத்தோடு உயர் நீதி மன்றத்தில் எத்தனைபேருக்குத் தமது மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்? அத்தகைய செலவுகளின்றி, மீறல்களுக்கெதிராக நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அவற்றை உரிய முறையில் பெற்றுக்கொடுக்குமளவுக்கு பலமுள்ளவையல்ல. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற குறைகேள் ஆணையாளர் நிறுவனங்கள் இவற்றுக்கான நல்ல உதாரணங்களாகும்.

ஆகவே ஒவ்வொரு அரசு நிறுவனத்திலும் நாளொன்றுக்கு இடம்பெறும் நூறு மனித உரிமை மீறல்களில் ஒன்றுக்காவது நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது முக்கியமான கேள்வியாகும். படிப்படியாக எமது தேசம் ஊழல், ஏமாற்று, கொள்ளை, கொலை என்பவற்றால் சீரழிந்து செல்கின்றது. நாட்டு மக்களின் வளங்கள் எவ்வளவு விரயமாக்கப்படுகின்றன? எவ்வளவு களவாடப்படுகின்றன? உயர் நிலைகளிலுள்ள தலைவர்கள், முகவர்கள் என்போரிலிருந்து, கீழ் நிலைப்பதவிகள்வரை உள்ளோரில் பொது மக்களின், பணம், சொத்து, வளங்கள் என்பவற்றை தவறான முறையில் பயன்படுத்தாதோர் எத்தனையோ பேர் உள்ளனரென்று கூற முடியும்? அத்தகைய ஒரு சிறு தொகையினர் உள்ளனரென்பது உண்மையே ஆகும். ஆயினும் கூடுதலானோர் அனுபவிப்பதும், விரைவாகப் பிரயாணம் செய்வதும், உடல்ரீதியான வசதிகள், சுகங்களை அனுபவிப்பதும் பொதுமக்களின் சொத்துக்களை உபயோகிப்பதன் மூலமேயாகுமென்பது நிரூபிக்க முடியாத உண்மையாகும்.

இவை அனைத்தும் மனித உரிமை மீறல்களாகும். இவற்றுக்கு நடவடிக்கை எடுக்கும் கடமை வெகுஜனங்களுக்கு உண்டு. ஆயினும் இந்த அரசியல் சீரழிவு மற்றும் தொற்றுநோயிலிருந்து விமோசனம் பெறுவதற்கு அவர்களை வழிநடத்துவது இப்பொழுது எம்மனைவருக்கும் ஏற்பட்டுள்ள கடினமான பொறுப்பாகும்.

(நன்றி : சாம விமர்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைகள் செய்ய முடியுமே தவிர.. அது தொடர்பான தீர்ப்புகள் நடைமுறைப்படுத்த முடியாது....

– ஜேமா சிரிவர்த்தன –
செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அரசே நிதி வழங்கி வருகிறது. எனினும், எமது செயற்பாடுகளை சிறந்த முறையில் விரிவுபடுத்திச் செயற்படுவதற்கு போதியளவு நிதி வழங்கப்படுவதில்லை. இந்த நிலையில் அரசு எமது ஆணைக்குழுவின் மீது சில தடவைகளில் அழுத்தங்களையும் பிரயோகிக்க முனைகிறது. எனினும், அத்தகைய அழுத்தங்களுக்கு முகம்கொடுத்தும் கூட எமது செயற்பாடுகளை சிறந்த முறையிலேயே முன்னெடுக்கிறோம்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தற்பொழுதும், கமர் 79,000 த்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எமது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை மீறி எம்மால் எதுவும் செய்துவிட முடியாது.

எமக்கு கிளகிடைக்கின்ற முறைப்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் நாம் விசாரணை செய்ய முடியுமே தவிர, அது தொடர்பான தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்த முடியாது. இலங்கையில் அரசியல் சட்ட வரைவுகளைத் திருத்துவது தொடர்பான விடயத்தில் ஆலோசனை வழங்குவதற்கு எமது ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

எனவே எதிர்காலத்தில் சட்டங்கள் திருத்தியடைக்கப்படும் போது அதில் மனித உரிமைகள் பேணப்படுகின்றனவா எங்கதைக் கண்காணித்து அதற்கேற்ற ஆலோசனைகளை வழங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுகளில் இறுதித் தீர்வு எட்டப்படும் போது அதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு தமது முழுமையான பங்களிப்பை வழங்கும்.

(மனித உரிமைகள் நிலைமை முன்னிட்டு பாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் ஏற்பாட்டில், பாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 14-12-2003 அன்று நடைபெற்ற நிகழ்வில் தெரிவித்த கருத்துக்கள் என 15-12-2003 கடரொனியில் வெளியாகிய செய்தி...)

நன்றி : கடரொனி நாளிதழ் 15-12-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவாரற்ற பிணமும் ஆற்றுவாரற்ற சுடலையும்

– மு.வல்லிபுரம் –

"இந்தநாட்டில் சமாதானம் நிலைபெற வேண்டும் என்றால் அனைவரும் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும். அது ஜனாதிபதிக்கு மட்டும் பொருத்தமானதல்ல. பிரதமர், விடுதலைப் புலிகள், அரசியல் கட்சிகள் தலைவர்கள், ஊடகத்துறையினர் மற்றும் பொது மக்களும்தான்..."

சமாதானம், ஆம்..... ஜனநாயகத்துடன்.....

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் உருவான சமாதான முன்னெடுப்புக்களில் எந்தளவுதூரம் 'ஜனநாயகம்' பேணப்பட்டு வந்தது என்பது கேள்வி என்றாலும், இந்தச் சமாதான தேர் வடக்கு வீதியில் நின்றுவிட்டது. அல்லது நிறுத்தப்பட்டது.

இலங்கையின் வரலாற்றில் முதல்முறையாக சுமார் 22 மாதங்களுக்கு மேலாக அரசாங்கப் படைகளும் விடுதலைப் புலிகளும் நேரடியான யுத்தத்தில் ஈடுபடவில்லை. அதனால் யுத்த அழிவுகள் இடம்பெறவில்லை. சண்டையால் உயிர்கள் பலியாகவில்லை.

ஆனால், சுமார் 30திற்கும் மேற்பட்ட கொலைகள் இடம்பெற்றுள்ளன. 10ற்கும் மேற்பட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அரசாங்கப் படைகள் செயற்பட்டுள்ளன அதனிலும் பன்மடங்காக விடுதலைப் புலிகள் செயற்பட்டுள்ளதாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கை கூறுகின்றது.

இது தொடர்பாக இலங்கை தமிழ் பத்திரிகா தர்மம் வாய்திறக்கவில்லை. இந்த சமாதான ஒப்பந்த காலத்தில் புலிகளை ஏகபிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளாத தமிழ் இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இராணுவ புலனாய்வுத் துறையினர் என பலரும் கொலை செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் வேடிக்கை என்னவெனில் தமிழ் பத்திகா தர்மம் இந்தக் கொலைகளுக்கான நியாயப்பாட்டை தமது முழுப்பக்கங்களில் முழுமூச்சாக வெளிப்படுத்தின. ஆனால் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புக்களை சீர்குலைக்கும் நடவடிக்கையில் கொல்லப்பட்ட இயக்க உறுப்பினர்களின் அமைப்புக்கள் செயற்படுவதாக யாரும் குற்றம் சாட்டவில்லை. அவ்வாறான ஒரு செயற்பாட்டில் அவை ஈடுபட்டதாகவும் தெரியவில்லை. அவை அவ்வாறு ஈடுபடுவதற்கான சக்தியும் அற்றவை என்பது இன்னொருபுறம்.

அதேநேரம் விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதியாக அங்கீகரித்த அதன் தலைவரை ஏக தலைவனாக ஏற்றுக் கொண்ட ரேலோ உறுப்பினர்கள் இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புலிகள் தவிர்ந்த இயக்கம்தான் செய்தது என்பதற்கான உறுதிப்பாடு யாரிடமும் கிடையாது.

இவ்வாறான ஜனநாயத்துக்குப் புறம்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதை உணர்ந்திருக்கும் தெற்கிலுள்ள முற்போக்கான சக்திகள் இதனைக் கண்டும் காணாமல் சமாதானத்தை முழுமூச்சாக முன்னெடுக்க விளைகின்றன. ஏனெனில் விமர்சனம் அல்லது கண்டனம் தமிழீழ விடுதலைப் புலிகளை சீண்டும் செயல் என்று அவர்கள் கருதுகின்றார்கள். அதற்காக வாழாதிருக்க அவர்கள் துணிந்துவிட்டார்கள்போலும்.

இவ்வாறான கொலைகளினூடே இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்ட அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் எதிர்பார்த்தது போல தடைப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா மிக முக்கிய மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றதும் சமாதானம் கேள்விக்குறியாகியது.

ஆனாலும் ஜனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லலாம் என்கிறார். ரணிலோ, ஜனாதிபதியே சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கட்டும் என்கிறார்.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கத்துவம் பெறும் கட்சிகளும் வேறு சில சிறுபான்மை கட்சிகளும் தேசிய அரசாங்கம் அமைக்கும் திட்டத்தை கடுமையாக எதிர்க்கின்றன. இவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் அப்போதுதான் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்னும் முடிவோடு இருந்தார்கள்.

மேலும் ஜனாதிபதியை நம்ப முடியாது. யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று பேசியவர் என்கிறார்கள். ஆனால் ஜனாதிபதியின் தற்போதைய செயற்பாடுகள் சமாதானத்தில் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக கொள்ள முடியாதா?

"சமாதானம் முன்னெடுப்பதும், நிலை பெறுவதும் ஊடகங்களின் கையிலும் உண்டு. அந்தப் பங்கை இலங்கையிலுள்ள ஊடகங்கள் சரிவரச் செய்கின்றனவா?"

சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக பதவியேற்றதும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதனால் இரு தலைவர்களும் சுமார் 35க்கும் மேற்பட்ட கடிதங்களைப் பரிமாறிக்கொண்டனர். அப்போதும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையெழுத்திட்டிருந்தனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதென்றால் விலகும் தரப்பு தான் விலகியதாக அறிவித்து 72 மணித்தியாளத்தின் பிறகே யுத்தத்தில் ஈடுபடவேண்டும். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் திடீரென திருகோணமலையில் கடற்படையினரின் போர்க்கப்பலைத் தாக்கினார்கள்.

இதில் ஏமாற்றப்பட்ட ஜனாதிபதியின் பேச்சுக்கள் இனவாதமாக இருந்தன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்தப் பேச்சுக்களை ஞாபகம் வைத்துக்கொள்ளும் இவர்களிடம் 'யுத்தமென்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம்' என்று சொல்லப்பட்டு அதன் பின்னர் ஏற்பட்ட வரலாற்றுப் பதிவுகளை ஞாபகம் இருக்கிறதா என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

சமாதான முயற்சியில் எட்டப்படும் தீர்வு சட்டவாக்கம் பெற வேண்டுமானால், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவு தேவை. இதை இவர்கள் உணராமலில்லை. பிரதமருடன் நல்லுறவைப் பேணும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பிரதமரை தேசிய அரசாங்கத்திற்கு வற்புறுத்தாததன் தார்மீகம் பெரியதுதான்.

அதேபோல இந்தநாட்டில் சமாதானம் நிலைபெற வேண்டும் என்றால் அனைவரும் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும். அது ஜனாதிபதிக்கு மட்டும் பொருத்தமானதல்ல. பிரதமர், விடுதலைப் புலிகள், அரசியல் கட்சிகள் தலைவர்கள், ஊடகத்துறையினர் மற்றும் பொது மக்களும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறட்டு கௌரவத்திற்காகவும் தமது நியாயத்துக்காகவும் மட்டும் செயற்படுவதானால், சமாதானம் ஒரு போதும் நிலைபெறாது. வெறுமனே ஜே.வி.பி இனவாதக் கட்சி, சண்டையை விரும்புகிற கட்சி போன்ற மேலோட்டமான அபிப்பிராயங்களை வெளியிடுவதனால் எதுவும் நடந்துவிடாது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்புக்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார் என்பதை தற்போது சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இப்பேச்சுவார்த்தையில் ஜனாதிபதித் தரப்பில் கலந்துகொள்ள விருப்பம் வெளியிட்ட போதும் அது சமாதானத்தை சீர்குலைக்கும் செயற்பாடாக அமைந்துவிடும் என கருதப்பட்டது.

அவ்வாறு பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியின் தரப்பு கலந்து கொண்டிருந்தால் இன்று தோன்றியுள்ள இந்தச் சிக்கல் இடியப்பச் சிக்கலாயிராது. சமாதானத்தை முன்னெடுக்கும் சக்திகளில் ஒன்றாக ஜனாதிபதியின் தரப்பு இருந்திருக்குமானால் இவ்வாறானதொரு இக்கட்டை ஜனாபதியினால் எடுத்திருக்க முடியாது.

சமாதானம் முன்னெடுப்பதும், நிலை பெறுவதும் ஊடகங்களின் கையிலும் உண்டு. அந்தப் பங்கை இலங்கையிலுள்ள ஊடகங்கள் சரிவரச் செய்கின்றனவா?

சிங்களப் பேரினவாதம் போல் தமிழ்ப் பேரினவாதம் இருக்கின்றது. சிங்களப் பேரினவாதத்திற்கு தீனிபோடும் வகையில் சிங்கள ஊடகங்கள் இருக்கின்றன. அதேபோல தமிழ்ப் பேரினவாதத்திற்கு தீனிபோடுபவையாகவே தமிழ் ஊடகங்கள் இருக்கின்றன.

இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அது முஸ்லீம்கள் தொடர்பானது. எந்தபேரினவாதத்திற்கெதிராக சிறுபான்மை தமிழருடைய உரிமைக்காக போராட்டம் நடைபெற்றதோ. அதற்காக முன்வைக்கப்பட்ட நியாயங்கள், முஸ்லீம்கள் என்று வருகின்றபோது கொஞ்சமும் வெக்கம் இல்லாமல் பேரினவாதத்தின் முகமூடியை அணிந்துகொள்கிறது தமிழின ஏகபிரதிநிதிகளும் அதற்கு ஆமாம் சாமிபோடுபவர்களும்.

மேலும் சிங்கள ஊடகங்களில் சில முற்போக்கான ஊடகங்கச் சக்திகள் இருக்கின்றன. ஆனால் தமிழைப் பொறுத்தவரை ஊடகங்கள் இருக்கின்றனவா? தமிழ் முற்போக்கு சக்திகளுக்கு என்ன நடந்தது? எஞ்சியுள்ள முற்போக்கு சக்திகள் செயற்படக்கூடிய சூழ்நிலை இன்னும் ஏன் உருவாகவில்லை? இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காமல் 'இடைக்கால நிர்வாகம் புலிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும்' என வலியுறுத்துவது நியாயமானதாக இருக்க முடியுமா?

ஒரு வகையில் ஜனநாயகமோ பன்முகத் தன்மையோ இல்லாத ஒரு சூழலை தமிழ் மக்களுக்கு பரிசாக கொடுக்க விளைகிறோம். ஏகபிரதிநிதிகள் என்ற கோஷத்துக்குள் அமிழ்ந்து கிடக்கின்ற தமிழ் மக்களில் எத்தனை வீதமானோர் இந்த ஜனநாயக மறுப்புச் சூழலை தாங்கிக் கொள்வார்கள்.

மேலும் இது ஆறு வருடங்களுக்குப் பின்னர் அவசியம் ஏற்படின் தேர்தல் அதுவும் புலிகளால்தான் தேர்தல் நடத்தப்படும். இதனை தென்னிலங்கை முற்போக்கு சக்திகளும் கேள்விக்கிடமின்றி வரவேற்கின்றார்கள். அரசாங்கத்தின் ஜனநாயகம் பற்றி அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராயும் இவர்கள் சமாதானம் குலைந்து விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காக 'ஜனநாயகத்தை பலியிட முன்வந்தது விந்தை. விந்தையிலும் விந்தை.

அழுவாரற்ற பிணமும், ஆற்றுவாரற்ற சுடலையும் என்பது போல எந்தவொரு தமிழினின் உடலும் அவர்களின் உடைமையும் ஆகிவிடக்கூடாது. இந்த அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் சமாதானம் பற்றி யாராவது பேசுவார்களா?

ஒரு வகையில் ஜனநாயகமோ பன்முகத் தன்மையோ இல்லாத ஒரு வகையில் எதைப்பற்றி பேசலாம்...?

ல வ னி ன் நா ட் கு றி ப் பி லி ரு ந் து தி ரு டி ய து.

தாஜ்மகால் என்ன அருமையானது, தனது காதலிக்கு கட்டியது. தன் காதலியை எத்தனை தரம் அடித்து, வெருட்டி, உதைந்து சாஜஹான், பாவத்தை தீர்க்க கட்டியது என்று..... இன்னொரு குரல், அடிமைகளை கட்டி கல்லுகளாக்கிய மாளிகை, பாவம் எத்தனை பேர் இறந்திருப்பார்கள். ஒரு கால்வாயை கட்டியிருந்தால் தனது காதலியின் பேரில், அவளது கண்ணீரோடு... விவசாயிகளுக்கு தண்ணீராவது.....

நன்றி : விபவி செய்திமடல் (டிசம்பர் 1999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு, கிழக்கு முஸ்லிம் தனித்துவம் பொன்னம்பலம் இராமநாதன் முதல் ~ அமிர்தலிங்கம் வரை.....

– சஞ்சய ஒபேசேகர –

"இலங்கையில் வாழும் முஸ்லிம்களை ஒரு இனமென்ற ரீதியில் நோக்குகையில் அவர்கள் தமிழ் இனத்தைச் சேர்ந்தோராவர். மதத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் முகமதியர்கள் (Mohammedans) ஆவர்." என்ற "இலங்கையின் முஸ்லிம் மக்கட் தொகையினர்" என்னும் தலைப்பில் 1888ல் கொழும்பில் அச்சிடப்பட்ட ஒரு உரையில் பொன்னம்பலம் இராமநாதன் தெரிவித்திருந்தார். இந்த நாட்டின் தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் சட்டசபையில் இருந்த பொன்னம்பலம் இராமநாதன் முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்களோடு சமமாக நோக்கியது இரு இனத்தவர்களும் தமிழ் மொழியைப் பேசியதன் அடிப்படையிலேயே ஆகும். 1889ல் சட்ட சபையில் முஸ்லிம் பிரதிநிதியொருவர் இடம்பெறவேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது "தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதியாக நான் உள்ளேன். முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசும். தமிழ் இனத்தின் ஒரு பிரிவினர் என்பதால் அவர்களுக்குத் தனியான பிரதிநிதித்துவம் அவசியமில்லை." என்று அவர் தீர்மானமாகத் தெரிவித்தார்.

ஆயினும் பொன்னம்பலம் இராமநாதனின் கருத்தை முஸ்லிம் தலைவர்கள் நிராகரித்தனர். அந்நாட்களில் முஸ்லிம் மக்களின் பிரதான பேச்சாளராக விளங்கிய எம்.சி. சித்திலெப்பை இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க ஒருவராவார். தமிழைப் பேசுவதை காரணமாகத் தமிழ் மக்களுள் ஒன்றிலனைக்கப்படுவதற்கு முஸ்லிம் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, அவர்கள் தமது சமூக, கலாசார மற்றும் அரசியல் தனித்துவத்துக்காகக் குரல் கொடுத்தனர். இதன் பிரகாரம் முஸ்லிம் மக்களின் தனித்துவத்துக்கான போராட்டம் ஆரம்பித்தது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் இராமநாதன் உள்ளிட்ட தமிழ் இனவாதிகள் முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்களோடு பிணைப்பதற்குக் காரணமாகவிருந்த தமிழ்மொழியும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கியது. வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் சிங்கள மொழியில் தமது அன்றாட அலுவல்களைக் கொண்டு நடத்த முற்பட்டதோடு, முஸ்லிம் மாணவர்களும் பெருமளவில் சிங்கள மொழி ஊடகத்தில் தமது கல்வியைப் பெறும் போக்கு ஏற்பட்டது. இப்புதிய எழுச்சி சிங்களம் அரச கரும மொழியாக வேண்டுமென்ற ஆலோசனையிலும் பிரதிபலித்தது. 1943ல் சட்டசபையில் ஜே.ஆர் ஜெயவர்தன சிங்களம் அரச கரும மொழியாக வேண்டுமென்ற ஆலோசனையை முன்வைத்த போது, தமிழ் மக்களின் பிரதிநிதியாகிய வீ.நல்லையா சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாதல் வேண்டுமென்று திருத்தம் கொண்டுவந்தார். இது சம்பந்தமாக இடம்பெற்ற சட்டசபை விவாதத்தில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாகிய ஏ.ஆர்.ஏ.ராசீக் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சிங்களம் மாத்திரமே அரச கரும மொழியாக வேண்டுமென வாதிட்டதோடு, நல்லையாவின் திருத்தத்துக்கு எதிராக நான்கு சிங்களப் பிரதிநிதிகளோடு சேர்ந்து வாக்களித்தார். தமிழ் இனவாத ஆதிபத்தியத்திலிருந்து விடுபடும் ஒரு தந்திரோபாயமாக முஸ்லிம்கள் சிங்களப் பெரும்பான்மை இனத்துடன் நேரடியாகக் கொடுக்கல்வாங்கல் செய்ய ஆரம்பித்தனர். சுதந்திரத்தின் பின்னர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தமிழ் தேசிய அரசியல் கட்சியாக மாறிய போதிலும், அகில இலங்கை முஸ்லிம் லீக் மற்றும் அகில இலங்கை சோனகர் சங்கம் என்பவை இனத்துவ அரசியல் கட்சிகளாக மாறவில்லை. அவர்கள் பெரும்பான்மையாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்தனர்.

சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்த எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் ஐம்பதுகளின் நடுப்பகுதியில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம் மக்களைப் பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைப்பதற்கு முயற்சியெடுத்தார். 1956 பொதுத்தேர்தலில் சமஷ்டிக்கட்சியின் நியமனப்பத்திரங்களில் கிழக்கு மாகாணத்தின் மக்கள் செல்வாக்குப் பெற்ற முஸ்லிம்கள் சிலர் போட்டியிட்டனர். இவர்களுள் எம்.எஸ். காரியப்பர் (கல்முனை) மற்றும் எம்.எம். முஸ்தாபா (பொத்துவில்) ஆகியோர் வெற்றியீட்டினார். ஆயினும் தமிழ் - முஸ்லிம் மொழிக் கூட்டணிக்கு நீண்டநாள் ஆயுள் கிட்டவில்லை மக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன்வைத்த மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்ட காரியப்பரும், முஸ்தாபாவும் சமஷ்டிக் கட்சியைக் கைவிட்டு அரசாங்கத்துக்கு அதரவு வழங்கத் தீர்மானித்தனர். இது தமிழ் மொழிக் கூட்டணியொன்றைக் கட்டியெழுப்புவதற்கு எடுத்த இறுதி முயற்சியாக அமைந்தது. செல்வநாயகத்தின் மருமகன் ஜெயரத்தினம் வில்சன் தமது "(S.J.V. Selvanayagam and crisis of Srilankan Tamil Nationalism)" என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார். "அவர் கிழக்கு மாகாணத்தில் சமஷ்டிக் கட்சியிலிருந்து தெரிவாகிய முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்தினர்கள் மீது பெரும் விசுவாசம் வைத்திருந்தார். ஆயினும் தேர்தல் முடிவடைந்து சிறிது காலத்தின் பின்னர் அவர்கள் அவரைக் கைவிட்டுச் சென்றனர். அவர்கள் சுயேச்சைக் குழுவாக இயங்கப்போவதாக அவர் அறிந்தார். அவர்களுள் பலர் அவரின் துணிச்சலான தலைமைத்துவத்தை மெச்சினர். ஆயினும் மேலும் சமஷ்டிக் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர்களாகச் செயற்பட முடியவில்லை. அவர் வடக்கு – கிழக்கின் முஸ்லிம் மக்களைத் தமிழ் பேசும் மக்களென்ற சுலோகத்தின் கீழ் ஒன்றுபடுத்த முயன்ற போதிலும் அவர்கள் தமது தனித்துவத்தைக் கட்டியெழுப்பும் பாதையிலேயே சென்றனர். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவரின் வலியுறுத்தலுக்கு ஆதரவாக ஒரு சில முஸ்லிம்களை மாத்திரமே அவரால் ஈர்க்க முடிந்தது. (பக். 136)"

தமிழீழ ராச்சியத்தின் ஒரு பிரிவினராகிய முஸ்லிம் மக்களுக்கு அவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களில் சுயாட்சி உரிமை வழங்குவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதியளிக்கின்றது. வட்டுக்கோட்டை கொள்கை அறிக்கை – பக்கம் 300 இது வடக்கு கிழக்குத் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட முதலாவது உடன்படிக்கையாகக் கருதப்படுகின்றது.

தமிழ் இனவாத ஆதிக்கத்துக்கு எதிராக கிழக்கின் முஸ்லிம்கள் பரந்த கருத்துப் போராட்டமொன்றை நடத்தினர். சில சந்தாப்பங்களில் தமிழ் - முஸ்லிம் கலவரங்களும் இடம்பெற்றன. 1954ல் சம்மாந்துறையில் இடம்பெற்ற மோதல் இதற்கான உதாரணமாகும் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் இருதரப்பினரிடையிலும் சில மோதல்கள் இடம் பெற்றபோதிலும், அவை அனைத்தும் விரைவில் சமாதானமாகத் தீர்மானிக்கப்பட்டன.

சிங்கள அரசினால் தமிழ் மக்களின் மீதான அடக்குமுறை தீவிரமடைந்ததோடு தனி ராச்சியம் அவசியமென்ற கருத்து உருவாகியது. 1976ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழீழ ராச்சியத்தை வென்றெடுப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது. இதிலுள்ள விசேட அபிவிருத்தி தமிழ் அரசியல்வாதிகள் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதற்குப் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்ததாகும். வட்டுக்கோட்டை இணக்கப்பாட்டின் மூலமாக வடக்கு – கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவத்தை ஏற்றுக்கொண்டதோடு, அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்கும் உடன்பட்டனர். சுவிட்சர்லாந்தில் காணப்படும் சமஷ்டி முறையைப் போன்று எந்தப் பிரதேசமோ அல்லது மதமோ வேறொரு பிரதேசத்தினால் அல்லது மதத்தினால் பாதிப்புறாத வகையில் பல்வேறு பிரதேசங்களில் வாழும் மக்களுக்குப் பிரதேச சுயாட்சி உரிமையை உறுதிசெய்யும் வகையிலான அரசியல் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறும் தமிழீழ ராச்சியத்தின் ஒரு பிரிவினராகிய முஸ்லிம் மக்களுக்கு அவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் சுயாட்சி உரிமை வழங்குவதாக தமிழர் விடுதலைக்கூட்டணி உறுதியளிக்கின்றது". வட்டுக்கோட்டை கொள்கை அறிக்கை பக்கம் 300. இது வடக்கு – கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட முதலாவது உடன்படிக்கையென்று கூறலாம்.

1977க்குப் பின்னர்

1977இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஈழ ராச்சியமொன்றை அமைப்பதற்காகப் போட்டியிட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு எம்.எச்.எம். அஷ்ரப் போன்ற இளைஞர்களாகிய முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் ஆதரவு வழங்க முன்வந்தனர். 1977 பொதுத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வடக்கு – கிழக்கில் பெரு வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக அமர்ந்தபோதிலும், சிறிது காலத்தினுள் ஆயுதந்தரித்த தமிழ் இளைஞர் குழுக்கள் இவர்களை மீறிச் செயலாற்றத் தொடங்கினர். தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்கள் மத்தியில் முன்னணிக்கு வந்த விடுதலைப் புலிகள் அமைப்பு பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் செல்வநாயகம் போன்ற தமிழ் பேசும் மக்களென்ற வகையில் முஸ்லிம்களை ஒன்று திரட்ட முயன்றது. முஸ்லிம் மக்கள் தமது சமூக, கலாசார மற்றும் அரசியல் தனித்துவத்துக்காக குரல்கொடுக்க முனைந்த வேளையில் அவர்களுக்கெதிரான ஆயுதந்தாங்கிய தாக்குதல்கள் ஆரம்பமாகின. 1984ல் ஆரம்பமாகிய இந்த முஸ்லிம்களுக்கெதிரான ஆயுதந்தாங்கிய தாக்குதல்கள் 1990 இறுதிப்பகுதியில் மிகவும் உயர்ந்த மட்டத்துக்குச் சென்றது.

வடக்கு கிழக்கு

முஸ்லிம்களுக்கெதிரான ஆயுதந்தாங்கிய தாக்குதல்கள் இடம்பெற்ற அதே வேளையில் முஸ்லிம்களுக்கான முதலாவது அரசியல் கட்சியும் தோற்றம் பெற்றது. பிரசித்திபெற்ற முஸ்லிம் தலைவராகிய டாக்டர் பதியுதீன் மொஹமட் தலைமையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்டதோடு, எம்.ஐ.எம். மொஹிதின் அதன் ஆரம்பப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி வடக்கு – கிழக்கு முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் அமைப்புடனும், தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் தொடர்ச்சியாகப் பல பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. இந்தியாவில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் 1987 செப்டெம்பர் 17ம் திகதி வடக்கு – கிழக்கு முஸ்லிம் மக்கள் குறித்த இணக்கப்பாட்டு அறிக்கை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் சிவசிதம்பரத்தினதும், செயலாளர் அமிர்தலிங்கத்தினதும் கையெழுத்துகளுடன் வெளியிடப்பட்டது. "தமிழர் விடுதலை கூட்டணி இந்திய கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாச பூமியென்பதை ஏற்றுக்கொண்டுள்ளது. இவர்களுள் முஸ்லிம் மக்களைத் தனியாகப் பிரித்து இனங்காண வேண்டுமென்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொள்ளுகின்றது". என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் இலங்கை முழுவதும், அதே போன்று வடக்கு, கிழக்கிலும் சிறுபான்மையினராகவே உள்ளனர். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கின்றது.

முஸ்லிம் ஐக்கிய

விடுதலை முன்னணி இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவுமில்லை, வடக்கு – கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுமில்லை. ஆயினும் அந்த வேளையில் எம்.எச்.எம். அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைத் தாபித்திருந்ததோடு வடக்கு – கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவும் முன்வந்தார். அந்த வேளையில் இலங்கையின் இந்தியத்தூதுவராகக் கடமையாற்றிய ஜே.என். டிக்சித் "கொழும்பு நடவடிக்கை" என்னும் தமது நூலில் "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வளர்ந்துவரும் இளம் தலைவராகிய மொகமட் அஷ்ரப் என்பவருடன் தொடர்புகளை வளர்த்துக்கொண்டார். மட்டக்களப்பு நகரில் தனது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் முன்னிற்பதாகவும் பிரசார வேலைகளுக்கு அவசியமான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளைத் தமது குழுவுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்" - பக்கம் 329.

விடுதலைப் புலிகள்

அமைப்பு மு.ஐ.வி.மு இந்திய அரசின் "பொம்மையாக" செயல்படுவதாகத் தெரிவித்தது. இதன் பிரகாரம் 1988 ஏப்ரல் 15,16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் 19ம் திகதிகளில் கலாநிதி. பதியுதீன் மொஹமட் தலைமையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் குழுவொன்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. இதன் பிரதிபலனாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்பந்தமாக இரு தரப்பினரும் ஏப்ரல் 20ம் திகதி கூட்டு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர். இந்த உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் மத்திய குழு உறுப்பினர் சதாசிவம் கிருஷ்ணகுமார் அல்லது "கிட்டு" அவர்களும், மு.ஐ.வி.மு சார்பில் அதன் செயலாளர் எம்.ஐ.எம். மொஹிதீனும் கைச்சாத்திட்டனர். இது விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், வடக்கு – கிழக்கு முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்ட முதலாவது உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப் புலிகள் அமைப்பு முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும் வாசபூமியையும் ஏற்றுக் கொண்டது.

அஷ்ரப் காலம்

1989 பொதுத்தேர்தலில் போட்டியிட்ட எம்.எச்.எம் அஷ்ரப் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சுவிட்சர்லாந்தின் கன்டன் முறைமை சிறந்ததென்று தெரிவித்தார். "வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கான கன்டன் முறை அலகுகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இவற்றை அமைப்பது புதிய எல்லைவரைவு ஆணைக்குழு விதந்துரைப்பின் அடிப்படையில் இடம்பெற வேண்டுமென்றும், இந்தக் கன்டன் ஆட்சி அலகுகளுக்காகத் தனித்தனியாக அமைச்சரவைகள் இருக்க வேண்டுமென்றும் வடக்கு, கிழக்குப் பொருளாதார வலய அமைச்சரவையில் மூன்று கன்டன் அலகுகளைச் சேர்ந்த அமைச்சர்களும் இடம்பெற வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சகல அதிகாரங்களும், விடயங்களும் இவற்றுள் அடங்குதல் வேண்டும்." ஆயினும் அஷ்ரப்பின் "கன்டன்" ஆலோசனைகளுக்கு கணிசமான அளவு பிரதிவிளைவு கிட்டவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் பிரதிநிதித்துவம் பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தியா சார்பான கொள்கையைப் பின்பற்றுவது குறித்தும், இந்திய சமாதானப் படையுடன் ஒத்துழைப்பது குறித்தும் விடுதலைப் புலிகள் அமைப்பு தனது பலமான எதிர்ப்பைத் தெரிவித்தது. இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் அரச படைகளுடனும், அரசாங்கத்துடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருந்த உறவு விடுதலைப் புலிகள் அமைப்பின் பலத்த சந்தேகத்துக்குக் காரணமாக அமைந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இந்த நடத்தைப் போக்கு வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட பலமான தாக்குதல்களுக்கு ஒரு காரணமென்று சில அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 1990 அக்டோபர் 30ம் திகதி முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டும் அவர்களின் தலைவரென்று அழைக்கப்படும் அஷ்ரப்பிடம் அவர்கள் போகலாம். அவர் அம்பாறை அல்லது மட்டக்களப்பு மாவட்டத்தில் அவர்களுக்கு உணவளிப்பார்" என்று தெரிவித்தார்.

1988 – 93 காலத்தினுள் ஜனாதிபதி பிரேமதாசவுக்குப் பாராளுமன்றத்தினுள்ளும், வெளியிலும் ஆதரவு வழங்கிய எம்.எச்.எம் அஷ்ரப் 1994 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் கூட்டை அமைத்தார் இரு கட்சிகளினதும் செயலாளர்களும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், எம்.எச்.எம். அஷ்ரப்பும் கையெழுத்திட்ட இந்த உடன்படிக்கையின் மூன்றாவது விடயத்தின் பிரகாரம் :

1)
தேசிய இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் சகல குடிமக்களினதும் சம்மதத்துடனான விரைவான தீர்வொன்று காணப்படவேண்டுமென்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ளது.

2)
வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த சகல முஸ்லிம் மக்களும் மீண்டும் அங்கு குடியேறுவதற்குரிய விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று விரைவாக ஏற்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுமென்று பொது ஜன ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ளது." ஆயினும் 1995ல் மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமாகியதும் இவற்றை நிறைவேற்ற முடியாது போயிற்று.

மூன்றாம் ஈழப்போர் நிகழ்ந்த 1995 – 2001 காலப்பகுதி முழுவதும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம் மோதல்கள் ஏற்பட்டன. கப்பம் பெறுதல், ஆட்கடத்தல், தாக்குதல், கொலை போன்ற நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெற்றன. 2002 பெப்ரவரி 22ம் திகதி அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பிடையே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் கழிந்த 18 மாதங்களில் கிழக்கு மாகாண வரலாற்றில் என்றுமே இடம்பெற்றிராத வகையில் தமிழ், முஸ்லிம் மோதல்கள் வெடித்தன. கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மோதல்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைவது விடுதலைப் புலிகள் அமைப்பு முஸ்லிம் மக்களை அடிமைப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 ஏப்ரல் 13ம் திகதி கிழக்கின் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் தலைவர் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், வடக்கு, கிழக்கு அவர்களுக்கும் தாயக பூமி என்பதையும் ஏற்றுக் கொண்டார். முஸ்லிம் அகதிகள் மீண்டும் தமது தாயகத்திற்கு வருவதற்கு இடமளித்தல், அவர்கள் மீண்டும் குடியேறுதல், விடுதலைப் புலிகள் அவர்களிடமிருந்து பலவந்தமாக எடுத்துக்கொண்ட காணிகளை, முஸ்லிம் மக்களுக்கெதிரான வன்செயல்களை நிறுத்துதல் போன்றவை உள்ளிட்ட பரந்துபட்ட கருத்தொருமிப்புகள் அடங்கிய உடன்படிக்கையொன்றில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

வடக்கு – கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் சம்பந்தமாக 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொன்னம்பலம இராமநாதன் உள்ளிட்ட தமிழ் இனவாதிகள் கொண்டிருந்த நிலைப்பாடு 21ம் நூற்றாண்டிலும் பெருமளவிலான மாற்றங்களை அடையவில்லை. அன்று போல் இன்றும் முஸ்லிம் மக்கள் தமது சமூக, கலாசார, அரசியல் தனித்துவத்துக்காகக் குரலெழுப்பி வருகின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கூடுதல் அதிகாரங்களோடு இடைக்கால நிர்வாகமொன்று வழங்கப்படுமாயின் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்குத் தனியான இடைக்கால நிர்வாக அலகொன்று அவசியமென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதை இச் சூழமைவிலேயே ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்.

(நன்றி : சாம விமர்சி)

ஆர்ஜென்ரீனா – அபியற்ற நினைவாலயம்

ஆர்ஜென்ரீனாவின் கடந்த காலத்தைப் பற்றி தரமான வரலாற்றை கொடுப்பதே அபியற்றா நினைவாலயத்தின் நோக்கமாகும். 1974-1983 வரை ஆர்ஜென்ரீனா மக்களின் மனித உரிமைகள் எவ்வாறு நசுக்கப்பட்டது என்பதையும் பின்னர் அது எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்பதையும் அபியற்றா நினைவாலயம் சுட்டுகின்றது. புவனர்ஸ்ஆயர்ஸ்(தலைநகரம்) நினைவாலயத்தில் எவ்வாறு நகரம் பூராவும் 600 வதை முகாம்கள் இயங்கின என்பதை காட்டுகிறது. மக்களிடையே ஜனநாயக பண்புகளை வளர்ப்பதுவும், திரும்பவும் சர்வாதிகாரம் ஏற்படாமல் தடைசெய்வதற்காக ஜனநாயக அடித்தளத்தை வலிமையடையச் செய்வதும் நினைவாலயத்தின் இன்னொரு நோக்கமாகும்.

சர்வாதிகாரத்துக் கெதிரான போராட்டம் முடியவில்லை. கொடுமைகட்கு பொறுப்பானவர்கள் இன்னமும் அரச உயர் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். காணாமல்போன ஆயிரக் கணக்கானோரின் கதி என்னவென்று தெரியவில்லை.

சர்வாதிகார ஆட்சியின்போது 600 வதை முகாம்கள் இரகசியமாக இயங்கின. இங்குதான் காணாமல்போனவர்கள் வதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இந்த முகாம்கள் பிரபலமான இடங்களில் அமைக்கப்படவில்லை. மாறாக பெற்றோல் நிலையங்கள், பலசரக்கு கடைகள், பாடாசலைகள் போன்ற இடங்களில் இரகசியமாக இயங்கின. புவனர்ஸ் அயசில் முன்னர் இயங்கிய தடுப்பு முகாம்களுக்கு மக்கள் அழைத்துவரப்பட்டு பழைய கொடுமைகளை பார்க்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வீடியோ படங்களை பார்க்க முடியும். கொடுமைக்கு உள்ளானவர்களின் அவலங்களை பார்க்கவும், கேட்கவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மக்களின் ஜனநாயக பங்கேற்றல் ஊக்குவிக்கப்படுகிறது.

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படாவிடின் கொடுமைகள் இடம்பெறுவதை தடுக்கமுடியாது. கொடுமைகள் பயங்கரங்கள் கண்களுக்கு முன்னாலேயே இடம்பெறலாம். ஜனநாயக பங்கேற்றல் அரசியை தடுத்து நிறுத்த முடியும். தட்டிக்கேட்க முடியும் என்ற தத்துவத்தை நிலைவாலயம் சுட்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் காணாமல் போதல்களின் தோற்றப்பாடு

–எம்.சி.எம். இக்பால்–

1. அறிமுகம்

சுதந்திரம் கிடைத்ததிலிருந்து இலங்கையில் அவசரகால அதிகாரங்கள் திரும்பத் திரும்ப விதிக்கப்பட்டன. அவசரகால ஆட்சியை விதிப்பதற்கு குறிப்பிடப்படும் குறிக்கோள் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதாக இருந்தபோதிலும் அவசரகால அதிகாரங்கள் சட்டத்தையோ அல்லது தனிப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகளையோ மதிக்காமல் பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் செயற்படுவதை இயலச் செய்துள்ளது. உண்மையிலேயே பொலிசாரின் அல்லது பாதுகாப்புப் படையினரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் ஆயிரக்கணக்கான ஆட்கள் காணாமல் போவதையும் உள்ளடக்கி பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் மனித உரிமைகளை முழுமையாக மீறுவதற்கு சில சமயங்களில் அவசரகால ஒழுங்குவிதிகள் வசதியளித்துள்ளன. அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவது ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழான தேவைப்பாடு அவசரகால ஆட்சி தொடரப்படுவதைத் தடைசெய்யவில்லை.

இந்த அத்தியாயம் இலங்கையில் ஆட்கள் காணாமல் போதல்களின் அண்மைக்கால வரலாற்றை மீளாய்வு செய்கின்றது. இலங்கை : மனித உரிமைகளின் நிலை அறிக்கையில் இந்த விடயத்திற்கென முதற் தடவையாக தனியான அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1998 நவம்பரில் ஜனாதிபதி குமாரதுங்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஆட்கள் காணாமல் போதல்களைப் பற்றிய வலய ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் காண்புகள் மீது கவனத்தை ஈர்த்திருப்பதுடன் ஆட்கள் காணாமல் போதல்களை குறைப்பதற்கான ஒரு வெளிப்படைத் தோற்றமுள்ள வழிவகையாக தற்போதைய அரசாங்கம், முந்திய அரசாங்கம் ஆகிய இரண்டு அரசாங்கங்களினாலும் நிறுவப்பட்ட பிற நிறுவனங்களை மீளாய்வும் செய்கின்றது. 2000 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட காணாமல் போதல்கள் தொடர்பிலான தகவல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சிவில் போராட்டம் என்ற நோக்கில் 1998 ஜனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் அப்பிரதேசங்களில் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்ட அநேக நூற்றுக்கணக்கான ஆட்கள் காணாமல் போதல்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி ஆய்வு செய்வதற்கு இதுநாள்வரை அதிகாரமளிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சு உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தில் ஆட்கள் காணாமல் போதல்களை ஆய்வு செய்யும் அபகீர்த்தி பெற்ற ஆய்வுச் சபையைத் தவிர்ந்த பிற எந்த உத்தியோகபூர்வ நிறுவனத்திற்கும் அவ்வண்ணம் காணாமல் போதல்கள் பற்றி ஆய்வு செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை என்பதை தொடக்கத்திலேயே வலியுறுத்திக் கூறவேண்டிய தேவை உள்ளது.

இதன்படி மக்கள் விடுதலை முன்னணியின் (J.V.P) கிளர்ச்சியின் போதும், அதற்குப் பின்னரம் தென்னிலங்கையில் இடம் பெற்ற ஆட்கள் காணாமல் போதல்களினதும், 1988இல் இருந்து வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்ற ஆட்களின் காணாமல் போதலினது அளவும், பாங்கும் இப்பொழுதாவது ஓரளவு உத்தியோகபூர்வ ஏற்பை பெற்றுக் கொண்டுள்ளன. ஆனால் இதற்கு முற்பட்ட ஆண்டுகளில் வடக்கிலும் கிழக்கிலும் இடம் பெற்ற ஆட்கள் காணாமல் போதல்களைப் பற்றி இவ்வண்ணம் கூறமுடியாது.

ஆண்டுகளின் அடிப்படையில் சில காலங்களில் மக்களின் காணாமல் போதல்கள் உச்சநிலையில் இருந்தன. இவை பெரும்பாலும் அரசாங்கத்திற்கு எதிரான வன்செயல்களின் பிரதிபலிப்பாகவும், கடுமையான அவசரகால ஆட்சி விதிக்கப்பட்டதன் நோக்கிலும் இடம்பெற்றுள்ளன. இலங்கையின் ஆட்கள் காணாமல் போதல்கள் வரலாற்றின் குறிப்பிடத்தக்க சம்பவங்களையும் நோக்கின் : 1971 இல் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியையும், 1983ஆம் ஆண்டின் இனக்கலவரங்களை தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் அதிகரித்த போராட்டத்தையும், 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டதன் பின் மக்கள் விடுதலை முன்னணி தென்னிலங்கையில் சிவில் நிர்வாகத்தை குழப்பியமையும், 1989ஆம் ஆண்டிலும், 1990ஆம் ஆண்டிலும் ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் இடம் பெற்றதன் பின்னர் அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ. க்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் 1990 ஜூனில் முறிவடைந்தமையும், 1996 ஜூலையில் யாழ்ப்பாண நகரத்திற்குப் பொறுப்பாகவிருந்த தரைப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் கெப்பன்கம (Major General Hapengama) மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை ஆகிய நிகழ்வுகளை உள்ளடக்குகின்றன.

1989 ஆம் ஆண்டிலும், 1990 ஆம் ஆண்டிலும் மக்கள் விடுதலை முன்னணி கிளர்ச்சியின் போது பாராளுமன்றத் தேர்தலும் சனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட் போது ஆட்கள் காணாமல் போதல்களின் வீதம் குறிப்பாக பயங்கரமான மட்டங்களை அடைந்திருந்தது. 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டங்களின் ஏற்பாடுகளும் (PTA), 1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (PSO) 5அம் பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளும் (ER) பொலிசாருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் ஆட்களைக் கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் பரந்தளவிலான அதிகாரங்களை வழங்கியுள்ளதுடன் நீண்ட காலங்களுக்கு அறிவிப்புச் செய்யாமல் தடுத்து வைத்திருக்கவும் முடியும். இத்துடன் கூடுதலாக சில காலங்களில் செயல்வலுவில் இருந்த அவசரகால விதிகள் சடலங்கள் பிரேதப் பரிசோதனைகள் அல்லது மரண விசாரணைகள் செய்யப்படாமல் அகற்றப்படுவதை அனுமதித்துள்ளது. இது கட்டுக்காப்பில் இருந்தவர்களின் அல்லது வேறு வித்தில் இருந்தவர்களை வேண்டுமென்றோ அல்லது சட்ட விரோதமாகவோ பாதுகாப்பு படையினராலும் பொலிசாரினாலும் செய்யப்பட்ட கொலைகளையும், ஆட்கள் காணாமல் போதல்களை பொலிசாரும் ஆயுதப்படையினரும் தண்டனையின்றி செய்வதற்கும் வசதியளித்துள்ளது. இக்காலப் பகுதியில் காணாமல் போனவர்களில் பல்லாயிரக்கணக்கானவர்களில் அனேகர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினதும், அவசரகால ஒழுங்கு விதிகளினதும் ஏற்பாடுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாக இருந்துள்ளதுடன் ஏனையோர் எந்த சட்ட ஏற்பாட்டினதும் தொடர்பின்றி சந்தேகத்தின் பேரில் மட்டும் கடத்தப்பட்டவர்களாக இருந்தனர். எனினும் இலங்கையின் அரசியலமைப்பின் 15(7) ஆம் உறுப்புரை, பிரகடனப்படுத்தப்பட்டவைகளும் 12ஆம் 13 (1) அம், 13 (2) ஆம் 14ஆம் உறுப்புரைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளுமான உரிமைகளின் மட்டுப்படுத்தலுக்கு ஏற்பாடு வழங்குகின்றது.

அது பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சுகாதாரம், நல்லொழுக்கத்தின் தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பாதுகாப்பு நலனில் அல்லது சனநாயக சமூகம் ஒன்றின் பொது நலனுக்கான பிற..... இன உரிமைகள், சுதந்திரத்துக்குரிய அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் உரிமைகளை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடு வழங்குகின்றது.

காணாமல் போதலினால் பாதிக்கப்பட்ட அநேகர் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் பிரிவினைவாதப் பகுதியினராலும், தென்னிலங்கையிலுள்ள பெருமளவிலான சிங்கள மக்கள் விடுதலை முன்னணி உளுப்பினர்களாலும் அரசுக்கு எதிராக படைக்கலம் தாங்கி எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாகவே தடுத்து வைக்கப்பட்டவர்களாவர். ஆயிரக்கணக்கான காணாமல் போதல்களுக்கு வழிவகுக்கும் தண்டனையிலிருந்து நீங்குகையுடன் மனித உரிமைகளின் முழுமையான மீறல்களை பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் செய்யக் கூடியதாக இருந்த காலப்பகுதியில், தங்களுடைய எதிரிகளை ஒழித்துக்கட்டி விடுவார்கள் என்ற நம்பிக்கையில் பொலிசாருக்கும், பாதுகாப்பு படையினருக்கும் பொய்யான தகவல்களை வழங்கியதன் மூலம் தங்களுடைய சொந்த மனக்குறைகளையும், அரசியல் ரீதியான மனக்குறைகளையும் மனச்சாட்சியற்ற ஏனைய மக்கள் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காலப் பகுதியில் மனித உரிமைகளில் சர்வதேச ரீதியாக இலங்கை கெட்ட பெயரைப் பெற்றிருந்தது. இலங்கையில் பலவந்தமான மற்றும் தன்னிச்சையற்ற காணாமல் போதல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் கூற்றின்படி இப் பணிக்குழுவிற்கு அறிவிக்கப்பட்ட ஆட்கள் காணாமல் போதல்களின் எண்ணிக்கை ஈராக்குக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

2. இலங்கையில் ஆட்களின் காணாமல் போதல்களுக்கு காரணமான வழிவகைகள்?

போதல்களுக்கான வழிவகையானது காலப்போக்கில் மாற்றமடைந்துள்ளதுடன், 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அறிவிக்கப்பட்டுள்ள காணாமல் போதல்களின் வீதம் துரிதமாக அதிகரித்துள்ளது. 1984ஆம் ஆண்டிற்கும், 1987ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கும் இடையில் சர்வதேச மன்னிப்புச் சபையானது 1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்தின் போது, தமிழ் பிரிவினவாத குழுவினர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்களில் 680 ஆட்களுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் காணாமல் போயுள்ளனர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. 1987 மார்ச் மாத நடுப்பகுதியிலிருந்து 1990 மார்ச் மாதம் வரையுள்ள காலப்பகுதியில், 1987ஆம் ஆண்டின் இந்திய இலங்கை உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குப் பொறுப்பாக இருந்ததுடன் இக்காலப்பகுதியில் சர்வதேச மன்னிப்புச் சபை 43ஆட்களின் காணாமல் போதல்களைப் பதிவு செய்துள்ளது. இதற்கு இந்திய அமைதிகாக்கும் படை பொறப்பாக இருந்ததாக நம்பப்பட்டது. இந்த விடயங்கள் அநேகமாக சாட்சிகள் முன்னிலையில் சீருடை தரித்த பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சம்பந்தப்பட்டவைகளாக இருந்தன. இவர்கள் பின்னர் எப்பொழுதும் காணப்படாதவர்களாக இருந்தனர். சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் படையினர்கள் கைதிகளை தாங்கள் வைத்திருந்தமையை மறுத்துள்ளதுடன் உறவினர்கள் அவர்கள் இருக்கின்ற இடங்களை கண்டறிய முடியாதவர்களாகவிருந்தனர். சில சமயங்களில் இளைஞர்கள் பெரிய தொகுதியினர்களாக ஒன்றாகக் கைது செய்யப்பட்டதுடன் காணாமலும் போயுள்ளனர்.

1987ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு இந்திய அமைதிப்படையின் வருகையுடன் இலங்கை பாதுகாப்புப் படையினர் தென்னிலங்கைக்குச் சென்றனர். இங்கு மக்கள் விடுதலை முன்னணி இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக ஆட்திரட்டலைச் செய்துகொண்டிருந்தது. மக்கள் விடுதலை முன்னணியானது ஒப்பந்தத்திற்கு ஆதரவு வழங்கிய ஆளும் கட்சி உறுப்பினர்களையும், இடது சாரிக் கட்சி உறுப்பினர்களையும், பாதுகாப்புப் படை உறுப்பினர்களையும் ஏனையோர்களையும் கொலை செய்வதற்கு இலக்கு வைக்க தொடங்கியது. அவர்களுடைய பிரசாரம் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் பரந்தளவில் வேலை நிறுத்தங்களையும், வேலை செய்யாமையையும் வினைமுறைப்படுத்தும் பயங்கர உத்திகளைப் பயன்படுத்தினர். இந்த விடயத்தில் பாதுகாப்புப் படைகளின் பதிலிறுப்பு எதிர் பயங்கரவாத உத்திகளை உபயோகிப்பதாக இருந்தது. இதில் நீதி முறையற்ற கொலைகளினதும், காணாமற் போதல்களினதும் எண்ணிக்கையில் ஆள்கடத்தலையும், கொலைகளையும் உள்ளடக்கிய பெரிய அதிகரிப்பு ஏற்பட்டது. இது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே தீய கொலை புரியும் கும்பல்களால் செய்யப்பட்டதாகக் காரணம் காட்டப்பட்டது. இவை சில விடயங்களில் பின்னர் பொலிசாருடன் அல்லது பிற பாதுகாப்புப் படைகளுடன் தொடர்புடையனவாக காணப்பட்டுள்ளன.

1990 ஜூன் மாதமளவில் எல்.ரீ.ரீ.ஈ. க்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையே கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்ட போது தென்னிலங்கையில் பயனுள்ள முறையில் மக்கள் விடுதலை முன்னணி அடக்கி ஒடுக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு இலங்கை பாதுகாப்பு படைகள் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான கொலைகள், காணாமல் போதல்களை மேற்கொள்ளும் யுத்திகளுடன் திரும்பிச் சென்றனர். போர் மீண்டும் தொடங்கிய ஆரம்ப மாதங்களில் 3000 மக்கள் வரை கிழக்கு மாகாணத்தில் காணாமல் போயுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில், 1990ஆம் அண்டுகளில் தன்னிச்சையில்லாமல் ஆட்கள் அகற்றப்பட்டது. பின்னர் காணாமல் போகுமாறு செய்யப்பட்ட வழிவகைகள், மத்திய வலய ஆணைக்குழுவென அழைக்கப்படும் மத்திய, வடமேல், வட மத்திய, ஊவா மகாணங்களில் ஆட்கள் தன்னிச்சை இல்லாமல் அகற்றப்படுதல் அல்லது காணாமல் போதல் மீதான சனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை II இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவினால் ஆய்வு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பிலான கண்டுபிடிப்புகளில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட சாராம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) பொலிஸ் ஆளணியினர்களினாலும் படைக் கலந்தாங்கிய படையினர்களாலும் அல்லது கண்டறியப்படாத பிறரினாலும் சுற்றி வளைப்புகளின் போது அல்லது சோதனைச் சாவடிகளில் அல்லது பல்வேறு அமைவிடங்களில் ஆட்கள் தன்னிச்சை இல்லாமல் அகற்றப்பட்டுள்ளனர்.

(ஆ) சில விடயங்களில் ஆட்களின் பட்டியல்கள் அந்தந்த பிரதேசத்திலுள்ள சில அரசியல் வாதிகளினால் கொடுக்கப்பட்டுள்ளதாக தோற்றுகின்றது. பிற அனேக விடயங்களில் தன்னிச்சை இல்லாமல்

அகற்றப்பட்டவர்கள் ஒன்றில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி (SLFP) அமைப்பாளர்களாக அல்லது ஸ்ரீ.ல.சு.க.யின் தீவிர ஆதரவாளர்களாக இருந்தனர். அப்போதைய ஆட்சி பீடத்தின் அரசியல் எதிரிகள், மக்கள் விடுதலை முன்னணியை அடக்கி ஒடுக்கும் போர்வையின் கீழ் அகற்றப்பட்டுள்ளனர் என்பது தெளிவாக தெரிகின்றது.

1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1990ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலும் இடம் பெற்ற மிகப்பெரும் எண்ணிக்கையிலான கொலைகளும், காணாமல் போதல்களும் அக்காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்களுக்குத் தெரிந்த நிலையிலும் மறைமுக அங்கீகாரத்துடனும் மேற்கொள்ளப்பட்டன என்பதைக் காண்பிக்கின்றன.

ஆட்களின் அகற்றல்களினதும், கொலைகளினதும் பகுப்பாய்வொன்று 1988ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் திகதி தொடக்கம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காண்பிக்கின்றதுடன் இது பொதுத் தேர்தல் வரையும் அதற்குப் பின்னரும் இந்த விதத்தில் தொடர்ந்து கொண்டிருந்தமையையும் காண்பிக்கின்றது. அன்றிலிருந்து மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சினையை நியாயமற்ற முறையில் பாதுகாப்பு ஆளணியினர்கள் தங்களுடைய பதவியை துறக்காவிட்டால் அவர்களுடைய குடும்பத்தவர்கள் கொல்லப்படுவார்கள் என மக்கள் விடுதலை முன்னணியினால் விடுவிக்கப்பட்டதாக அர்த்தம் கொள்ளப்பட்ட இறுதி எச்சரிக்கை காரணமாக கண்மூடித்தனமான ஆட்கடத்தல்களையும் கொலைகளையும் செய்வதற்கு தூண்டப்பட்டனர். இது தங்களுடைய அரசியல் எதிரிகளை நசுக்குவதற்கு பாதுகாப்புப் படையினர்களைத் தூண்டுவதற்கு அப்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியாக இருந்திருப்பது சாத்தியமானதாகும்.

(இ) அநேகமாக ஆட்கள் கடத்திச் செல்லப்பட்ட விடயங்கள் யாவற்றிலும் அவர்கள் விசாரிக்கப்படுவதற்கும், அவர்களுடைய கூற்றுக்கள் பதிவு செய்யப்படுவதற்குமாக என்ற சாட்டில் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

(ஈ) அத்தகைய அநேக விடயங்களில் அப்பிரதேசத்தின் பொலிஸ் நிலையங்கள் அல்லது தரைப்படை முகாம்கள் அத்தகைய அகற்றல்களில் பங்கு பற்றிய ஆட்களை சில சாட்சிகள் அடையாளம் கண்டறிந்த போதிலும் கூட அந்த ஆட்களைத் தாங்கள் கடத்தியதை மறுத்துள்ளனர்.

(உ) சில விடயங்களில் அவ்வண்ணம் அகற்றப்பட்ட ஆட்கள் இவ்வாணைக் குழுவிற்கு எவர்களினால் வழங்கப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டனவோ அதே முறைப்பாட்டாளர்களினால் அல்லது அதே பிற ஆட்களினால் பொலிஸ் நிலையங்களிலும் தரைப்படை தடுப்பு முகாம்களிலும் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்டமையைக் கண்டுள்ளனர். காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட ஆட்களின் விடயத்தில் பொலிசாரினால் அல்லது பாதுகாப்புப் படையினர்களினாலும் வைத்திருக்கப்படும் எந்தப் புத்தகங்களிலும் அல்லது இடாப்புகளிலும் கைது அல்லது தடுத்து வைத்தல் பற்றிய பதிவுகள் எதுவும் செய்யப்பட்டதாக தெரியவில்லை.

(ஊ) அகற்றல்கள் பற்றி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்வதற்கு ஆட்கள் சென்ற போது அவர்கள் வழக்கமாகத் துரத்தப்பட்டதுடன் அவர்களுடைய முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை. முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட விடயங்களில் முறைப்பாட்டாளரினால் கூறப்பட்ட விடயங்கள் திரிபுகளுடன் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(எ) அநேக விடயங்களில் ஆட் கடத்தல்கள் பற்றிய முறைப்பாடுகளின் ஆச்சரியகரமான அம்சம் அவை பொலிஸ் நிலையத்தினுள் சிறிய தவறுகள் தகவல் புத்தகத்தில் பதியப்பட்டிருந்தமையாகும். கொல்லும் நோக்கத்துடன் செய்யும் ஆட் கடத்தல்கள் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் 20 வருட கடுழிய சிறைத்தண்டனையுடன் தண்டப் பணமும் செலுத்தப்படத்தக்க செயலாகும். சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்களும் அவர்களுடைய மேலதிகாரிகளும் அத்தவறுகளுக்குப் பொறுப்பானவர்களாக ஆக்கப்பட வேண்டும்.

(ஏ) பொலிஸ் நிலையங்களில் சில ஆட்கள் கட்டுக்காப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை நேரில் பார்த்த சாட்சிகள் இருந்த போதிலும் அந்த ஆட்கள் கட்டுக்காப்பிலிருந்ததை மறுத்து பொலிஸ் தலைமையகம் கடிதங்கள் வழங்கிய விடயங்களும் உண்டு.

(ஒ) சில விடயங்களில் ஆட்கள் கடத்தப்பட்டமைக்கும் கொலை செய்யப்பட்டமைக்கும் தனிப்பட்ட சொந்தப் போட்டிகளே காரணமாக இருந்தன.

3. ஆட்கள் காணாமல் போதலைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள்

இந் நாட்டில் மேற்கொள்ளப்படும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச மனித உரிமைகள் சமூகத்தினால் கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் கீழ் அரசாங்கமானது புதிய புதிய மனித உரிமைகள் பொறிமுறைகளை ஸ்தாபித்ததுடன் 1990ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இருந்து அனுசரணை வழங்கத் தொடங்கியுள்ளது. முதலில் 1989ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி கிளர்ச்சியின் உச்சநிலை முடிவடைந்த நேரத்தில் அரசாங்கமானது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கியது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொலிசாரினதும், இராணுவத்தினர்களினதும் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டவர்களை பார்வையிடத் தொடங்கியது. அது வலிந்து மேற்கொள்ளப்பட்ட அல்லது தன்னிச்சையில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கள் காணாமல் போதல்கள் மீதான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவையும் உடனடியான அல்லது தன்னிச்சையான நிறைவேற்றல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்களையும் இந்நாடடிற்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தது. பின்னர் 1991 ஆம் ஆண்டில் அது மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கு புதிய நிறுவனங்களை ஸ்தாபிக்கத் தொடங்கியுள்ளது. அது எடுத்த சில நடவடிக்கைகள் கீழே சுருக்கமாகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

எனினும் இலங்கையில் ஆட்கள் காணாமல் போகும் நடைமுறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் போதாதவைகளாக இருந்தன என்பதை தொடக்கத்திலேயே குறிப்பிட வேண்டியுள்ளது. காணாமல் போதல்கள் மேற்கொள்ளப்படும் வீதமானது நிச்சயமாகக் குறைந்துள்ள போதிலும் அவை இன்னும் தொடர்கின்றன. உதாரணமாக 2000 ஆண்டில் ஏற்பட்ட அத்தகைய 20 ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் இராஜாங்க திணைக்கள அறிக்கையானது இலங்கை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் ஆட்கள் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. இவ்வாண்டில் கொழும்பிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ ஆட்களின் காணாமல் போதல்கள் இடம்பெற்றதாக அறிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை. செப்டெம்பர் 29ஆம் திகதியன்று வவுனியாவிலும், திருகோணமலையிலும் தரைப்படையும், கடற்படையும் பொலிசாரும், துணை இராணுவப் படையும் 11 ஆட்கள் காணாமல் போதல் சம்பவங்களை நிகழ்த்தியுள்ளனர். ஜனவரியில் ஊர்காவல் படையினரால் கொண்டு செல்லப்பட்ட 3 தமிழர்களின் சடலங்கள் திருகோணமலைக்கு அருகாமலையில் காணப்பட்டன. இதில் இரு சடலங்கள் தலையின்றி இருந்தன. இலங்கைத் தரைப்படையினால் கைது செய்து சித்திரவதை செய்யப்பட்டதன் பின்னர் மிருசுவிலில் எட்டு தமிழ் குடிமக்கள் காணாமல் போயுள்ளதாக டிசம்பரில் அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு இலங்கை தரைப்படை வீரர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டதுடன் இவர்கள் 7 குடி மக்களை தாங்கள் கொலை செய்தமையை ஒப்புக் கொண்டுள்ளனர். இச்சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. பின்னர் இலங்கைத் தரைப்படையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரும் ஆறு மேலதிக இலங்கைத் தரைப்படை வீரார்களும் கைது செய்யப்பட்டனர். இவ் ஆண்டின் முடிவில் தரைப்படைத் தளபதி இந்த விடயம் பற்றி விசாரணை மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பித்தார். சர்வதேச மன்னிப்புச் சபையையும் (A) உள்ளடக்கி மனித உரிமைகள் பற்றிய அரசுசாரா அமைப்புக்கள் (NGO) இவ்வாண்டின் பிற்பாதியில் வவுனியால் ஆட்கள் காணாமல் போதல்களில் அதிகரிப்பொன்று ஏற்பட்டதாக அறிவித்துள்ளன. நீதிமுறையற்ற கொலைகளின் விடயத்தில் பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகள் மீதான தணிக்கை மற்றும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு அடிக்கடி போகாமலிருந்தமை காரணமாக ஆட்களின் காணாமல் போதல்களின் சரியான எண்ணிக்கையை ஆராய்ந்தறிய முடியாமலிருந்தது. எனினும் பலாத்காரமான அல்லது தன்னிச்சையற்ற ஆட்கள் காணாமல் போதல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் பணிக்குழுவானது இலங்கையை சரியாகத் தெளிவு படுத்தப்படாத ஆட்கள் காணாமல் போதல் சம்பவங்களை பெருமளவில் கொண்டுள்ள நாடாக பட்டியலிட்டுள்ளது. இவ்வாண்டிலும் முந்திய ஆண்டுகளிலும் காணாமற் போனவர்கள் இறந்து போனதாக ஊகிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் 2001 ஆம் ஆண்டிற்கான உலக அறிக்கை 2000ஆம் ஆண்டில் வவுனியாவில் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட 17 மக்களின் நிலைமையைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதமை பற்றிக் குறிப்பிடுகின்றது. இது சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற ஆட்கள் காணாமற் போதல்களின் அதிகரிப்பை உறுதிப்படுத்துகின்றது.

3.1 மனித உரிமைகள் சிறப்பு பணியணி (HRTF)

1973ஆம் ஆண்டின் 31ஆம் இக்க இலங்கை அடிப்படைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் 9 கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஓர் ஒழுங்குவிதியினால் 1991 ஓகஸ்டில் மனித உரிமைகள் சிறப்புப் பணியணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அரசாங்கத்தின் மாற்றம் காரணமாக இந்த அமைப்பின் செயலாற்றுகை மீளாய்வு செய்யப்பட்டு பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (PSO) 5ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் வழங்கப்படும் கூடுதலான அதிகாரத்துடன் இவ்வமைப்பு மீளமைப்புச் செய்யப்பட்டுள்ளது.10 மீளமைப்புச் செய்யப்பட்ட மனித உரிமைகள் சிறப்புப் பணியின் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருந்தன :

நீதிமுறைக் கட்டளை ஒன்றினால் தவிர பிற விதத்தில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுபவர்களின் அடிப்படை உரிமைகள் கடைப்பிடிக்கப்படுவதைக் கண்காணிப்பதற்கும் அவர்களுக்கு வழங்கப்படும் மனிதாபிமானக் கையாளுகையை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நோக்கத்திற்காக அந்த அமைப்பானது பின்வரும் அதிகாரங்களையும் கடமைகளையும் கொண்டிருப்பதையும் கண்காணித்தல், அந்த அதிகாரங்களும் கடமைகளும் பின்வருமாறு :

(1) அத்தகைய ஆட்களின் தடுத்து வைத்தலின் முழு விபரங்களுடன் விரிவானதும் செம்மையானதுமான பதிவேடொன்றை வைத்திருத்தலும் அவர்களுடைய அடிப்படை உரிமைகள் கடைப்பிடிக்கப்படுவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தலும் அவர்களுக்கு மனிதாபிமான கையாளுகை மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தலும்,

(2) தகுந்த அடையாளமறிதல் நடைமுறையொன்றின் மூலம் அத்தகைய ஆள் ஒவ்வொருவரைப் பற்றியும் விசாரணை செய்து அவரது ஆளடையாளத்தை நிறுவுதலும்,

(3) அத்தகைய ஆட்களின் நலனோம்பலைக் கண்காணித்தல்,

(4) தடுத்து வைத்தல் இடங்களின் பரிசோதனைகளை கிரமமாகச் செய்தலும் இடாப்புக் கூப்பிடுதல்களை செய்தலும், ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றுக்குப் பரிகாரம் காண்பதற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுத்தலும், அத்துடன்

(5) இந்த அமைப்பிற்கு செய்யப்படக்கூடிய எந்த முறைப்பாடுகளையும் அலலது முறையீடுகளையும் அல்லது மனக்குறைகளையும் பதிவு செய்தலும் உடனடியான பரிசார நடவடிக்கை எடுத்தலும்.

இப்பணிகளை நிறைவேற்றுவதில் மனித உரிமைகள் சிறப்புப் பணியணியானது கட்டுக்காப்பிலுள்ள ஆட்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவதில் குறிப்பாக அக்கறை கொண்டிருந்தது. அதன் உத்தியோகத்தர்கள் தடுப்பு நிலையங்களுக்கு அறிவிப்புச் செய்யப்படாத வருகைகளை மேற்கொண்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் அவர்களுடைய மனக்குறைகளைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பை அளித்து அவர்களை அந்தரங்கமாக விசாரித்ததுடன் தடுத்து வைத்தலுக்குப் பொறுப்பானவர்களை, வைக்கப்படுபவர்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்துமாறு வேண்டியுள்ளனர். மனித உரிமைகள் சிறப்புப் பணியானது தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பலருடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதற்கும் கூட உதவியுள்ளது. மனித உரிமைகள் சிறப்புப் பணியணியானது அத்தகைய காணாமல் போன தடுத்து வைக்கப்படுபவர்களின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதைப் பற்றியே முதன்மையாக அக்கறை செலுத்தியிருந்ததுடன் அது அத்தகைய நிகழ்வுகளுக்கு யார் பொறுப்பாகவிருந்தனரென்பதைப் பற்றிப் பொதுவாக ஆய்வு செய்யவில்லை.

அநேகமாக, மாகாணம் ஒவ்வொன்றிலும் மனித உரிமைகள் சிறப்புப் பணியணியானது பிராந்திய அலுவலகங்களுக்கு கூடுதலான அளவில் அடிக்கடி முறைப்பாட்டாளர்களும் தனது உத்தியோகத்தர்களும் விஜயம் மேற்கொள்வதை இயலச் செய்துள்ளது. எனினும் மனித உரிமைகள் சிறப்புப் பணியணியினால் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் கட்டுக்காப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்களின் காணாமற் போதல்கள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இதைத் தொடர்ந்து கட்டுக்காப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவரைப் பற்றியும் பொறுப்பானவர்களாக பொலிசாரையும் பாதுகாப்புப் படையினரையும் ஆக்குவதன் பொருட்டு விசேட ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ள, சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளின் 8ஆம் ஒழுங்குவிதியின் கீழ் 11 ஆம் திகதியிட்ட பணிப்பொன்றை விடுத்துள்ளார். இப்பணிப்பின் 3ஆம் பந்தி பின்வரும் வாசகங்களை கொண்டுள்ளது.

(1) கைது செய்பவர் கைது செய்யப்பட்டவருக்கு அல்லது அந்தக் கைது செய்யப்பட்டவரின் எந்த உறவினருக்கும் அல்லது நண்பருக்கும் தமது பெயரையும் வரிசைப் பதவியையும் குறிப்பிட்டு தம்மை அடையாளம் காண்பிக்க வேண்டும்.

(2) கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் கைதுசெய்வதற்கான காரணம் அறிவிக்கப்படல் வேண்டும்.

(3) கைதை அல்லது தடுத்து வைத்தலை செய்த்வர், கைது விடயம் பற்றிய அறிவித்தல் ஆவணம் ஒன்றைக் கைது செய்பவரின் வாழக்கைத் துணைவிக்கு அல்லது பெற்றோருக்கு அல்லது பிற நெருக்கமான உறவினருக்கு வழங்க வேண்டும்.

(4) கைது செய்யப்பட்டவரின் இருப்பிடமானது அவருடைய குடும்பத்தவர்களுக்கு தெரியப் படுத்தப்படுவதன் பொருட்டு அவர் உறவினர் ஒருவருடன் அல்லது நண்பருடன் தொடர்பு கொள்வதற்குரிய நியாயமான வழிவகை செய்யப்படல் வேண்டும்.

இந்த குறித்த பணிப்புகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் இப்பணிப்புகளை கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தண்டனை ஏற்பாடுகள் இல்லாமல் இருப்பதன் காரணமாக சட்டவிரோமான கைதுகளும் தடுத்து வைத்தல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

3.2 காணாமல் போதல் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்கள்

தன்னிச்சையில்லாத அகற்றல்கள், காணாமல் போதல்கள் பற்றி பொலிசாருக்கு அல்லது அதிகாரம் உள்ள ஏனையோருக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பயனளிக்கவில்லை. அத்தகைய முறைப்பாடுகளை அனேகமாக பதிவு செய்வதற்கு பொலிசார் தவறியுள்ளனர். காணாமல் போனவர்களின் உறவினர்கள் விரக்தியடைந்த நிலையில் உள்ளூரிலும் சர்வதேச நாடுகளிலும் உள்ள அரசாங்கம் சாரா அமைப்புக்களின் உதவியை நாடியுள்ளனர். அவர்கள் தங்களுடைய இழக்கப்பட்டவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் சர்வதேச மன்னிப்பு சபைக்கும் (AI) பலாத்காரமான அல்லது தன்னிச்சையில்லாத ஆட்களின் காணாமல் போதல் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் பணிக்குழுவிற்கு கூட முறைப்பாடு செய்துள்ளனர். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்களினாலும் மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபை ஆணைக்குழுவினாலும், மேற்கு நாடுகள், உதவி நன்கொடை அளிப்போர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட அழுத்தம் அப்போதைய ஜனாதிபதியாகிய திரு. ரணசிங்க பிரதேமதாசாவை தன்னிச்சையல்லாத அகற்றல்கள் பற்றி விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஆணைக்குழுவொன்றை நியமிக்கத் தூண்டியது. எனினும் ஜனாதிபதி பிரேமதாசா விசாரணைக்கு கடந்தகால ஆட்கள் காணாமற் போதல்களைத் திறந்து விடவில்லை. அதற்குப் பதிலாக அவர் பி.ஈ.டீ. சில்வா ஆணைக்குழு (B.E. De Silva Commission) எனக் குறிப்பிடப்படும் ஆணைக்குழுவை நியமித்து ஆணைக்குழு நியமிக்கப்பட்ட 1991 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்ற ஆட்கள் காணாமற் போதல்களை விசாரணை செய்வதற்கு பொறுப்பாணையை வழங்கினார். இக்காலமளவில் எப்படியிருந்த போதிலும் காணாமற் போதல்களின் வீதம் 1989ஆம் ஆண்டிலிருந்து அதன் உச்ச நிலையுடன் ஒப்பிடும் போது பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. முன்னர் இடம்பெற்ற பெருமளவு கொலைகளும், ஆட்கள் காணாமல் போனமைகளும் விசாரணைக்கு மூடப்பட்டிருந்தன.

1994ஆம் ஆண்டில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது ஆட்கள் காணாமற் போதல்களையும் மனித உரிமைகள் பாதுகாப்பையம் தனது தேர்தல் பிரசாரத்தில் ஒரு முக்கியமான அம்சமாக ஆக்கியிருந்தது. பொதுமக்கள் முன்னணி தன்னிச்சையற்ற ஆட்களின் அகற்றல்களுக்கும் காணாமல் போதல்களுக்கும் முற்றுப்புள்ளியிடுவதாக வாக்குறுதியளித்ததுடன் காணாமற் போதல்களுக்குப் பொறுப்பாகவுள்ளவர்களுக்கு எதிராக பயனுள்ள முறையில் நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது.

ஆட்சிக்கு வந்தவுடன் புதிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994 நவம்பர் 13ஆம் திகதியன்று ஆட்கள் தன்னிச்சையில்லாமல் கடத்தப்படுவதை அல்லது காணாமல் போதலை விசாரணை செய்வதற்கு மூன்று விசாரணை ஆணைக்கழுக்களை நியமித்தார். இந்த ஆணைக்குழுக்கள் வலய அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன. ஒரு வலயம் வடக்கு, மற்றைய மேல், தென், சப்பிரகமுவ மாகாணங்களை உள்ளடக்கியிருந்தது. அதே வேளையில் மூன்றாவது வலயம் மத்திய, வட மேல், வட மத்திய ஊவா மாகாணங்களை உள்ளடக்கியிருந்தது. இந்த ஆணைக்குழுக்களுக்கு 1988 ஜனவரி 1ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற காணாமற் போதல்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்பாணை வழங்கப்பட்டது. பி.ஈ.டீ. சில்வா ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்படாத 1988லிருந்து 1990 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமற் போதல்கள் பற்றி அறிவிப்பதற்கு இவ்வாணைக்குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. ஆனால் 1988ஆம் ஆண்டிற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் இந்நாட்டின் மற்றைய பகுதிகளிலும் இடம்பெற்ற நூற்றுக்கணக்கான ஆட்களின் காணாமற் போதல் சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

இந்த ஆணைக்குழுக்களின் தொடர்பு நியதிகள் பின்வருமாறு இருந்தன. பின்வருவனவற்றைப் பற்றி விசாரணை செய்வதற்கும் அறிவிப்பதற்கும் :

(அ) 1988 ஜனவரி 1ஆம் திகதிக்குப் பின்னர் தங்களுடைய வதிவிடங்களிலிருந்து எந்த ஆட்களுக்கும் தன்னிச்சையில்லாமல் அகற்றப்பட்டனரா அல்லது காணாமல் போகச் செய்யப்பட்டனரா என்பது.

(ஆ) அத்தகைய குற்றம் சார்த்தப்பட்ட அக்கற்றல்களை அல்லது காணாமற் போதல்களை நிலை நிறுத்துவதற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள சான்றுகள்.

(இ) அவ்வண்ணம் அகற்றப்பட்டதாக அல்லது காணாமற் போகச் செய்யப்பட்டதாக குற்றம் சார்த்தப்பட்ட ஆட்களின் தற்போதைய இருப்பிடங்கள்.

(ஈ) குற்றம் சார்த்தப்பட்ட ஆட்களின் அகற்றல்களுக்கு அல்லது காணாமற் போதல்களுக்குப் பொறுப்பான நபரை அல்லது நபர்களை சுட்டிக்காட்டக்கூடிய ஏதேனும் பொருட்கள் உள்ளனவா என்பது,

(உ) அவ்வண்ணம் இவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களுக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள்

(ஊ) எதிர்கலத்தில் அத்தகைய குற்றம் சார்த்தப்பட்ட செயற்பாடுகளின் நிகழ்வைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள்

(எ) அவ்வண்ணம் அகற்றப்பட்டதாக அல்லது காணாமற் போனதாக குற்றம் சார்த்தப்பட்ட ஆட்களின் பெற்றோர்களுக்கு அல்லது வாழ்க்கைத் துணைகளுக்கு அல்லது தங்கியிருப்பவர்களுக்கு வழங்கப்படக்கூடிய நிவாரணம் ஏதாவதிருந்தால்

இவ்வாணைக்குழுக்கள் மொத்தமாக 30,000 முறைப்பாடுகளைப் (காணாமல் போன ஆட்கள் அநேகரின் தொடர்பில் பெறப்பட்ட பல முறைப்பாடுகளை உள்ளடக்கியுள்ளன.) பெற்றுள்ளன. 1997 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இவ்வாணைக்குழுக்களிடம் அவற்றின் விசாரணைகளை நிறுத்திய நாளதுவரை அவற்றினால் விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. 1997 செப்டெம்பரில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அவற்றின் அறிக்கைகள் அமர்வுப் பத்திரங்களாக வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆணைக்குழுக்கள் அவற்றிடம் அறிவிக்கப்பட்ட சகல விடயங்களையும் பற்றி விசாரணைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ள முடியாமலிருந்தது.

அவை தங்களுடைய இறுதி அறிக்கைகளை எழுதிய போது மொத்தமாக 10,136 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படாமலிருந்தன. இந்த எஞ்சியுள்ள விடயங்களைக் கையாளுவதற்கு, ஜனாதிபதி நாட்டளாவிய நியாயாதிக்கத்துடனும் புதிய முறைப்பாடுகளை விசாரணை செய்வது தவிர்க்கப்பட்டமையைத் தவிர மூன்று வலய ஆணைக்குழுக்களின் அதே பொறுப்பாணையுடன் இன்னுமொரு ஆணைக்குழுவை 1998 ஏப்ரலில் நியமித்தார்.

எனினும் எந்த முன்னைய ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்படாத கிட்டத்தட்ட மேலும் 16,000 காணாமற் போதல் விடயங்களை அனைத்திலங்கை ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தற்போது இந்த விடயங்கள் பற்றி விசாரணை செய்யப்பட்டு, விவரங்கள் அவ்வாணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென விரும்பிய போதிலும் அவ்வாணைக்குழுவின் பொறுப்பாணை அவற்றை இவ்வாணைக்குழு விசாரணை செய்வதை தடைசெய்துள்ளது. இதன்படி இந்த விடயங்கள் இன்று வரை பிற எந்த விசாரணை ஆணைக்குழுவினாலும் விசாரணை செய்யப்படவில்லை. அனைத்திலங்கை ஆணைக்குழுவானது தனது அறிக்கையை 2000 ஒகஸ்டில் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது. ஆனால் இந்த அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

3.3. சட்டத்துறை அதிபதி திணைக்களத்தின் காணாமல் போகும் ஆட்கள் பிரிவு (MPU)

பிற விடயங்களுக்கிடையே வலய ஆணைக்குழுக்கள் காணாமல் போதல்களுக்கு பொறுப்பாகவுள்ள ஆட்களை சுட்டிக்காட்டுகின்ற ஆணைக்குழுக்களினால் வெளிக்கொணரப்படும் சான்றுகளை ஆய்வு செய்வதற்கும் அத்தகைய ஆட்கள் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் சட்டத்துறை அதிபதி திணைக்களத்தில் ஒரு விசேட பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக 1998 ஜூலையில் இப்பணிகளுடன் சட்டத்துறை அதிபதி திணைக்களத்தில் ஒரு காணாமல் போகும் ஆட்கள் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது பொறுப்பிற்கான வெளிப்படைச் சான்று கிடைக்கக்கூடியதாக விருந்த வலய ஆணைக்குழுக்களினால் விசாரணை செய்யப்பட்ட 3,000 விடயங்களைப் பரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. இப்பிரிவுக்கு ஒரு சிரேஷ்ட அரச சட்டவாதி தலைமை வகித்ததுடன் இப்பிரிவு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஐந்து சட்டத்தரணிகளைக் கொண்டிருந்தது. இது சட்டத்துறை அதிபதியினதும் இத்திணைக்களத்தின் குற்றவியல் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலினதும் நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ளது. இப் பிரிவுக்கு மூன்று அரச சட்டவாதிகள் உதவி புரிகின்றனர்.

காணாமல் போகும் ஆட்கள் பிரிவு விடயங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது. மேல் நீதிமன்றத்தில் நேரடியாக வழக்குத் தாக்கல் செய்யப்படக்கூடிய குற்றப் பகிர்வுகளைக் கொண்ட விடயங்கள்: சான்றுகளைப் பலப்படுத்துவதற்கு விசாரணைகள் தேவைப்படும் விடயங்கள், நியாயமான அளவில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் நிலைநாட்டப்படுவதற்கு போதாத சான்றுகளை உடையவை. ஆனால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை ஆரம்பிப்பதற்குப் போதுமான சான்றுகளை உடையவைகளுமான விடயங்கள்.

ஆட்கள் காணாமல் போதல் பிரிவு 500 பொலிஸ், படைகளின் ஆளணியினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. ஆனால் இந்த வழக்குகள் முடிவடைவதற்கு பல ஆண்டுகள் பிடிக்கும் எனினும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் (Provision of the Establishment Code) சேவையிலிருந்து இந்த உத்தியோகத்தர்கள் தினைக்களத் தலைவர்களினால் இடைநிறுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைப் பணிப்புறுத்துகின்ற போதிலும் பொலிசாரினாலோ அல்லது தரைப்படை தலைமையகத்தினாலோ அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும் சில வர்த்தமானிப்படுத்திய உத்தியோகத்தர்களின் 14 தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவானது பொலிசாரோ அல்லது தரைப்படை தலைமையகமோ சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களைச் சமர்ப்பிக்காததன் காரணமாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்பதை இக்கட்டுரையை எழுதுபவரினால் மேற்கொள்ளப்பட்ட விசேடமான விசாரணைகள் தெரிவித்துள்ளன. இதன் விளைவாக இந்த ஆளணியினர்கள் சேவையில் தொடர்ந்திருக்கின்ற வேளையில் அவர்களுடைய வழக்குகள் நீதிமன்றங்களில் தீர்ப்பிற்காக காத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வழக்குகளில் எந்த வழக்காவது தீர்ப்பொனறு வழங்கப்படும் நிலையை அடையுமா என்பது பற்றி இனிமேல் காணவேண்டிய நிலையுள்ளது.

சட்ட நடவடிக்கையானது, ஆட்கடத்தலுக்கான பொறுப்பிற்கான நேரடிச்சான்று ஏற்கனவே இருந்த விடயங்களில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சூழ்நிலைச் சான்றுகள் கிடைக்கக் கூடியதாகவிருந்த விடயங்களில் அவற்றுக்கு வழக்கு தொடருனரினால் பெருமளவு முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்பதற்காக அவை இன்னும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இலங்கையின் தண்டனை விதிக் கோவையின் கீழ் காணாமற் போதல்களை ஏற்படுத்துவது ஒரு தண்டனைக்கு உரிய தவறு அன்று என்பது கவனிக்கப்பட வேண்டும். இதன்படி காணாமற் போதல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக சார்த்தப்படக்கூடிய மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டு கொலை செய்யும் நோக்கத்துடன் செய்யப்படும் ஆட்கடத்தலாகும். அநேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற் போதல் விடயங்களில் சடலங்கள் காணப்படாமலிருப்பதால் கொலைக் குற்றச்சாட்டை நிலை நிறுத்துவது மிகவும் கஷ்டமான விடயமாகும்.

இதுவரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் அநேகமானவை கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக செய்யப்பட்ட வழக்குகளாகும். இது பொலிஸ் திணைக்களத்திற்குள் உள்ள காணாமற் போதல்கள் பிரிவு (கீழே பார்க்கவும்) சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் தொடர்பிலான கோப்புக்களை, தமது விசாரணைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டு காணாமற் போகும் ஆட்கள் பிரிவுக்கு அனுப்பாமல் விடுவதன் நிமித்தம் ஏற்படுகின்றது. இந்நிலையில் காணாமல் போகும் ஆட்கள் பிரிவு இந்த வழக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதை துரிதப்படுத்த முடியாத நிலையிலுள்ளது. பொலிஸ் திணைக்களத்தின் பங்கிலான "தாமதங்கள்" சகோதரத்துவக் கருத்துக்களின் விளைவினால் ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது சகோதர உத்தியோகத்தர்களை விசேடமாக, சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் கனிஷ்ட உத்தியோகத்தர்களின் பெயரில் புலனாய்வாளர்களை காப்பாற்றுவதற்கு வழிவகுக்கிறது.

இலஞ்ச ஆணைக்கழுவின் மாதிரியமைப்பில் ஒரு விசேட பிரிவும் வழக்குத் தொடருனருக்கு அலுவலகமும் ஸ்தாபிக்கப்படல் இப்பிரச்சினையை வெற்றிகொள்வதற்கு உதவுமென யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த யோசனை பாரதூரமான கவனத்திற் கொள்ளப்படவில்லை.

3.4 பொலிஸ் திணைக்களத்தின் காணாமற் போதல்கள் விசாரணைப் பிரிவு

சட்டத்துறை அதிபதி திணைக்களத்தில் காணாமல் போகும் ஆட்கள் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதன் விளைவாக மேலும் விசாரணை மேற்கொள்ளப்படுவதன் பொருட்டு பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்படும் விடயங்களை பிரத்தியேகமாக மேலும் விசாரணை செய்வதன் பொருட்டு பொலிஸ் திணைக்களத்தில் ஒரு விசேட பிரிவு ஸ்தாபிக்கப்படுதல் அவசியமாகியுள்ளது. இப்பிரிவு அதாவது காணாமல் போதல்கள் விசாரணைப் பிரிவானது இளைப்பாறிய ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரைத் தலைவராகக் கொண்டு 1997ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விசாரணை ஆணைக்குழுக்களின் முன் வழங்கப்படும் சான்று நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதால் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு மன்னர் வழக்கமான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுதல் அவசியமானதாகும். இதன்படி காணாமல் போகும் ஆட்கள் பிரிவானது பொலிஸ் மா அதிபருக்கு, ஆட்கள் காணாமல் போதல்களை ஏற்படுத்தியமைக்கு நேரடிச் சான்றுகளையுடைய விடயங்களை பொலிஸ் உத்தியோகத்தர்களினால் புதிதாக சான்றுகளின் கூற்றுக்கள் பதிவு செய்யப்படுவதற்காக அனுப்பப்படுகின்றது. இதன் விளைவாக விசாரணை ஆணைக்குழுவின் முன் வைக்கப்படும் சான்றுகள் காணாமல் போதல்கள் விசாரணைப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மீளப் பதிவு செய்யப்பட வேண்டும். இப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தப்பட்ட சான்றை அவர்களுடைய விசாரணைகளுக்கான அடிப்படையாக உபயோகிப்பர். 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் விசாரணைக்காக காணாமற் போதல்கள் விசாரணைப் பிரிவுக்கு (Dissappearances Investigation Unit) அத்தகைய 2,796 விடயங்களை அனுப்பியுள்ளனர்.

காணாமற் போதல்கள் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒரு சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்கள் (ASP), 18 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் 21 பொலிஸ் சாரதிகள் பதவிகளைக் கொண்டுள்ளது. விசாரணை குழு ஒவ்வொன்றுக்கும் அத்தியட்சகர் ஒருவர் தலைமை தாங்குகின்ற வேளையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் ஐந்து குழுக்களை மேற்பார்வை செய்கின்றார்.

எனினும் இக்குழுக்கள் மிகவும் மெதுவாகவே செயற்படுகின்றன. இது விசாரணை செய்யும் காணாமற் போதல்கள் விசாரணைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் விசாரணையின் கீழுள்ள தங்களுடைய சகபாடிகளின் மீது அனுதாபம் காட்டுதல் மற்றும் இந்த வழக்குத் தொடுப்புக்கள் வெற்றியடைவதைக் காண்பதில் சிறிய அளவிலேயே அரசியல் விருப்பம் தெரிவிக்கப்படுகின்றமை ஆகியவற்றின் காரணத்தினாலிருக்கலாம். இப்பிரிவுக்கு பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் ஆணைக்குழுக்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட சில சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்க முயன்றார். ஆனால் பொலிஸ் திணைக்களத்துடன் இவ்விடயத்தில் அவர் பிரச்சினைகளை எதிர் நோக்கியதுடன் விசாரணைகளைத் தாமதப் படுத்தும்படி பிரயோகிக்கப்பட அழுத்தத்தையும் அனுபவித்துள்ளார்.

3.5 மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC)

1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது (HRC- Human Rights Commission) உருவாக்கப்பட்டது. அது 1997ஆம் ஆண்டில் தொழிற்படத் தொடங்கியது. பிற அதிகாரங்களுக்கிடையே காணாமல் போதல்களைத் தடை செய்வது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பொலிசாரினால் அல்லது பாதுகாப்புப் படையினரால் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களின் நலன்களைக் கண்காணிக்க முடியும். இப்பணியினை 1998ஆம் ஆண்டில் கலைக்கப்பட்ட மனித உரிமைகள் சிறப்புப் பணியணியிடமிருந்து (HRTF) மனித உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழு அது உருவாக்கப்பட்ட பொழுது தனதாக்கிக் கொண்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு தனக்குக் கிடைக்கும் புகார்களின் மீது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் அந்த நபரைச் சந்திக்க முடியும். தடுத்து வைத்திருக்கப்படுபவரின் இடம் தெரியாமலும், கைது செய்யப்பட்டதற்கான சான்று இருக்குமிடத்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு கைது செய்யும் அதிகாரியிடம் அவர் தடுத்து வைத்திருக்கப்படும் இடத்தை, ஆணைக்குழுவானது அங்கு விஜயம் செய்து அவருடைய நலனைக் கவனிப்பதன் பொருட்டு கூறுமாறு கேட்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

தடுத்து வைத்திருக்கப்படுபவர்களைச் சென்று சந்திப்பதற்கு அமைப்பொன்று இருப்பது சித்திரவதைக்கும் காணாமற் போதல் இடம் பெறுவதற்கும் எதிரான ஒரு முக்கியமான காப்பீடாகும். எனினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது போதியளவு ஆளணியினர்களைக் கொண்டிராததன் காரணமாக இச்சிறப்புப் பணியை போதியளவு நிறைவேற்ற முடியாத நிலையிலிருந்தது. மேலும் சட்டமானது கட்டுபடுத்தும் தீர்மானங்களை வழங்குவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரத்தை வழங்கவில்லை. அது சிபார்சுகளை மட்டுமே செய்ய முடியும். அத்தகைய சிபார்சுகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் அவ்விடயங்கள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியானவர் அந்த அறிக்கையைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கலாம். எனினும் இந்த நடைமுறை இதுவரை பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவை "பற்கள் இல்லாத சிங்கம்" (Lion without teeth) என சில மனித உரிமைகள் செயற்படுநர்கள் கண்டனம் செய்துள்ளனர். அது அபிலாசையுடன் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் நம்பிக்கைகளைப் பூர்த்தி செய்யவில்லை. தடுத்து வைக்கப்படுபவர்களின் உரிமைகளை மீறுவதை நோக்கமாகக் கொண்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கவனிக்காமல் தங்களுடைய மீறுகைகளைச் செய்யமுடியும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2000ஆம் ஆண்டில் தான் பெற்றுக் கொண்ட காணாமற் போதல்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை வழங்க முடியாத நிலையிலிருந்தது. இலங்கையின் ஆட்கள் கணாமற் போதல்களின் பயங்கரமான சாதனையைப் பார்க்குமிடத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவானது "காணப்படாத மக்கள்" பற்றிய அறிக்கைகளுக்கும் கட்டுக்காப்பிலிருந்த போது காணாமல் போயிருக்கக்கூடிய மனிதர்கள் பற்றிய அறிக்கைகளுக்குமிடையேயுள்ள வித்தியாசங்களை தனது பதிவேடுகளில் பிரித்தறியத் தவறுகின்றமை ஆச்சரியகரமானதாகும். இக்கோரிக்கைக்கு அனுசரணையாக மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2000ஆம் ஆண்டில் 1,146 ஆட்களை கண்டுபிடித்துள்ளனர். எனினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது எஞ்சியுள்ள 234 நபர்களையும் காணாமல் போனவர்கள் என வகைப்படுத்தலாமா என்பதைப் பற்றிக் கூற முடியாத நிலையிலிருந்தது. விடையொன்றைப் பெறுவதற்காக திரும்பத் திரும்ப விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு மனித உரிமைகள் ஆணைக்கழுவிடமிருந்து அனுசரணை எதுவும் கிடைக்கவில்லை. அத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட 912 ஆட்களில் எவரும் அறிவிக்கப்படாது தடுத்து வைத்தல் காலப்பகுதி அனுபவத்தைப் பெற்றிருந்தாராவென்பது பற்றியும் அவர்களுடைய பதிவேடுகளிலிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குறைபாடுகளுக்கு அதை மட்டும் குறை கூற முடியாது. மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஒரு சுதந்திரமான அமைப்பாகத் தொழிற்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது நடைமுறையில் ஜனாதிபதி செயலகத்தில் ஓர் இணைப்பாகத் தொடர்ந்து தொழிற்படுகின்றதுடன் அதற்குப் போதியளவு வளங்களும் வழங்கப்படவில்லை. உதாரணமாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பதவியணி ஏற்பாடுகளுக்கும் பிற தேவைப்பாடுகளுக்கும் ஜனாதிபதி செயலகத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியுள்ளது. சிறிது காலத்திற்கு முன்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செலவினத்தைக் குறைப்பதன் பொருட்டு அதன் சில கிளை அலுவலகங்களை மூடுமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் பணிப்பொன்று விடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஓர் உண்மையான சுதந்திரமான அமைப்பாக உருவாக்கப்பட்டிருந்தால் அது இப்போதிருப்பதைவிட மிகவும் பயனுள்ளதாகவிருந்திருக்கும். உண்மையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டமானது இதன் பிரகாரம் திருத்தப்படல் வேண்டும்.

3.6 தொல்லை தவிர்ப்புக் குழு

பாதுகாப்புப் படையினராலும் பொலிசாரினாலும் கொழும்பில் மேற்கொள்ளப்படும் தமிழ் மக்களின் சட்டவிரோதமான கைதுகள், தடுத்து வைத்தல் தொடர்பில் ஜனாதிபதிக்குச் செய்யப்பட்ட அநேக முறைப்பாடுகளைத் தொடர்ந்து கலாசார அலுவல்கள் அமைச்சரின் தலைமையில் 1998 ஜூலை மாதத்தில் அமைச்சர்களையும், சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட விசேட ஜனாதிபதி குழுவொன்று நியமிக்கப்பட்டது. முதலில் அது தொல்லை தவிர்ப்புக் குழுவென (Anti Harassment Committee) அழைக்கப்பட்டது. பின்பு அதன் பெயர் முறையற்ற கைதுகள், தொல்லைகள் பற்றி விசாரணை செய்வதற்கான குழு (The Committee of Inquiry into Undue Arrests and Harassments) என மாற்றப்பட்டது. இக்குழுவின் பணிகள் நிவாரணம் வழங்கப்படுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதன் பொருட்டு சட்டவிரோத கைதுகள் அல்லது தடுத்து வைத்தல்கள் அல்லது தொல்லைகள் பற்றிய முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்வதாகவிருந்தது. இக்குழுவிற்கு நீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் பொதுமக்கள் முறைப்பாடுகள் பிரிவினால் சேவை வழங்கப்பட்டது. இப்பிரிவு நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக இக்குழுவிற்கு உரிய முறைப்பாடுகளை அனுப்பிக் கொண்டிருந்தது. ஜனாதிபதிக்கு வாராந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துக் கட்டுக்காப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்களின் உரிமைகள் மீறப்படுவதை தடுப்பதற்கு உதவ வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இக்குழுவானது ஏழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதுடன் இவர்களில் சிலர் அமைச்சரவை உறுப்பினர்களுமாவர். இக்குழுவிற்கு முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு மட்டுமன்றி எந்தச் சட்டவிரோதமான கைது அல்லது தகாத தொல்லை தொடர்பில் படைகளின் எந்த தலைவருக்கும் பொலிசாருக்கும் பொருத்தமான பணிப்புகளை விடுவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. வரைவிலக்கணத்தின்படி ஆட்கள் காணாமல் போதல் விடயம் ஒவ்வொன்றும் தரைப்படையினால் அல்லது பொலிசாரினால் அல்லது பிற ஒருவரினால் கைது செய்தல் அல்லது கட்டுக்காப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் விடயத்தில் முந்தப்படுவதன் காரணமாக இக்குழுவானது காணாமற் போதல்களைச் செவ்வை பார்ப்பதில் மறைமுகமாக முக்கியமான பங்கினை வகிக்கின்றது. எனினும் அனத்து பயனுறுதியும் கேள்விக்குரியதாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் பகுதியளவில் இக்குழுவை கொழும்பிற்கு வெளியே வாழ்கின்றவர்களினால் சந்திக்க முடியாதென்பதனாலும் பகுதியளவில் கொழும்பிற்குள் கூட பலருக்கு இக்குழு பற்றி போதியளவில் பிரசித்தப்படுத்தல் செய்யப்படாததன் நிமித்தம் இக்குழு இருப்பது பற்றி தெரியாமலுள்ளது.

இக்குழுவின் பணிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகளுடன் மேற்படிகின்றமை மற்றுமொரு பிரச்சினையாகவுள்ளது. இந்த விடயங்கள் பற்றி அறிந்துள்ள மக்கள் இக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதை விட மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய முற்படுவர். ஏனெனில் இக்குழுவின் அதிகாரங்கள் மனித உரிமைகள் ஆணைக்கழுவின் அதிகாரங்களை விட ஒப்பீட்டளவில் கூடுதலானவை என்பதனாலாகும்.

3.7 யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த ஆட்களின் காணாமல் போதல் சம்பவங்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைச் சபை

1996ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு பெருந்தொகையான மக்கள் சென்றுள்ள வேளையில் அரசாங்க படைகள் எல்.ரீ.ரீ.ஈ.யிடமிருந்து யாழ்ப்பாணத்தின் கட்டுப்பாட்டை மீளப் பெறும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. குடாநாட்டை பாதுகாப்புப் படையினர் மீட்டெடுத்ததன் பின்னர் மக்களில் அநேகர் திரும்பி வந்தனர். ஆனால் யாழ்ப்பாண நகரின் தளபதி மேஜர் ஜெனரல் கெப்பன்கம மீது 1996 ஜூலையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் கட்டுக்காப்பிலிருந்த இளைஞர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கின. இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ 600 பேர்கள் காணாமற் போனதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்குமாறும், அந் நிகழ்விற்கு காரணம் காட்டுமாறும் கணிசமான அளவில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டபோது, அரசாங்கமானது இந்த முறைப்பாடுகள் பற்றி விசாரணை மேற்கொள்ளுவதற்கு 1997 ஆம் ஆண்டில் விசாரணைச் சபையொன்றை நியமித்தது. எனினும் இச்சபையானது பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தமையினால் அது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய நம்பிக்கையைப் பெறத் தவறிவிட்டது. இச்சபையானது உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள பலாலி தரைப்படை முகாமிற்குள் தனது விசாரணைகளை மேற்கொண்டதன் காரணமாக முறைப்பாட்டாளர்களில் அநேகர் விசாரணைகளுக்குச் சமூகமளிக்கவில்லை. இச்சபையானது 1998 ஆம் ஆண்டில் தனது அமர்வுகளைப் பூர்த்தி செய்துள்ளது, ஆனால் ஜனாதிபதிக்கான அதன் அறிக்கை இன்று வரை வெளியிடப்படவில்லை.

4. காணாமற் போதல்களுக்கு வசதியளிக்கும் காரணிகள்

காணாமற் போதல்களின் நிகழ்விற்கு சில முக்கிய காரணிகள் வசதியளிக்கின்றன. இவை பயங்கரவாத தடைச்சட்டம் (PTA), அவசரகால ஒழுங்கு விதிகளின் (நுசுள) கீழ் பொலிசாருக்கும், பாதுகாப்புப் படையினர்களுக்கும் கிடைக்கக் கூடியதாகவுள்ள விரிவான அதிகாரங்கள், தாங்கள் காரணம் காட்டுமாறு எப்பொழுதும் அழைக்கப்படமாட்டோம் என அக்கிரமம் செய்வோர்கள் நம்புவதை இயலுமாக்குகின்ற, நிலவுகின்ற தண்டனை பெறுவதிலிருந்து நீக்குகை நிலையையும் உள்ளடங்குகின்றன.

அவசரகால ஒழுங்கு விதிகளின் பொருளடக்கம் ஆண்டுகளின் போக்கில் திரும்பத் திரும்ப மாற்றப்பட்டுள்ளது. சில சமயங்களில் ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்படும் கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்குமான அதிகாரங்கள் மற்றைய சமயங்களில் இருக்கின்ற அதிகாரங்களைவிட பரந்தவைகளாக விருப்பதுடன் கடந்த காலங்களில் சில சமயங்களில் பாதுகாப்பு படையினர்களுக்கு சடலங்களை பிரேத பரிசோதனையோ அல்லது விசாரணையோ செய்யாமல் அகற்றுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவை 2000 ஆம் ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட புதிய அவசரகால விதிகள் மீதான அத்தியாயத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. 1980ஆம் ஆண்டில் இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வசேத சமவாயத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளை பெருமளவில் விஞ்சி ஆட்களைக் கைது செய்வதற்கும் தடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதற்குமென அதிகாரங்களை அவை வழங்குகின்றன என்பதை இங்கு கூறுவது போதுமானதாகும். ஆட்கள் காணாமற் போதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுக்கள் அவசரகால ஒழுங்கு விதிகளான பலாத்காரமான காணாமற் போதல்கள் மற்றும் தன்னிச்சையில்லாத காணாமற் போதல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் பணிக்குழு போன்ற சர்வதேச அமைப்புக்களினால் செய்யப்பட்டது போல திருத்தப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளன. எனினும் 2000ஆம் ஆண்டு மே மாதத்தில் தன்னிச்யாக கைது செய்யப்படுவதற்கும் தடுத்து வைக்கப்படுபவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் எதிரான காப்பீடுகளை பலவீனப்படுத்துவதற்காக ஒழுங்கு விதிகள் மாற்றப்பட்டுள்ளன. இந்த மாற்றம் ஜனாதிபதியினால் பொலிசாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் கைதுசெய்தல் மற்றும் தடுத்துவைத்தல் நடைமுறைகள் மீது விடுக்கப்பட்ட 1997ஆம் ஆண்டின் பணிப்புரைகளுடன் எவ்வித தொடர்புமின்றி இடம்பெற்றுள்ளது. இவை எப்படியிருந்த போதிலும் நடைமுறையில் பெருமளவிற்கு ஒருவேளை கடைப்பிடிக்கப்படாமைக்கு பகுதியளவில் சட்டவலுவளிப்புக்கள் எதுவும் இல்லாமலிருந்ததன் நிமித்தம் பெருமளவிற்கு அசட்டை செய்யப்பட்டிருந்தது.

தொடருகின்ற தண்டனையினின்றும் நீக்குகை நிலைமை தொடர்பில் அரசாங்கமானது ஆட்கள் காணாமற் போதல்களை மேற்கொள்ளுகின்ற அக்கிரமக்காரர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்துவற்கு போதியளவு தீர்மானத்தை எடுக்கவில்லையெனத் தோன்றுகின்றது. விசாரணை ஆணைக்குழுக்கள் பொதுமக்களுக்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சமூகத்திற்கும் எதிர்ப்பை தவிர்ப்பதற்கான முயற்சி போலத் தோன்றுகின்றது. இந்த உருப்படியான மனித உரிகைமளின் மீறுகைகளுக்கு பரிகாரம் வழங்கவதற்கு தோற்றத்தை இவ்வாணைக்குழுக்கள் வழங்கியுள்ளன. எனினும் நடைமுறையில் இவற்றினதும், பிற மனித உரிமைகள் அமைப்புக்களினதும் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது தண்டனையினின்று நீக்குகை சட்டம் உடைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கோ போதியளவு விருப்பம் இருக்கவில்லை.

சட்டத்துறை அதிபதி திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட காணாமல் போகும் ஆட்கள் பிரிவு பொலிஸ் திணைக்களத்தின் காணாமல் போதல்கள் விசாரணைப் பிரிவினால் வழங்கப்படும் உதவியில் தங்கியுள்ளது. காணாமல் போகும் ஆட்கள் பிரிவுதான் மேலும் விசாரணைகளை நடாத்தி சாட்சிகளின் சான்றுகளை பதிவு செய்து நீதிமன்றத்தில் தீர்ப்புக்களைப் பெறுவதற்குத் தேவைப்படும் சான்றுகளின் தொடரிலுள்ள தொய்வுப் பகுதிகளை நேராக்கிக் கட்டிவைத்தல் வேண்டும். எனினும் காணாமல் போதல்கள் விசாரணைப் பிரிவு மிகவும் மெதுவாகப் பணியாற்றுவதன் காரணத்தால் காணாமற் போகும் ஆட்களின் பிரிவு பல விடயங்களில் முன்னேறிச்செல்ல முடியாத நிலையிலுள்ளது. காணாமற் போதல்களை விசாரணை செய்யும் பிரிவினால் செய்து முடித்த காணாமற் போகும் ஆட்கள் பிரிவுக்கு அனுப்பப்படும் சில கோப்புக்கள் கனிஷ்ட ஆளணியினர்கள் சம்பந்தப்பட்டவைகளாக மட்டுமேயிருக்கின்றன.

நீதி வழங்கப்படுமென்பதை உறுதிப்படுத்துவதற்கான அரசியல் விருப்பம் போதுமானவைகளாக இருக்கக் கூடிய விடயங்களும் தீவிர உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களின் மையக் குவிவாக காணப்பட்டன. அப்படியிருந்த போதிலும் கூட இவற்றில் மிகச் சில விடயங்கள் மட்டும் தான் வெற்றிகரமான வழக்குத் தொடரலில் ஈடுபடுத்தப்பட்டன. கவனித்துக் கொள்ளப்படத்தக்க உதாரணம். 1989ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எம்பிலிப்பிட்டியவில் காணாமல் போன பாடசாலை மாணவர்களின் விடயமாகும். இவ்விடயத்தில் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. எம்பிலிபிட்டிய காணாமற் போதல்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் பரந்த அளவில் பொதுமக்களினாலும் காணாமற் போனவர்களின் பெற்றோர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட அகல்விரிவானதுமான நீண்ட தவணைக்கால பிரசாரத்தின் விடயமாகவிருந்தது. தெற்கு வலயக் காணாமற் போதல்கள் ஆணைக்குழுவானது இந்த காணாமல் போதல்களை பற்றி விசேட அறிக்கை ஒன்றை தயாரித்து சட்ட நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படுவதற்கு வசதியளித்த பெருமளவு தகவல்களை அகழ்ந்டுத்துள்ளது. ஆரம்பிக்கப்பட்ட பிற காணாமற் போதல்கள் விடயங்களிலான வழக்குத் தொடரல்கள் நத்தை வேகத்திலேயே நடைபெற்றதுடன் மனப்பூர்வமான ஆர்வத்துடன் தொடரப்படவில்லை. எனவே அந்த வழக்குகள் தீர்ப்புகளில் முடிவடைவது பெருமளவில் நம்பமுடியாத நிலையிலுள்ளது. எனினும் துரிதமானதும் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாகவுள்ளதுமான தண்டனை நடவடிக்கையில்லாமல் இத்தகைய மீறுகைகளை முடிவு கட்டமுடியாது.

இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவையானது (Establishment code) பொலிசாரையும் பாதுகாப்பு ஆளணியினர்களையும் உள்ளடக்கி அரசாங்கத்தினால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் சம்பந்தப்பட்ட சகல விடயங்களின் தொடர்பிலும் நடைமுறைவிதிகளை விதிக்கின்றது. இந்த விதிக்கோவையின் ஓடு VIII ஆம் அத்தியாயத்தின் 21ஆம் பிரிவு குற்றவியல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் அல்லது குற்றச்சாட்டுக்கள் மீது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவிருந்தால் கோவையிலிருந்து அரசாங்கத்தின் பணியாளரொருவரை இடைநிறுத்துவதற்கு ஏற்பாடு வழங்குகின்றது என்பதுடன் இக்குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவரை வேலையிலிருந்து நீக்களு செய்வதற்கு அந்த நிருபணம் போதியளவிலான அதிகாரத்தை வழங்குகின்றது. எனினும் விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் நீதிமன்ற வழக்ககள் தொடரப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் எவரும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தாபன விதிக் கோவையினால் வேண்டப்படுவதன்படி அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவோ இல்லை. இத்தவறுகை வழக்குகள் எவ்வண்ணம் நடத்தப்படுகின்றன என்ற முறை மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்கும். இது ஏனெனில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் இன்னும் சேவையிலிருப்பதும், சிலவேளை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்களாக இருப்பதும் காரணமாக வழக்குகள் தொடர்பாக நீதி மன்றங்களில் சான்று வழங்கத் தயங்குகிறார்கள். சாட்சிகள் பயமுறுத்தப்பட்ட ஆகக் குறைந்தது இரண்டு வழக்குகளேனும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதிக்கும் சட்டத்துறை அதிபதிக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் விளைவாக சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காணாமற் போதல்கள் ஆணைக்குழுக்களின் கோரிக்கையின் மீது 1988.01.01 ஆம் திகதி தொடக்கம் இன்று வரைப்பட்ட காலப்பகுதியை உள்ளடக்கி ஆட்களின் கைது, தடுத்துவைத்தல் சம்பந்தப்பட்ட தொலைபேசி இடாப்புக்களையம், கைதிகளின் தடுத்து வைத்தல் இடாப்புக்களையும், பிற ஆவணங்களையும் (காணாமற் போதல்கள் மீதான) ஆணைக்குழுக்கள் தங்களுடைய சிறப்புப் பணிகளை பூர்த்தி செய்யும் வரை பேணி வைக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும், பொலிஸ் மா அதிபரினால் குறித்த பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

எனினும் விசாரணை ஆணைக்குழுக்கள் அத்தகைய புத்தகங்கள் காணாமற் போணவர்களின் கட்டுக்காப்பிற்கு பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தரை அல்லது காணாமற் போன ஆளுடன் கடைசியாக காணப்பட்ட உத்தியோகத்தரை சிக்கலில் மாட்டிவிடக்கூடிய சான்றுகளை இல்லாமற் செய்வதன் பொருட்டு வேண்டுமென்றே அழிக்கப்பட்டுள்ளன. இந்த முழுமையான கீழ்ப்படியாமைச் செயற்பாட்டிற்காக பொலிஸ் நிலையங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு எதிராக அப்போதைய பொலிஸ் மாஅதிபரோ அல்லது தற்போதைய பொலிஸ் மாஅதிபரோ நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இதன்படி தண்டனைக்கு நீங்குகை பொலிஸ் மா அதிபரினாலும் கூட மன்னிக்கப்படுவதாக தோன்றுகின்றது.

மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் அக்கிரமக்காரர்களை நீதிக்கு முன் கொண்டு வந்து நிறுத்துவதற்கு இயைபுள்ள அதிகாரிகள் தவறியுள்ள அநேக உதாரணங்கள் உண்டு. மத்திய வலயத்தை உள்ளடக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றின் இடைக்கால அறிக்கை ஏஜஜ இல் உள்ள இவ்வாணைக்குழுவின் முன் சான்று வழங்கிய சாட்சியொருவரைக் கொல்லப் போவதாக அச்சுறுத்திய உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளரொருவரை உடனடியாக வேலையிலிருந்து இடைநிறுத்துமாறு செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சிபாரிசு கூட கடைப்பிடிக்கப்படவில்லை. இச்சாட்சி இன்னும் ஒளிந்து கொண்டிருப்பதாகக் கூறப்படும் அதே வேளையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சேவையிலிருப்பதன் நிமித்தம் கிடைக்கும் பதவியுயர்வுகளையும் பிற நலன்களையும் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஓர் ஆணைக்குழுவினால் குறித்த சிபாரிசு ஒன்று செய்யப்பட்டுள்ள போதிலும் அத்தகைய குற்றவாளியொருவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனபடியால் தங்களுடைய செயற்பாடுகள் மீது விதிக்கப்படும் எந்தக் கட்டுப்பாடுகளையும் பொலிசாரும் பாதுகாப்புப் படையினர்களும் தொடர்ந்தும் அலட்சியப் படுத்துவதும் அவர்கள் தண்டனை நீங்குகையுடன் ஆட்களின் உரிமைகளை மீறுவதும் ஆச்சரியப்படத்தக்க விடயமன்று.

5. ஆட்கொணர் எழுத்தாணை

கட்டுக்காப்பில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்பட்டு சட்டவிரோதமாக அல்லது எந்தவிதத் தகவலும் தரப்படாமல் தடுத்திருக்கப்படும் விடயத்தில் ஓர் ஆட்கொணர் எழுத்தாணையைப் (Writ of Habeas Corpus) பெறுவதற்கான உரிமை இருப்பது கட்டுக்காப்பிற்குள் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒருவர் காணாமற்போகச் செய்யப்படுதலைத் தடுப்பதற்கான ஒரு முக்கியமான வழிவகையாகும். தொடக்கத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மட்டுமே ஆட்கொணர் எழுத்தாணை விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கும் அவற்றைப் பற்றி விசாரணை செய்வதற்கும் நியாயாதிக்கம் இருந்த போதிலும் இது பின்னர் மாகாண மேல் நீதிமன்றங்களுக்கும் நீடிக்கப்பட்டது. எனினும் கிழக்கு மாகாணத்தில் மேல் நீதிமன்றம் மட்டுமே இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது. இருப்பிடங்கள் தெரியாமலிருந்த அல்லது சட்டவிரோதமான தடுப்பின் கீழ் வைக்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆட்களின் தொடர்பில் 1988 ஆம் ஆண்டிற்கும், 1997ஆம் ஆண்டிற்குமிடையே தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர் எழுத்தாணை விண்ணப்பங்கள் பற்றிய ஆய்வின்படி அக்காலப் பகுதியில் தாக்கல் செய்ப்பட்ட 2925 வழக்குகளில் 272 வழக்குகள் 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முடிவுறுத்தப்படவில்லை. முடிவுறுத்தப்பட்ட வழக்குகளில் அநேகமானவைகளை முடிவுறுத்துவதற்கு ஐந்து ஆண்டு காலம் பிடித்துள்ளது.

தூரதிஷ்டவசமாக இந்த பரிகாரம் நீண்டகால நேரத்தை பிடிப்பதாகவும், செலவு அதிகமானதாகவுமுள்ளது. எனவே இத்தன்மை வாய்ந்த எழுத்தாணையின் சுலபமான அணுகுகையும் விளைபயனும் கேள்விக்குரியதாகும்.

ஆட்கொணர் எழுத்தாணை விண்ணப்பங்களை கூடியளவில் பயனுள்ளவைகளாகவும் சுலபமாக அணுகக்கூடியவைகளாகவும் ஆக்குவதன் பொருட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதவான நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது நீதவான்கள் மனுக்களைப் பெற்றுக் கொள்ளுவதையும், குற்றம் சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட இடங்களுக்குச் செல்வதையும், தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதன் பொருட்டு சான்றுகளைப் பதிவு செய்வதையும் அவதானிப்புகளை மேல் நீதிமன்றத்திற்கு துரிதமாக சமர்ப்பிப்பதையும் இயலச் செய்வதன் பொருட்டு விரிவாக்கப்பட வேண்டும். இக்காலப்குதிவரை ஆட்கொணர் விண்ணப்பமொன்றிலிருந்து ஆட்கள் காணாமற் போதல்களை நிறுத்துதல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

6. முடிவுரை

இலங்கையில் ஆட்கள் காணாமற் போதல்களின் வீதம் உச்சநிலையை அடைந்து பத்து ஆண்டுகளுக்கு மேலான காலம் முடிவடைந்து விட்டது. ஆனால் ஆட்கள் காணாமற் போதல்களை மேற்கொள்ளும் அநேக அக்கிரமக்காரர்கள் தண்டிக்கப்படுவதற்கு நீதியின் முன் நிறுத்தப்படமாட்டார்கள் என்பது பெரும்பாலும் தெரிகின்றதுடன் ஆட்களின் காணாமற் போதல்களை செய்விக்கும் நடைமுறை தொடருமென்பதுவும் தெரிகின்றது. காணாமற் போதல்களை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று வலயக் குழுக்களும் 1997 ஆம் ஆண்டில் ஜனாதிபதியிடம் தங்களுடைய அறிக்கைகளை கையளித்துள்ளன. இந்த ஆணைக் குழுக்களினால் கண்டறியப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பது யாருக்குத் தெரியும்? அக்காலம் வரை முறைப்பாட்டாளர்களிலும் சாட்சிகளிலும் அநேகர் உயிரோடில்லாமல் இருக்கலாமென்பதுடன் இந்த வழக்குகள் தீர்ப்புகள் வழங்கப்படும் நிலையில் முடிவடைவது கூடுதலான அளவில் மங்கலாகவுள்ளது. ஆட்கள் காணாமற் போதல்களின் அனைத்திலங்கை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் 2000ஆம் ஆண்டு ஓகஸ்டில் கையளிக்கப்பட்டதுடன் அது இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஆனால் அரசாங்கமும், பிரதான எதிர்க்கட்சியும் முறையே தங்களுடைய ஆட்சிக்காலத்தில் பல்வேறு வழிகளில் நிகழ்ந்த காணாமற் போதல்களுக்கு மன்னிப்பு அளித்துள்ளன அல்லது மௌனப் பார்வையாளர்களாக இருந்துள்ளன. இதன் விளைவாக காணாமற் போதல்களை மேற்கொள்ளும் அக்கிரமக்காரர்களுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்குமாறு அழுத்தம் கொடுப்பதற்கு பாராளுமன்றத்தில் பலமான ஆதரவு இல்லாமலுள்ளது. இந்த நடைமுறையானது மிகப் பரந்தளவில் இருப்பதனாலும், அநேக மக்களை உள்ளடக்கியதாக இருப்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். தற்போதைய அரசாங்கமானது 1994 ஆம் ஆண்டில் ஆட்கள் காணாமற் போதல்களையும் ஏனைய மனித உரிமை மீறல்களையும் முடிவுறுத்துவதாக அளித்த வாக்குறுதியுடன் அதிகாரத்திற்கு வந்தது. எனினும் இன்று அது அதிகாரத்திலிருக்கும் தனது சொந்தக் காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஆட்கள் காணாமற் போதல் சம்பவங்களுக்காக குற்றஞ் சாட்டப்பட்ட நிலையிலுள்ளதுடன் அக்கிரமக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுத்து, காணாமல் போதல் நடைமுறையை நிறுத்துவதற்கு தான் உறுதியுடன் இருப்பதாகக் காண்பிக்கவில்லை. அது பேச்சுத்திறனுக்கு அப்பால் செல்வதற்கான உறுதியையும் பொறுப்பையும் கொண்டிராத நிலையிலுள்ளது.

குற்றம் புரிபவர்களுக்கு எதிராக அவர்களுடைய வரிசைப் பதவியை அல்லது அந்தஸ்தைக் கவனிக்காமல் துரிதமானதும் பயனுள்ளதுமான நடவடிக்கை எடுப்பதற்கு பதிலீட்டு நடவடிக்கை எதுவுமில்லை. இது சட்டத்திலும் நிர்வாக நடைமுறைகளிலும் நீதிமுறை அமைப்பிலும் கூட காணாமற் போதல்கள் தொடர்பிலான வழக்குகளைத் துரிதமாகத் தீர்வு செய்வதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தேவைப்படுத்தும்.

காணாமற் போதல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்கள் எதிர்காலத்தில் மேலும் காணாமற் போதல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு சட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களைப் பற்றி விவரமான சிபாரிசுகளைச் செய்தள்ளது. இச்சிபாரிசுகள் சிறப்புப் பணிக்கென பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அமைப்பொன்றினால் கவனமாகப் படிக்கப்பட்டு ஊக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இச் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இச் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் இந்த ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் பயனற்றவையாகி ஆராய்ச்சியாளர்களினதும், வரலாற்றாசிரியர்களினதும் உபயோகத்திற்கான சுவடிக்கூட ஆவணங்களாக மாறிவிடக்கூடும்.

பொதுவாக தனது தேர்தல் வாக்குறுதியைக் கௌரவித்து மனித உரிமைகள் மீறப்படுவதை இல்லாதொழிப்பதுவும் இலங்கையில் குறிப்பாக காணாமற் போதல்களை இல்லாதொழிப்பதுவும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நன்றி : சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"விடுதலையைப் பெற்றெடுக்க வேண்டப்பட்ட வழிகளில் முயற்சிக்கும்போது.... பகிர்ந்தளிக்கப்படும், பகிரப்படும் விடுதலை நோக்கத்தின் முடிவை நோக்கிய மனசாட்சியுடனான போராட்டங்கள்.... மற்றையவரின் கருத்துக்களை மதிப்பதோடு, இடமளிப்பதோடு, உயிர்களைப் பாதுகாப்பதோடு, சுத்தமான நிலையினாலே மனித உரிமைகள் மதிக்க.....? ஜனநாயகம், பன்முகத்தன்மை என்பவை உயிர்பெறும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org